

சச்சின் – டிராவிட் சாதனை தகர்ந்தது

பக்கம் 26

காலநிலை நீடிக்கும்

52 பக்கங்கள்

சுடர்: 29 கதிர்: 327 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 2, ஞாயிறு 19.10.2014

யாழ். - 30/=
வன்னி - 20/=

stay connected with: uthayan.print uthayanprint

Uthayan - A lively National Tamil Daily

பிரதேச சபை
2014
ஏழாலை

# அம்மாவுக்கு அமோக வரவேற்பு

யாழ்ப்பாணம், ஒக். 19

கடும் நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்ட தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்குச் சென்னையில் நேற்றுப் பிரமாண்டமான வரவேற்பு வழங்கப்பட்டது. கொட்டும் மழைக்கும் மத்தியிலும் திரண்ட லட்சோபலட்சம் மக்கள் பூக்களை வீசியெறிந்து ஜெயலலிதாவை வரவேற்றனர்.

சென்னை விமான நிலையத்திலிருந்து, ஜெயலலிதாவின் இல்லம் வரையிலான சுமார் 13 கிலோ மீற்றர் நீளத்துக்கும் மக்கள் மனிதச் சங்கிலிகளாக நின்று முன்னாள் முதலமைச்சரை எழுச்சியுடன் வரவேற்றனர்.

சொத்துக் குவிப்பு வழக்கில் 21நாள்களாகச் சிறைவாசம் அனுபவித்து வந்த முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, நேற்று முன்தினம் உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு அமையக் கடும் நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்டார். நேற்று முன்தினம் தீர்ப்பின் பிரதி, பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்துக்குக் கிடைக்கப் பெறாமையினால் அவர் விடுவிக்கப்படவில்லை.



இந்த நிலையில் நேற்றுக் காலை 11.20 மணிக்குப் பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்துக்கு, ஜெயலலிதாவைப் பிணையில் விடுவிக்கும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் நகல் கொடுக்கப்பட்டது. இதனை ஏற்றுக்கொண்ட

25Aஆம் பக்கம் பார்க்க

## இவ்வாண்டு மிகக்குறைந்த மழைவீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஒக். 19

கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு மிக மிகக் குறைவான மழைவீழ்ச்சியே இதுவரை பதிவாகியுள்ளதாக திருநெல்வேலி வளிமண்டலவியல் திணைக்களக் கடமை நேர அதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி வரை

25Aஆம் பக்கம் பார்க்க

## மன்னார் புதைகுழி இறுதி அறிக்கை 27 ஆம் திகதி

மன்னார், ஒக். 19

மன்னார் மனிதப் புதைகுழி தோண்டும் நடவடிக்கைகளை நிறைவு செய்வது தொடர்பிலான இறுதி அறிக்கை எதிர்வரும் 27 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

தற்போது அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக அனுராதபுரம் விஷேட சட்ட

25Aஆம் பக்கம் பார்க்க

## கஜதீபனிடம் இராணுவம் விசாரணை

யாழ்ப்பாணம், ஒக். 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனிடம் இராணுவத்தினர் நேற்று மதியம் விசாரணை நடத்தியுள்ளனர்.

ஏழாலைப் பகுதியில் உள்ள

25Aஆம் பக்கம் பார்க்க

# ரணில்-புலிகள் தொடர்பினால் நேற்று பரபரப்பு

### கொழும்பில் பல இடங்களிலும் சுவரொட்டிகள்

கொழும்பு, ஒக்ரோபர் 19

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை நீக்கத்துக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளதாக நேற்றுக் கொழும்பில் ஒட்டப்பட்ட சுவரொட்டியினால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அத்துடன் ரணிலின் ஐரோப்பிய நாடுகளுக்கான பயணம் புலிகள் மீதான தடையை நீக்குவதற்காகவே மேற்கொள்ளப்பட்டது என்று ஜனாதிபதி மஹிந்த தெரிவித்த கருத்தினால் அந்தப் பரபரப்பு மேலும் வலுவடைந்தது.

புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியமையை விமர்சித்து நேற்று



கொழும்பு நகரின் பல இடங்களிலும் புலியின் படத்துடன் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. அவற்றில் 'ஐரோப்பிய ஒன்றியம் தடையை நீக்கியது. ர்ணில் ஐரோப்பாவில் வேலையை ஆரம்பித்தார்', 'புலித் தடை நீக்கிய

25Aஆம் பக்கம் பார்க்க

## மஹிந்தவின் பணிப்புக்கும் மசியாத மின்சார சபையினர்

### வீதி விளக்குகள் இன்னும் ஒளிரவில்லை

யாழ்ப்பாணம், ஒக் 19

பிரதான வீதிகளிலுள்ள வீதி விளக்குகளுக்குரிய கட்டணம் மின்சார சபையே செலுத்த வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வைத்துப் பணித்திருந்தும், யாழ்.மாவட்டத்தில் இன்னமும் அந்தப் பணிப்புரை நடைமுறைக்கு வரவில்லை.

'இது தொடர்பிலான சுற்றறிக்கை எதுவும் எமக்கு வரவில்லை' என்று மின்சார சபையின் யாழ்.மாவட்ட உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அத்துடன் இங்கு உயர் சக்தி கொண்ட மின்குமிழ்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த 13 ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டிருந்தது. இதன் போது கிளிநொச்சி நகரில், ஏ-9 வீதியில் அமைக்கப்பட்டுள்ள வீதி விளக்குகள் ஒளிர்

25Aஆம் பக்கம் பார்க்க

## காணி அதிகாரத்தை நடைமுறைப்படுத்துக

### வடமாகாண சபையின் தீர்மானம் மஹிந்தவுக்கு

யாழ்ப்பாணம், ஒக். 19

13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைக்கு குறித்தொதுக்கப் பட்ட காணி அதிகாரத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த ஆவன செய்யவேண்டும் என்ற வடக்கு மாகாண சபையின் ஏகமனதான தீர்மானம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையில் காணி தொடர்பான விஷேட அமர்வு கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்றிருந்தது. இந்த அமர்வில், காணி அதிகாரம் தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதில், இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் உறுப்புரை

25Aஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பு வரவேற்பு

யாழ்ப்பாணம், ஒக். 19

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை நீக்கத்தை வரவேற்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

ஏனைய நாடுகளிலும் இதே போன்று தடை நீக்கம் இடம்பெற வேண்டும்

25Aஆம் பக்கம் பார்க்க

## யாழ். மாநகர சபையின் மீது வர்த்தகர் சங்கம் பாய்ச்சல்

### தற்காலிக வியாபாரிகளுக்கு அனுமதி கொடுப்பது தொடர்பில்



முற்றவெளியில் குவிந்துள்ள தெற்கு வியாபாரிகள்

யாழ்ப்பாணம்.ஒக்.19

யாழ்.மாநகர சபை தன்னுடைய சொற்ப இலாபத்துக்காகத் தென்னிலங்கை வர்த்தகர்களின் வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பண்டிகைக் காலங்களில் தாராளமாக இடமளிக்கிறது. இதனால் குடாநாட்டு வர்த்தகர்களின் வர்த்தக நடவடிக்கை கடுமையாகப் பாதிப்புற்றுள்ளதுடன் பொருளாதார ரீதியாகவும் வர்த்தகர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். வர்த்தகர் சங்கத்தின் தலைவர் இ.ஜெயசேகரம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்.வணிகர் கழகத்தில் நேற்று

25Aஆம் பக்கம் பார்க்க




## மது விற்பனைக்கு வருகிறது இறுக்கம்

### கூடவே சிகரெட் விற்பனைக்கும்

யாழ்ப்பாணம், ஒக். 19

தீபாவளிப் பண்டிகையில் இருந்து யாழ்.மாவட்டத்தில் மது மற்றும் புகைத்தல் பாவனை மற்றும் விற்பனை தொடர்பில் இறுக்கமான சட்ட நடவடிக்கைகளை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழுவினர் மேற்கொள்ளவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் மதுப்பாவனை மற்றும் புகை பொருள்களின் பாவனை அதிகரித்துள்ளதால் சமூக மற்றும் குடும்பப் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன.

இவற்றைக் கட்டுப்படுத்தும்

25Aஆம் பக்கம் பார்க்க



01 NOV 2014

# வரப் போகும் எந்தத் தேர்தலினாலும் சிறுபான்மையினர் பிரச்சினை தீராது

## அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவிப்பு

ஏறாவூர், ஒக் 19
இனி வரப்போகின்ற எந்தத் தேர்தலும் தமிழ் முஸ்லிம் மற்றும் சிறுபான்மைத் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கப் போவதில்லை என் உற்பத்தி ஊக்குவிப்பு அமைச்சர் பஷீர் சேகுதாவூத் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் அம்பாள் மணி மண்டபப் பணி தொடக்க விழா அமைச்சரின் 10 இலட்ச ரூபா ஒதுக்கீட்டில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல்கள் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கமாட்டாது என்பதனால் சிறுபான்மை மக்களுக்கு உள்ள வழி என்ன? வேறேதும் வழி உண்டா?

பேரம் பேசும் பெரும் சக்தியாக சிறுபான்மை மக்கள் உருவெடுக்கவேண்டும். தமது வாக்குகளைப் பயன்படுத்தவேண்டும். இதுதான் இனி எஞ்சியிருக்கும் ஒரே வழி.

வெறுமனே உள்ளுராட்சிச் சபைகளுக்கும் மாகாண சபைகளுக்கும் நாடாளுமன்றத்துக்கும் வெறும் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதை விடப் பேரம் பேசுகின்ற ஒரு அரசியல் களத்துக்கு உயிரோட்டமுள்ள உறுப்பினர்களைத் தெரிவு செய்வதுதான் உசிதமான வழி என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

தேர்தல்களில் நம்பிக்கை வைக்க முடியாது. இனி வரும் காலங்களில் சிறுபான்மை மக்களின் கைகளிலே இருக்கப் போகின்ற வாக்குச் சீட்டுக்கள் பெரும்பான்மை ஆட்சியாளர்களோடு பேரம் பேசுவதற்கான அரசியல் அதிகாரத்தை வழங்குவதற்கான ஒரு பலம்மிக்க கருவியாகப் பாவிக்கப்படவேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.

சிறுபான்மை மக்களின் கைகளிலே இருந்த வாக்குச் சீட்டுக்கள் ஒரு சிலரை நாடாளுமன்ற உறுப்பினர்களாக, பிரதேச, நகர, மாகாண சபை உறுப்பினர்களாக மாற்றுவதற்கு பயன்பட்டிருக்கின்றது. அவ்வளவுதான். இதைவிட எமது வாக்குச் சீட்டுக்கள் வேறொன்றையும் சாதித்ததில்லை. இது எமது சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பெற்றுத் தரப் போதுமானதல்ல.

ஆகையினால், நமது அரசியல் பலம் என்பது இப்பொழுது இருப்பதை விட இன்னும் கொஞ்சம் மேம்பட்ட நிலைக்குப் போவதற்குப் பயன்பட



வேண்டும்.

கடந்த 30 வருட காலமாக திட்டமிடப்படாத அரசியல் களத்திலே உழைக்கின்ற நாம் இனி 5 வருடங்களுக்குப் பேரம் பேசும் அரசியல் சக்தியாக உருவெடுத்து அதிலே எமது சிறுபான்மை மக்களின் நலன்களை அடைந்து கொள்ள முயற்சிப்போம்- என்றார். (த-32)

## விபத்து

### வாகனம் மோதி ஒருவர் சாவு



களுவாஞ்சிகுடி, ஒக். 19
கிரான்குளத்தில் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை நடந்த வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகக் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கிரான்குளம் 9 ஆம் பிரிவைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை அருளாணந்தம் (வயது-52) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வாகனம் ஒன்றினால் மோதுண்டு இவர் வீதியில் உயிரிழந்து கிடந்துள்ளார். நேற்று அதிகாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர் அதிகாலை வேளையில் காத்தான்குடி பிரதேசத்துக்குக் கூலி வேலைக்குச் செல்வதற்கு பஸ்ஸுக்காகக் காத்திருந்த வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(த-32)

# அமெரிக்க வர்த்தக பிரதிநிதிகள் இலங்கையில் முதலிட ஆர்வம்

கொழும்பு. ஒக் 19
அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீடுகளை ஆராய்வதற்கு அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதிகள் குழுவினர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுடன் இணைந்து, அமெரிக்க மற்றும் இலங்கை வர்த்தக சம்மேளனங்கள் இதனை ஏற்பாடு செய்தன.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவை, விசேடமாக வர்த்தக மற்றும் முதலீட்டுத் தளங்களில் நிலவும் உறவை மேலும் வலுப்படுத்துவதாக இந்தக் குழுவின் பயணம் அமைந்துள்ளதாக இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் சுரோஹ் தெரிவித்துள்ளார்.



இலங்கை வர்த்தகத் தலைவர்களும், பொருளாதாரக் கொள்கை வகுப்பாளர்களும், அமெரிக்க நிறுவனங்களின் பிரதிநிதிகள் குழுவுக்கு இலங்கையில் முதலீட்டுச் சூழல், பொருளாதாரக் கட்டமைப்பு மற்றும் வர்த்தகச் சந்தர்ப்பங்கள், சவால்கள் தொடர்பில் தமது கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

கிட்டத்தட்ட 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான செயற்றிட்டப் பிரேரணைகளின் அனுமதி நடைமுறைகள் பல்வேறு கட்டங்களில் உள்ளதுடன், இலங்கைக்கு சகாயமான விலையில் உலகத் தரமான உற்பத்திகளையும், சேவைகளையும் கொண்டு வருவதற்கு அமெரிக்க நிறுவனங்கள் எதிர்பார்த்துள்ளன.

(த-14)

# மகளிர் அமைப்புக்களுடன் அமெ. வர்த்தகர்கள் பேச்சு

கொழும்பு, ஒக், 19
அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதிகளுக்கும் இலங்கை மகளிர் பிரதிநிதிகளுக்கும் இடையில் வர்த்தகப் பயிற்சி மற்றும் பங்காளித்துவம் குறித்த கலந்துரையாடலொன்று இடம் பெற்றுள்ளது.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் பங்காளித்துவத்துடன் முன்னெடுக்கப்பட்ட, போரில் கணவனை இழந்த பெண்களுக்கான செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் கிராண்ட் குறூப்பின் தலைவர் நீலா மரைக்காருடன் அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி மைக்கல் டெலானி கலந்துரையாடியுள்ளார்.


(த-10)


50ஆவது ஆண்டு திருமணநாள் வாழ்த்துக்கள்

இன்று (19.10.2014)
ஞாயிற்றுக்கிழமை

பொன்விழாக் காணும்
தியாகராசா நல்லம்மா
தம்பதிகள்





இந்து சமுத்திரத்தின் நித்திலமாம் இலங்காபுரிதனிலே!
அமையப்பெற்ற சப்த தீவுகளில் மாணிக்கமாய் ஜொலித்திடும்
நாகபூஷணி அம்பாள் வரமருளும் நயினா தீவினிலே!
அன்னையவள் துதிபாட வந்துதித்த தம்பதிகளாம்!

தியாகராசா என்னும் திருநாமம் கொண்ட மன்னவனாம்!
நல்லம்மா என்கிற நங்கைக்கு மங்கலநாண் சூட்டி,
மகிழ்வுடனே இல்லறமென்னும் இன்பசோலைதனிலே!
இணைப்பறவைகளாகி பாரினில் இன்றுடன்
- ஐம்பதாண்டுகளாம்!

அன்னையவள் திருப்பணியில் அகமகிழ்ந்திட்ட தம்பதியரே!
ஊருக்கென அயராது உழைத்திட்ட உத்தம தம்பதியரே!
பெற்றோர் உற்றோர் சுற்றமெல்லாம் போற்றுகின்ற தம்பதியரே!
எம்வாழ்வுக்கு வழிகாட்டி ஒளிகொடுத்து வரமருளும் தம்பதியரே!

காதல்கொண்ட வாழ்க்கையிலே முடிவில்லா மகிழ்ச்சி காண்பீர்!
பாரினில் செல்வங்கள் பதினாறும் பெற்றிந்த பிறவிதனிலே!
உதாரண தம்பதியராய் உவகையுடன் ஊரும்போற்ற உறவும்போற்ற!
இணைபிரியா வாழ்வினில் இன்னும் நூறாண்டுகாலம் வாழ்ந்திடவே!

நயினை நாகபூஷணி அம்பாளின் கிருபையும்
வவுனியா கோவில்குளம் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத
அகிலாண்டேஸ்வரா திருவருளும் கூடிவர வாழ்த்துவோர்:
சாந்தலிங்கம் குடும்பம், சரவணமுத்து குடும்பம், நடராஜா குடும்பம்,
சண்முகரட்ணம் குடும்பம், நவரட்ணராஜா குடும்பம், வாகீஸ்வரன் குடும்பம்
ஸ்ரீபதிநாதன் குடும்பம், உமாதேவன் குடும்பம், சுதாகரன் குடும்பம்



ENGINEERING
CIVIL/SOFTWARE

SICHUAN UNIVERSITY, CHINA
MASSIVE JOB OPPORTUNITIES ALL OVER THE WORLD

CIVIL ENGG. Huge Construction projects undertaken by Chinese Companies, across the world including Sri Lanka, require thousands of English-speaking Civil Engineers for their several projects, like Huge Dams, Roads & Bridges, Under Sea Tunnels, Airports, Seaports, Railways, Large Multi-storied Buildings, Huge Shopping Malls etc.

Chances to get Employment in USA, Canada, UK and European Countries with a minimum salary of US $ 4000 per month plus Free Food and Accommodation.

SOFTWARE ENGG. China aims to be the No.1 in IT Field in the world, creating enormous job opportunities for Software Engineers worldwide. Chances to get Employment in China and Abroad with a minimum salary of US $ 3000 per month plus Free Food and Accommodation. Thousands of foreign software engineers are already working in China.

MATHEMATICS AND SCIENCE SPECIALISATONS ARE NOT REQUIRED FOR SOFTWARE ENGINEERING. ALL STUDENTS CAN APPLY.

ALL PENDING A-LEVEL STUDENTS CAN APPLY NOW AND SAVE ONE FULL YEAR. CLASSES COMMENCE IN THE FIRST WEEK OF DECEMBER, 2014.

7000 YUAN (Sri Lankan Rs.1,50,000) PER YEAR AS UNIVERSITY SCHOLARSHIP (FEES DISCOUNT) AVAILABLE FOR ALL THE STUDENTS.

ONLY 2 SIMPLE PASSES REQUIRED FOR THE ADMISSION

• Unparalleled Infrastructure & Facilities • All Faculties qualified from USA, Canada & UK • 100% English Curriculum • 100% placement Guaranteed in Top MNCs • Internship with stipend during study • IELTS not required • Bank balance not required • 100% Visa Success. Interested students shall contact immediately for the admission to save your one full year.

ICS STUDY OVERSEAS


107 B 1/1 Galle Road, Wellawatte, Colombo - 06
Tel : 4343322, 077 3013060

Jaffna: 77, Clock Tower Road, Jaffna, Tel : 021 4926222, 076 7013060
Trincomalee: 071 6851032, Kurunegala: 077 7494786, Batticaloa: 077 7941258

(C. 17106)

# 90 பேருக்கு டெங்கு தென்மராட்சிப் பிரதேசத்தில்

தென்மராட்சி, ஒக் 19
தென்மராட்சிப் பிரதேசத்தில் இதுவரை 90 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. டெங்கினால் பீடிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் கொழும்பு மாவட்டத்துக்குச் சென்று திரும்பியவர்கள் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.



கடந்த வருடம் போதிய மழை வீழ்ச்சியின்மையால் டெங்கு உற்பத்தியாகக் கூடிய நீர் தேக்கங்கள் இன்மையாலும், சுகாதாரப் பகுதியினர் இடையிடையே நடத்தப்பட்ட டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்திட்டங்களாலும் டெங்கின் பாதிப்பு பிரதேச மக்களுக்கு ஏற்படவில்லை. தொழில், வர்த்தகம், உறவினர்கள் வீடுகளுக்கு செல்வது, வெளிநாடுகளுக்குச் செல்லுவோரை வழியனுப்பச் செல்தல் போன்ற காரணங்களினால் கொழும்பு மாவட்டத்துக்குச் சென்று திரும்பியவர்களே டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணைகள் மூலம் தெரிய வந்ததாகக் கூறப்பட்டது.

பரிசோதனைகள் மூலம் டெங்கு ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதும் உடனடியாக அந்தப் பகுதியில் அது தொடர்ந்து பரவாமல் தடுக்கப் பணிகள் சுகாதாரத் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி, கொடிகாமம் நகர்ப் பகுதி வர்த்தகர்கள் தமது வியாபார நடவடிக்கைகளுக்காகத் தென்னிலங்கைக்குச் சென்று வருவதாலும், இந்த நகரப் பகுதியில் உள்ள வெட்டப்பட்டுள்ள வடிகால்களுக்குள் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய ஏது நிலை காணப்படுவதாலும் டெங்கு தாக்கம் அதிகமாகவுள்ளது.

சாவகச்சேரி நகரம் மற்றும் அதனை அண்டிய கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் மட்டுவில் பிரதேசம் ஆகிய பிரதேசங்களில் சுகாதாரப் பிரிவினால் அடிக்கடி டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## தையல் பயிற்சி வவுனியாவில் இன்று ஆரம்பம்

வவுனியா, ஒக் 19
வவுனியா மாவட்டத்தில் பல இடங்களில் தையல் பயிற்சி நெறி இன்று ஞாயிற்றுக் கிழமை கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சினால் ஆரம்பித்து வைக்கப் படவுள்ளது.

அண்ணா நகர், பட்டாணிச்சூர், ஈஸ்வரிபுரம், மரக்காரம்பளை, சாளம்பைக்குளம், ஆண்டியாபுளியங்குளம், பாவற்குளம் சூடுவெந்தபுலவு ஆகிய கிராம அபிவிருத்திச் சங்கங்களில் இந்தப் பயிற்சி வகுப்புக்களைக் கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைக்கவுள்ளார். (த-402)

## ஐஸ்கிறீம் உற்பத்தி மறு அறிவித்தல் வரை நிறுத்தப் பணிப்பு

தென்மராட்சி, ஒக். 19
சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இயங்கிய இரண்டு ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்கள் மறு அறிவித்தல் வரை உற்பத்தி செய்வது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் விசேட குழுவினர் நேற்றுமுன்தினம் சாவகச்சேரிப் பகுதியில் உள்ள ஐஸ்கிறீம் தயாரிக்கும் நிலையங்கள் மீது பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

ஐஸ்கிறீம் தயாரிப்பு நிலையத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து அறிவிக்குமாறும் பொது சுகாதார பரிசோதகர் மூலம் அறிக்கை சமர்ப்பிக்கும் வரை ஐஸ்கிறீம் உற்பத்தி செய்வதை நிறுத்தி வைக்குமாறும் அறிவுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (9)

## பயங்கரவாத சந்தேகநபருக்கு ஒத்திவைத்த கடூழியச் சிறை

மட்டக்களப்பு, ஒக் 19
பயங்கரவாதக் குழுவுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் கைதான நபர் ஒருவருக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் 10 வருடங்களுக்கு ஒத்தி வைத்த 2 வருட கடூழிய சிறையும் 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தது.



மட்டக்களப்பு - திகிலிவட்டை - சந்திவெளியைச் சேர்ந்த பாக்கியராசா கேதீஸ்வரம்-என்பவருக்கே இந்தத் தீர்ப்பை நீதிபதி சந்திரமணி விஸ்விலிங்கம் வழங்கினார்.

குறித்த சந்தேகநபர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கடந்த 23-08-2009 அன்று மட்டக்களப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இவருக்கு எதிராகப் பொலிஸார் வழக்குத் தொடர்ந்தனர்.

வழக்கு விசாரணையின் போது சந்தேகநபர் நீதிமன்றில் குற்றத்தை ஏற்றுக்கொண்டார். அத்துடன் தானாக விரும்பி ஆயுதக் குழுவில் சேரவில்லை என்றும் தன்னை ஆயுதக் குழுவினர் வலுக்கட்டாயமாகவே சேர்த்துக் கொண்டனர் என்றும் மன்றில் தெரிவித்தார்.

எனவே தமக்கு குறைந்த பட்ச தண்டனை வழங்குமாறும் கேட்டார். இதனைக் கருத்தில் கொண்ட நீதிபதி குற்றவாளிக்கு 10 வருடங்களுக்கு ஒத்தி வைத்த 2 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தார். (த)

## பண்ணை சுற்று வட்டத்தில் வெள்ளம் பயணிகள் பெரும் சிரமம்



யாழ்ப்பாணம், ஒக்.19
யாழ். பண்ணை சுற்று வட்டத்தில் மழை வெள்ளம் தேங்கியுள்ளதால் வீதியால் பயணிக்கும் மக்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் அதனூடாகப் பயணிக்கும் வாகனங்கள் வெள்ளத்தை ஊடறுத்து வேகமாகச் செல்வதால் மக்கள் வெள்ளத்தில் நனையவேண்டிய நிலையும் ஏற்படுகின்றது நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை கொட்டித் தீர்த்த மழையால் பண்ணை சுற்று வட்டம் மழை வெள்ளத்தில் மிதந்தது.

சுற்று வட்டத்திலும் அதனை அண்டிய பகுதியிலும் அதிகளவிலான வெள்ளம் தேங்கியதால் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்பட்டது.

உடனடியாக இந்தப் பகுதியில் தேங்கிய வெள்ளம் தற்காலிக வாய்க்கால் அமைக்கப்பட்டு அகற்றப்பட்டது.

பண்ணை வீதி காபெற் வீதியாக மாற்றப்பட்டவேளை சுற்று வட்டத்தைச் சூழ்ந்த இடம் தாழ்வாகப் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுக் காப்பெற் போடப்பட்டுள்ளது.

இதனால் மழை காலங்களில் சுற்று வட்டப் பகுதியில் வெள்ளம் கூடுதலாகக் தேங்கி காணப்படுகிறது. (த-17)

## யாழ். வளைவுக்கு ஒளி வசதி

யாழ்பாணம்,ஒக்.19
செம்மணியில் உள்ள யாழ்ப்பாணம் வரவேற்கின்றது என்ற வளைவுக்கு ஒளி வசதி ஏற்படுத்தப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

வீதி அகலிப்புக்காக ஏற்கனவே இருந்த வளைவு அகற்றப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிதி உதவியுடன் புதிய வளைவு அமைக்கப்பட்டுச் சபையால் கடந்த வருடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வரவேற்கின்றது என்ற இந்த முக்கியத்துவம் வாய்ந்த வளைவு இரவு வேளையில் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றது.

இந்த வளைவுக்கு மின்சார சபையின் உதவியுடன் ஒளி வசதியை ஏற்படுத்துவதற்குச் சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது' என்றும் சபையின் தலைவர் மேலும் தெரிவித்தார். (த-17)

## குருநகர்ப் பகுதிக்கான குடிதண்ணீர் சீரானது

குருநகர்,ஒக்.19
குருநகர்ப் பகுதிக்கான குடிநீர் விநியோகம் நேற்றுச் சனிக்கிழமை காலையிலிருந்து சீரடைந்துள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

யாழ். முதலாம் குறுக்குத்தெரு வீதியில், வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள குடிதண்ணீர்க் குழாயில் ஏற்பட்ட வெடிப்புக் காரணமாக இப்பகுதிக்கான குடிதண்ணீர்ச்சேவை கடந்த மூன்று நாள்களாகத் தடைப்பட்டிருந்தது.

யாழ்.மாநகரசபையால் மேற்கொள்ளப்பட்டுவந்த இக்குழாய் திருத்தும் பணி நேற்று மாலை பூர்த்தியடைந்ததையடுத்து நீர் விநியோகம் தற்போது சீரடைந்துள்ளது. (த-51)

## பருத்தித்துறை- கொக்கிளாய் இடையே பஸ் சேவை 27 வருடங்களின் பின்னர்

வடமராட்சி, ஒக் 19
பருத்தித்துறையில் இருந்து கொக்கிளாய்க்கு சுமார் 27 வருட காலத்துக்குப் பின்னர் நாளை திங்கட்கிழமை முதல் பஸ்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பருத்தித்துறை இ.போ.ச.டிப்போ முகாமையாளர் எஸ்.கந்தசாமி தெரிவித்தார்.

நெல்லியடி, கொடிகாமம், பரந்தன், விசுவமடு, முல்லைத்தீவு ஊடாகக் கொக்கிளாய் வரை சேவையில் ஈடுபடும் பஸ்கள் தினமும் அதிகாலை 5.15 மணிக்கும் முற்பகல் 10.30 மணிக்கும் கொக்கிளாயை நோக்கிப் புறப்படும். இவை முறையே காலை 8.15 மணிக்கும் பிற்பகல் 2.30 மணிக்கும் கொக்கிளாயைச் சென்றடையும்.

கொக்கிளாயில் இருந்து முற்பகல் 10 மணிக்கும் பிற்பகல் 3 மணிக்கும் பருத்தித்துறையை நோக்கிப் புறப்படும் பஸ்கள் முறையே பிற்பகல் 1 மணிக்கும் மாலை 7மணிக்கும் பருத்தித்துறையை வந்தடையும்.

இந்தச் சேவையினால் வடமராட்சி, தென்மராட்சி பிரதேசங்களிலிருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு சேவையாற்ற சென்று வரும் அரச உத்தியோகத்தர்களும் மற்றும் பொதுமக்களும் பெரிதும் பயனடைவார்கள். (த-173)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஜெயலலிதாவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது

ஜெயலலிதா விடுதலையாகிவிட்டார் என்கிற செய்தி தமிழகத்தைப் போலவே ஈழத்திலும் மகிழ்ச்சி அலையைப் பரவ விட்டுள்ளது. சிலர் அதை வெளிப்படையாகவும், பலர் அதனை உள்ளூரவும் அனுபவித்தார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

ஊழல் குற்றத்துக்காகத் தண்டனை பெற்ற ஒருவரின் - சட்டப்படி குற்றவாளியான ஒருவரின் - விடுதலையை மக்கள் கூட்டம் ஆனந்தக்கூத்தாடிக் கொண்டாடுவது உண்மையில் அதிசயம் தான்.

இதே மக்கள்தான் ஜெயலலிதா ஊழலில் ஈடுபட்டார் என்பது தெரிந்த உடனே, அடுத்து வந்த நாடாளுமன்றத் தேர்தலில் அவரை ஓட ஓட விரட்டியவர்கள். 40 தொகுதிகளில் ஒரு தொகுதியில்கூட வெற்றிபெற முடியாத அளவுக்குத் துரத்தியடித்தார்கள்.

ஜெயலலிதா செய்த குற்றங்களுக்காகத் தாம் வழங்கிய அந்தத் தண்டனையே போதுமானது என்று அவர்கள் கருதிவிட்டார்கள் போலும். அதனால்தான் அந்தக் குற்றத்துக்காக இப்போது நீதிமன்றம் அவரைச் சிறையில் தள்ளி தண்டிப்பது அவர்களுக்கு ஏற்புடையதாக இல்லை. அது மட்டுமல்ல, இதற்கு முன்பு ஆட்சியில் இருந்த கருணாநிதியும்கூட ஜெயலலிதாவை விட மேலானவர் அல்லர் என்ற எண்ணம்கூட ஜெயலலிதாவை மக்கள் மன்னித்து விடுவதற்கான காரணங்களில் ஒன்றாக இருக்கக் கூடும். ஜெயலலிதா ஊழல் செய்கிறார் என்று கோபப்பட்டு அவரைத் தூக்கி எறிந்துவிட்டுப் பதவியில் அமர்த்திய கருணாநிதி ஆட்சியிலும், ஏகப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்கள்தான். அதனால்தான் அவரது ஆட்சியையும் மக்கள் நிராகரித்தார்கள். எனவே ஜெயலலிதாவை மட்டும் தண்டிப்பதில் என்ன நியாயம் இருக்க முடியும் என்றும் அவர்கள் நினைத்திருக்கக்கூடும்.


எப்படி இருந்தாலும் குற்றவாளியாகச் சிறையில் தள்ளப்பட்ட தன்னைத் தலைமீது தாங்கி அழைத்து வரக்கூடிய அமைச்சர்களையும் தொண்டர்களையும் வைத்திருக்கும் ஜெயலலிதாவின் ஈர்ப்பும் ஆளுமையும் பிரமிக்க வைக்கிறது. அவர் சிறையில் தள்ளப்பட்டு, நேரடியாக அரசியலில் ஈடுபடமுடியாது என்ற நிலை ஏற்பட்டபோதுகூட கட்சிக்குள் பதவிப் போட்டிகள் ஏற்படவில்லை. கட்சியின் கட்டுக்கோப்பும் குலையவில்லை. அந்தளவுக்கு விரிந்துள்ள அவரது நிர்வாகத் திறன் வியக்கவைக்கிறது. அவரது கட்சிக்குள் ஜனநாயகமே இல்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்பட்டபோதும், கட்சியைக் கைப்பற்றவோ பதவிக்காக அடிபடவோ எவரும் முன்வராதமை அவரது கட்டிறுக்கத்துக்கான சிறப்பு.

ஆயிரக்கணக்கான அரசியல்வாதிகள், லட்சோப லட்சம் தொண்டர்கள், 6 கோடி தமிழர்கள் என்று எல்லோரையும் எப்படிக் கட்டி ஆள்வது என்ற வித்தையை தனி ஓர் ஆளாக ஜெயலலிதா கையகப்படுத்தியிருந்த வழிவகைகள் கற்றுக்கொள்ளப்பட வேண்டியவைகளே!

கட்டுரை

# ஜனாதிபதி தேர்தல் சவால்

கந்தவனம் கோணேஸ்வரன்



இலங்கை அரசியலில் எதிர்வரும் வாரங்களில் பரபரப்பாகப் பேசப்படப்போகும் விடயம் ஜனாதிபதித் தேர்தலாக அமையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. நாடாளுமன்றத் தேர்தல் விரைவில் இடம்பெறக் கூடுமெனச் சிலர் கருதினாலும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாய்ப்புகளே அதிகமாகக் காணப்படுகின்றன.

தற்போது ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையும் ஜனாதிபதியாக முயல்வதன் விளைவே அவசரமான ஜனாதிபதித் தேர்தல் என நம்பப்படுகிறது. 2016 ஆம் ஆண்டு வரையிலும் இன்றைய ஜனாதிபதியின் பதவிக்காலம் செல்லுபடியாகும். எனினும், முன்னதாகவே தேர்தலை நடத்தி மீளவும் ஆறு ஆண்டு காலம் தனது பதவிக்காலத்தை உறுதிப்படுத்திவிட்டால் அடுத்துவரும் நாடாளுமன்றத் தேர்தலில் தான் சார்ந்த கட்சியினரை வெல்லவைப்பது சுலபமாகிவிடுமென ராஜபக்ஷ கணக்குப்போடுவதாகத் தெரிகிறது.

ஆனால், இன்றைய ஜனாதிபதி தனது இரண்டாவது பதவிக்காலத்தில் இருப்பதால் மூன்றாவது தடவையாகவும் பதவிவகிக்க உரித்துள்ளவர்தானா என்ற கேள்வியும் அரசியல் வட்டாரத்தில் எழாமல் இல்லை. 1978 இல் கொண்டுவரப்பட்ட இன்றைய இலங்கை அரசியற்சட்டத்தின்படி ஒருவர் இரண்டு தடவைகளே நாட்டின் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கலாம். இதனை அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 31(2) தெளிவாகவே வரையறுத்து வைத்திருக்கிறது. ஆனால், மஹிந்த அவ்வாறு செய்ய வேண்டியதில்லை என்பதற்கான நியாயமும் அரசமைப்புத் திருத்தம் என்ற வகையில் இப்போது சேர்க்கப்பட்டு இருக்கிறது. 2010 செப்டெம்பர் 8 ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்ட பதினெட்டாவது அரசமைப்புத் திருத்தத்தின்படி ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதிப் பதவி வகித்தலாகாது என்ற பழைய விதி நீக்கப்பட்டுள்ளது. எனவே, அரசமைப்பின் பதினெட்டாவது திருத்தத்தின்படி ஒருவர் எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் ஜனாதிபதியாக வரலாம் என்றாகிவிட்டது.

மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது பதவிக்காலத்துக்குப் போட்டியிடத் தகுதியற்றவர் என்ற சட்டவாதத்தை முன்னைய பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா முன்வைத்திருக்கிறார். இவரது வாதப்படி ஜனாதிபதியாக மஹிந்த ராஜ பக்ஷ பதவியேற்றபோது எந்த அரசமைப்பு விதி நடை முறையில் இருந்ததோ அந்த விதிப்படிதான் அவர் ஒழுக வேண்டுமே யொழிய தனக்காக ஆக்கிக் கொண்ட புதிய அரசமைப்புத் திருத்தத்தின்படி அல்ல என்ற கூற்று முன் வைக்கப்படுகின்றது. இதன்படி பார்த்தால் அரசமைப்பின் உறுப்புரை 31 (2) கூறுவதுபோல மஹிந்த ராஜபக்ஷ இரண்டு தடவைகளுக்குமேல் பதவி வகிக்கமுடியாமல் போய்விடுகிறது. சட்டப்பிரச்சினையைக் கிளப்பியவர் முன்னாள் சட்டமா அதிபராகவும் முன்னாள் பிரதம நீதியரசராகவும் பதவி வகித்தவர் என்பதால் இச்சட்டவாதத்தை பாரதூரமாகவே கருத வேண்டியிருக்கிறது. அவை வெற்றுவார்த்தைகளாகப் போய்விடத்தக்கவை அல்ல. ஆனால், இலங்கை நடைமுறையில் பிரதம நீதியரசர்களின் சட்டநியாயங்கள் எவ்வளவுதூரம் மதிக்கப்படுகின்றன என்பதற்கு முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்காவும் சாட்சியாக இருக்கிறார் என்பதை மறந்துவிட முடியாது.

ஆனாலும் சட்டத்தரணிகளில் ஒருசாரார் மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் எந்தச் சட்டச்சிக்கலும் கிடையாது என்று அடித்துக் கூறுகிறார்கள். இவர்களின் வாதப்படி நடைமுறையிலிருக்கும் அரசமைப்பே பிரதானம். அது இப்போது பதினெட்டாவது திருத்தச்சட்டத்தையும் உள்ளடக்கியதாகவே காணப்படுகிறது. பதினெட்டாவது திருத்தச் சட்டத்தின்படி இரண்டு தடவைகளுக்குமேல் ஒருவர் ஜனாதிபதியாக வரமுடியாது என்றுகூறும் உறுப்புரை 31(2) செயலிழந்துவிட்டது. எனவே, நடைமுறையிலிருக்கும் அரசமைப்பு விதிகளின் பிரகாரம் இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர் தொடர்ந்தும் பல தடவைகள் அப்பதவிக்காகப் போட்டியிடலாம் என்கிறார்கள்.

எனவே, இப்போதைய ஜனாதிபதி இரண்டு தடவைகள் பதவி வகித்தார் என்ற காரணத்தால் மூன்றாவது தடவையும் பதவிக்கான போட்டியில் இறங்கலாமா என்பது பற்றிய சந்தேகம் சட்டத்தில் தோன்றுமாயின் அதனை உயர்நீதிமன்றத்துக்கு ஊடாகத் தீர்த்துக் கொள்ள முடியும் என்று கூறுகிறார்கள். ஜனாதிபதி தொடர்ந்தும் போட்டியிடலாம் என்ற நிலையில் நிற்பவர்கள்.

ஆனால், இது சரியான முறையல்ல. அரசமைப்பு விதிகளில் விளக்கக் குறைவுகள் அல்லது மயக்கங்கள் ஏற்படும்போது உயர்நீதிமன்றத்தின் உதவியோடு திருத்திக்கொள்வது சரியான முறைமைதான். ஆனால், அது நாட்டுநலன் சார்ந்த விடயங்களின் அடிப்படையில் எழுந்தனவாக இருக்கவேண்டுமேயொழிய தனிமனித நலன் சார்ந்ததாக அமையமுடியாது என்றொரு மறுதலிப்பும் சட்டத்துறைசார் அறிஞர்களால் பேசப் படுகிறது. இதனைச் சுருக்கமாகச் சொல்வதானால் மஹிந்த ராஜபக்ஷ என்ற தனிமனிதருக்காக இத்தகைய ஒரு முறைமையைக் கடைபிடிக்க முடியாது என்பதாகும்.

நீதி, நீதியாக அமுல்படுத்தப்படுமானால் பிரச்சினைகள் தோன்றுவதற்கே வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது.

எவ்வாறெனினும், மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையும் ஜனாதிபதியாவதற்குத் தேர்தலில் களமிறங்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். ஆயுட்கால ஜனாதிபதியாக இருந்துவிடவேண்டும் என்ற விருப்பம் அவருக்கு. மக்கள் ஆணையின்மூலம் அதனைச் சாதித்துக் கொள்ளலாமென அவர் உறுதியாக நம்புகிறார். மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதியாக வருவதில் சட்டப்பிரச்சினை ஏதும் எழுமாயின் அதனைக்கூட தீர்த்துவிடும் வல்லமை இன்றைய ஜனாதிபதிக்கு இருக்கிறது. எனினும், அவர் அந்த வல்லமையை இறுதிநிலை அஸ்திரமாகவே வைத்துக் கொள்ளக்கூடும். பதினெட்டாவது திருத்தச்சட்டத்தின் சாதகமான பகுதிகளின் செயற்பாட்டுக் காலத்தை முன்னோக்கி நகர்த்துவதன்மூலம் அவரால் இதனைச் சாதித்துவிட முடியும். அவரிடமிருக்கும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலம் அத்தகைய முயற்சிக்குப் போதுமானதாயினும், வெளிப்படையாகத் தனிமனித நலன்பேணும் இக்காரியத்தைச் செய்வதற்கு ஜனாதிபதி விரும்புவாரா என்பதும் சிந்திக்கவேண்டியதே.

அத்தகைய ஒரு நிலை தோன்றுமாயின் ஜனாதிபதிக்கான தேர்தலை அறிவித்துவிட்டுத் தான்மட்டுமே போட்டியாளராக நிற்கவேண்டிய ஒரு பரிதாபநிலை மஹிந்த ராஜபக்ஷவுக்கு உருவாகலாம். இத்தகையதொரு ஒத்துழையாமை நிலைக்கு இலங்கை அரசியல்வாதிகள் பழக்கப்பட்டவர்களல்லர் என்பதால் அது ஒருபோதும் நடைமுறைக்கு வரப்போவதில்லை.

பொதுவேட்பாளர் ஒருவரைத் தெரிவுசெய்தல் என்பது வெறுங் கற்பனைக் கருதுகோளாகவே முடிந்துவிடவும் கூடும். தங்கள் அரசியற்பலத்தைத் தாரைவார்த்துக் கொடுத்துப் பிறிதோர் அணியைச்சேர்ந்த ஒருவரை ஜனாதிபதி ஆக்குதற்குத் தயாரான அரசியல்வாதிகள் எவரும் இலங்கையில் இருப்பதாகத் தெரியவில்லை. பொதுவேட்பாளர் தெரிவு நடைபெறுமானால் அந்தத் தெரிவுக்குரியவர் தானாக இருந்துவிட வேண்டும் என்ற உள்ளாசை பலரிடமும் காணப்படுகிறது. சந்திரிகா அம்மையார், சோபித தேரர், சரத் பொன்சேகா, ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ எனப் பலரும் இந் வாய்ப்புக்காகக் காத்துக்கிடக்கிறார்கள்.

இவர்கள் அனைவரும் ஒன்றுபட்டுச் செயலாற்றுவதற்கு வெளிப்படையான காரணங்கள் இரண்டு இருக்கின்றன. ஒன்று, தங்கள் அனைவரதும் முன்னேற்றத்தைத் தடுக்கின்ற பொது எதிரியான மஹிந்தவை வீழ்த்துவது. இரண்டு, நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பது. கேட்பதற்குச் சுவையாக இருக்கின்ற இக்காரணங்களில் முதலாவது நிகழ்ந்தாலும் இரண்டாவது காரணம் நிறைவேறுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ஏனெனில், ஜனாதிபதியாகப் பதவியேற்கும் ஒருவர் அந்தப் பதவியின் அதிகாரச்சுகங்களைத் தியாகம் செய்ய விரும்புவாரா என்பது குறித்தும் சிந்திக்கவேண்டியிருக்கிறது.

# அமைச்சர்களுக்கு ஏன் அஞ்சுகிறார் ஜனாதிபதி?

■ சிங்கள மூலம் - மவ்பிம
தமிழில் - வீஎஸ்ரீ



ஜனாதிபதித் தேர்தலை நடத்த இது பொருத்தமான வேளையல்ல: எனவே தற்போது ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டாம் என்று அரசில் அமைச்சர்களாகப் பதவி வகிக்கும் இடது சாரித் தலைவர்கள் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளனர். ஜனாதிபதி நடைமுறையில் ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட வேண்டுமென அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். இந்த அரசு சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு மதிப்போ மரியாதையோ வழங்காது செயற்படுகிறது என அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் விமர்சித்துள்ளார். அரசில் அங்கம் வகிக்கும் சில அமைச்சர்கள் அரச நிதியைத் திருடுகின்றனர். அரசுக்கு இன்று தமிழர்களதோ முஸ்லிம்களதோ வாக்குகள் கிட்டப் போவதில்லை என்று அமைச்சர் ராஜித சேனரட்ண சாடுகிறார்.

அண்மையில் தமது இத்தாலிக்கான பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய கையோடு தேசியத் தேர்தல்கள் இரண்டைச் சந்திக்கத் தயாராகுமாறு சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி மஹிந்த தெரிவித்திருந்தார். அதனை அடுத்தே அரசில் அங்கம் வகிக்கும் மேற்குறிப்பிட்ட அமைச்சர்களது கருத்துக்கள் பகிரங்கமாக வெளியிடப்பட்டிருந்தன.

ஜனாதிபதித் தேர்தலொன்று மிக விரைவில் இடம்பெறவுள்ளதாக மஹிந்த சொல்லாமல் சொன்னபோது இந்த அமைச்சர்கள் இவ்விதம் அரசை விமர்சித்தமை நியாயமானதா? இதனால் மஹிந்தவுக்குக் கிட்ட வேண்டிய வாக்குகள் கிட்டாது போய் விடுமல்லவா? அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பை இவ்விதம் உதாசீனம் செய்யும் அவர்களை அரசிலிருந்து வெளியேற்றாமல் ஜனாதிபதி இவ்விதம் மௌனம் காப்பதேன்?

அண்மையில் அமைச்சொன்றில் இடம்பெற்ற கூட்டத்தில் பங்கேற்ற மஹிந்தவுக்கு மிக நெருக்கமான ஆலோசகர்கள் சிலர் மேற்குறிப்பிட்ட விதத்தில் தம்மிடையே கவலையைப் பகிர்ந்து கொண்டனர்.

அவர்களது கவலை நியாயமானதே. அரசில் அங்கம் வகித்துக்கொண்டே, அமைச்சர் பதவிகளை வகித்துக்கொண்டே அரசை விமர்சிப்பதென்பது கடந்த கால அரசுகளின் நிர்வாகத்தின்போது மட்டுமன்றி, சோல்பரி அரசமைப்பு நடைமுறையிலிருந்த காலத்திலும் கூட இடம்பெறாததொன்று.

இதற்கு மிகப்பொருத்தமான உதாரணமாக 1970 - 1977 சிறிமாவோவின் கூட்டு முன்னணி அரசின் பதவிக் காலத்தைக் குறிப்பிட இயலும். அந்தக்கூட்டு முன்னணி அரசை இயங்க வைத்த சூத்திரதாரிகளாக நிதி அமைச்சராக இருந்த கலாநிதி என்.எம்.பெரேராவையும் மற்றொரு அமைச்சுப் பதவியை வகித்த கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வாவையும் குறிப்பிட இயலும். அவ்விருவரும் எவ்வளவு தான் திறன் வாய்ந்தவர்களாக இருந்தபோதிலும், கொழும்பில் இடம்பெற்ற கூட்டமொன்றில் வைத்து முன்னாள் பிரதமர் பண்டாரநாயகாவை பகிரங்கமாக என்.எம்.பெரேரா விமர்சித்தமைக்காக சிறிமாவோ, என்.எம். பெரேராவை அவரது நிதி அமைச்சர் பதவியினின்றும் வெளியேற்றினார். அது மட்டுமன்றி கொல்வின் ஆர்.டி சில்வாவும் கூட அமைச்சர் பதவியிலிருந்து வெளியேற் றப்பட நேர்ந்தது. ஜே.ஆரின் தலைமையிலான ஐ.தே.கட்சி அரசின் காலத்திலும் ஒரு சந்தர்ப்பத்தில் நிதியமைச்சராக இருந்த ரொனி டி மெல் சமர்ப்பித்த வரவு - செலவுத் திட்டத்தை, மற்றொரு அமைச்சரான எம்.டி.எச்.ஜெயவர்த்தனா விமர்சித்ததையடுத்து ஜே.ஆர். உடனடியாகவே எம்.டி.எச். ஜெயவர்த்தனாவை பதவி நீக்கம் செய்யத் தவறவில்லை. எம்.டி.எச். ஜெயவர்த்தனவுக்கு மட்டுமன்றி, தமக்கு மிகமிக நெருக்கமாகச் செயற்பட்ட பலருக்கும் கூட ஜே.ஆர். ஒரே விதத்திலேயே தண்டனை வழங்கியிருந்தார். ஏனெனில் ஜே.ஆர். தமது அரசின் அமைச்சர்களிடம் கூட்டுப்பொறுப்பை எதிர்பார்த்துச் செயற்பட்டார். அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் விடயங்களில் இரகசியம் பேணப்படவேண்டுமென ஜே.ஆர். எதிர்பார்த்தார். அவ்வாறு நடந்துகொள்ளாத சந்தர்ப்பங்களில் தவறிழைத்தோரை அரசினின்றும் வெளியேற்ற ஜே.ஆர். ஒருபோதும் பின் நின்றதில்லை.

இதற்குப் பொருத்தமான உதாரணமாக சிறில் மத்தியூவின் விவகாரத்தைக்' குறிப்பிட இயலும். ஜே.ஆரின் அரசில் முக்கிய அமைச்சுப் பொறுப்பை வகித்த சிறில் மத்தியூ ஜே.ஆருக்கு மிக மிக நெருக்கமான ஒருவராயிருந்தார். ஜே.ஆரின் நிழல்போன்று செயற்பட்டவரெனக் கூடக் கூற இயலும். ஐ.தே.கட்சியின் தலைவராக இருந்த டட்லி சேனநாயக்கா மரணமடைந்த வேளை கட்சியின் தலைமைத்துவம் ஜே.ஆருக்கு வழங்கப்படவேண்டுமென வாதாடி அவ்விதம் ஜே.ஆருக்குத் தலைமைப் பதவியைப் பெற்றுக்கொடுக்க முன்னின்று செயற்பட்ட ஒருவரே சிறில் மத்தியூ. ஒரு சமயம் நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பாக அரசின் நிலைப்பாட்டுக்கு எதிராக கருத்து வெளியிடப்போய் ஜே.ஆரின் அதிருப்தியை அவர் தேடிக்கொண்டார். சிறில் மத்தியூ எவ்வளவு தான் தமக்கு நெருக்கமானவராகச் செயற்பட்டபோதிலும். சிறில் மத்தியூவை அமைச்சர் பதவியிலிருந்து வெளியேற்ற ஜே.ஆர்.சிறிதும் தயக்கம் காட்டவில்லை.

அது மட்டுமன்றி ஜே.ஆர். தமது அரசியல் வாரிசாக அறிமுகப்படுத்திய காமினி திஸநாயகாவுக்கும்கூட அத்தகையதொரு நிலைக்கு முகம் கொடுக்க நேர்ந்ததுண்டு. சிறிமாவோவின் பிரஜா உரிமையை நீக்குவதென அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை, அமைச்சரவை முடிவுகளில் இரகசியம் பேணப்படவேண்டுமென்ற விதியையும் மீறி காமினி திஸநாயகா முற்கூட்டியே சிறிமாவோவுக்குத் தெரிவித்ததான குற்றச்சாட்டில் ஜே.ஆர்., அந்த வேளையில் காமினி திஸநாயகா வகித்து வந்த காணி அமைச்சர் பதவியினின்றும் அவரை வெளியேற்ற முடிவு செய்தார். இருந்தபோதிலும் அவ்வேளையில் பிரேமதாச அதில் தலையிட்டு அதனைத் தடுத்து காமினி திஸநாயகாவின் அமைச்சர் பதவியைக் காப்பாற்றி உதவினார். உண்மையில் அந்த வேளையில் ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவரான பிரேமதாஸவுக்கு அடுத்த நிலையை காமினி திஸநாயகா வகித்து வந்தபோதிலும் ஜே.ஆர். ஒழுக்காற்று விதிகளில் தகுதி தராதரம் பார்க்காது முடிவுகளை மேற்கொள்வதில் தீவிரம் காட்டி வந்தார்.

ஐ.தே.கட்சியில் அங்கம் வகித்தவாறே கட்சியின் கூட்டுப் பொறுப்புக்கு மதிப்பளிக்காது அரசின் கொள்கை நிலைப்பாடுகளை விமர்சித்த உறுப்பினர்கள் மீது தகுதி தராதரம் பார்க்காது ஜே.ஆர். கடும் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளத் தவறவில்லை. இதேபோன்று பிரேமதாசவின் நிர்வாக வேளையிலும் காமினி திஸாநாயகா சிக்கலொன்றில் சம்பந்தப்பட நேர்ந்தது. பிரேமதாச அரசில் அடுத்த பிரதமராக கருதப்பட்ட நிலையில் இருந்த காமினி திஸநாயகா, பிரேமதாச ஜே.வி.பி. தரப்பினர் தொடர்பாக கைக்கொண்டு வந்த கொள்கை நிலைப்பாட்டைப் பகிரங்கமாக விமர்சித்ததன் காரணமாக கூட்டுப் பொறுப்பை மீறியதான குற்றச்சாட்டில் பிரேமதாசவால் அமைச்சர் பதவியினின்றும் வெளியேற்றப்பட்டார்.

இதே விதத்தில் சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் அரசை விமர்சித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட அமைச்சர் ஸ்ரீமானி அதுலத்முதலியை சந்திரிகா அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கினார்.

இவ்விதம் தவறிழைத்ததாகக் கண்டு சிறிமாவோ, ஜே.ஆர்., பிரேமதாச மற்றும் சந்திரிகா போன்ற அரசுத் தலைவர்கள், தமது தலைமையின் கீழ் செயற்பட்ட அமைச்சர்கள் மீது காலத்துக்குக் காலம் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறவில்லை. தமது அத்தகைய நடவடிக்கைகள் காரணமாக ஏற்படத் தக்க பின் விளைவுகள் குறித்து அவர்களில் எவரும் கவலைப்பட்டதில்லை.

இன்று எதிர்க்கட்சிகளால் ஏகாதிபத்தியவாதியென விமர்சிக்கப்படும் ஜனாதிபதி மஹிந்த, தமது தலைமையிலான அரசைப் பகிரங்கமாக விமர்சித்து வரும் அமைச்சர்களுக்கு எதிராக எவ்வித கருத்தையும் வெளியிடுவதில்லை. அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் மேற்கொள்வதில்லை. ஆகக் குறைந்தது கண்டனம் தானும் வெளியிடுவதில்லை.

அதேவேளை அரசுக்கு எதிராக இவ்விதம் விமர்சனங்களை வெளியிடும் அமைச்சர்கள் கூட கூட்டணிக்குக் கிட்டிய வாக்குகள் மூலமே தாம் அமைச்சர் பதவிகளைப் பெற முடிந்ததென்பதை மறந்துவிட்டுள்ளனர். கூட்டணி என்ற ரீதியில் கிட்டிய வாக்குகள் மூலமே தம்மால் நாடாளுமன்ற உறுப்பினராக முடிந்த தென்பதைக் கூட அவர்கள் மறந்து விட்டுள்ளனர்.

தற்போது மஹிந்த இத்தகைய அமைச்சர்களுக்கு அரசை விமர்சிக்க இடமளித்து வாய் மூடி மௌனியாக இருப்பது தாம் ஒரு ஜனநாயகவாதியெனக் காட்டிக் கொள்வதற்காகவா என்ற கேள்வியும் இங்கு எழுகிறது. அல்லது உண்மையில் மஹிந்த இத்தகைய அமைச்சர்களுக்கு அஞ்சுகிறாரா? என்பது குறித்து எதுவும் கூற இயலாதுள்ளது.

ஆனால் ஒன்று, இன்றோ நாளையோ இந்த அரசு வீழ்ச்சி காணப்போகிறது என அவர்கள் எவ்வளவு தூரம் தான் கூறினாலும், மக்கள் தமது பக்கமே உள்ளனர் என்பதை மஹிந்த நன்கறிவார். இதனாலேயே ஜனாதிபதித் தேர்தலைத் தற்போது நடத்த வேண்டாமென பல தரப்பினர் வற்புறுத்தி வரும் நிலையிலும் எதிர்வரும் ஜனவரியில் அந்தத் தேர்தலை நடத்துவதில் மஹிந்த உறுதியாக உள்ளார். எது எவ்வாறான போதிலும் இந்த அமைச்சர்கள் ஜனாதிபதி மஹிந்தவின் முடிவை ஏற்று அவரது முடிவுக்கு ஆதரவளித்தாக வேண்டிய நிலையில் உள்ளனர். ஏனெனில் மஹிந்த அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டினால், தத்தமது அமைச்சர் பதவிகளைத் தக்க







வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் அவர்களுக்குண்டு. மஹிந்தவும் இதனை நன்கறிந்துள்ளார். இதனாலேயே குறிப்பிட்ட தரப்பின்ரை அவர்கள் விரும்பியவாறு கருத்து வெளியிட அனுமதித்து ஜனாதிபதி மஹிந்த வாய்மூடி மௌனம் சாதிக்கிறார்.

ஆனால் ஒன்று, இன்று மஹிந்தவுக்கு ஏற்பட்டிருக்கும் நிலை, சிறிமாவோவுக்கோ, ஜே. ஆருக்கோ, பிரேமதாசவுக்கோ அல்லது சந்திரிக்காவுக்கோ தானும் ஏற்பட்டிருக்குமானால் அரசுக்குள் இருந்துகொண்டே அரசை விமர்சித்து வரும் இத்தகைய அமைச்சர்கள் தரப்பினர் தமது அமைச்சுப் பதவிகளைத் தக்க வைத்துக்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டிருக்கும் என்பதே யதார்த்தம்.

# நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 189


# கழுத்து வலி பற்றி உணர்வோம்

எமது நாளாந்த வாழ்க்கைச் செயற்பாடுகளில் கூடியளவு அசைவுக்கு உட்படுவது கழுத்து ஆகும். எமது உடல் அவயவங்களுக்கும் மூல காரணியான மூளைக்கும் இடையில் அமைந்துள்ள தொடர்புபடுத்தும் அங்கம் கழுத்து ஆகும். இதில் ஏற்படுகின்ற வலி வயது வித்தியாசமின்றி எல்லோரையும் பாதிக்கின்றது. கழுத்துவலி என்பது சாதாரணமாக் தட்டிக்கழிக்கக் கூடியதொரு விடயமல்ல. ஏனெனில் மூளையிலிருந்து வருகின்ற நரம்புத் தொகுதியின் நரம்புத் திரட்டுகளும் இதயத்திலிருந்து மூளைக்கும்மற்றைய அவயவங்களுக்கும் குருதியைக் கொண்டு செல்கின்ற இரத்தக் குழாய்களும் ஏனைய தசைநார்களும் ஒருங்கமைந்துள்ளமையால் அவற்றில் ஏற்படுகின்ற பாதிப்புக்களும் கழுத்து வலியாக வெளிப்படுத்தப்படலாம்.

கழுத்துப் பகுதியிலுள்ள எலும்புகளின் அதிர்ச்சிகள் பிரயோகிக்கப்படுதலாலோ அன்றி அடிபடுதல், விழுதல், பாரங்கள் தலையில் விழல் போன்ற செயற்பாடுகளினாலோ கழுத்து முள்ளந்தண்டு எலும்பில் ஏற்படுகின்ற பாதிப்புக்களால் கழுத்துவலி ஏற்படலாம். இதனைச் சாதாரண கழுத்து வலி என்றோ சுளுக்கு என்றோ, கருதி அலட்சியப்படுத்தலாகாது. மேலும் கழுத்து எலும்பு தேய்மானங்களினாலும், நரம்புகள் நசுக்கப்படுவதாலும் கழுத்துவலி அதிகரிக்கலாம். இத்தகைய நிலைமைகளில் வைத்திய ஆலோசனைகளையும் கழுத்து எலும்புகளுக்குரிய அசைவு குறைக்கப்படுதலும் அவசியமாகும். இந்தக் கழுத்துவலி நிலைமை நாளடைவில் தோள்பட்டை வலி, கைவலி, தலைவலி போன்ற நிலைகளுக்கும் இட்டுச் செல்லும். கழுத்து வலிக்குரிய காரணத்தை அறிவதற்கு தற்காலத்திலே பல நடைமுறைகள், நோய் நிதான பரிசோதனைகள் காணப்படுகின்றன. நவீன உபகரணங்கள் மூலம் எலும்பு, நரம்புகள் போன்றவற்றை அறிந்து நோய் நிலையை அறியக் கூடியதாக உள்ளது. பாரம்பரிய முறையிலான சுளுக்கு எடுத்தல், மசாஜ் செய்தல் என்பன தவிர்க்கப்படல் வேண்டும்.

சாய்மனைக் கதிரைகளில் தூங்குவது, உடற்தொழிலியல் செயற்பாடுகளுக்கு முரணானது. கழுத்து முள்ளெலும்புகள் அதிக அழுத்தத்தைப் பெறுகின்றன. இதனால் கழுத்து வலி ஏற்படலாம். தலையில் அதிக பாரம் சுமப்பது பாதிப்பை ஏற்படுத்தலாம்.


மேலும் படுத்திருந்த படி கழுத்தைக் கூடிய மடிப்புக்கு உள்ளாக்கி மேல் நோக்கிப் பார்த்தல் அதாவது தொலைக்காட்சி பார்த்தல் நாளடைவில் இந்த நிலைக்கு இட்டுச் செல்லும். மேலும் பாதிப்புக்கு உள்ளானவர்கள் படுக்கையின் போது உயரம் குறைந்த தலையணையைப் பயன்படுத்த வேண்டும். கழுத்துத் தசையைப் பலப்படுத்தும் அப்பியாசங்களை மருத்துவரின் ஆலோசனையுடன் செய்யலாம். மற்றும் கழுத்துக்கு அசைவை மட்டுப்படுத்துகின்ற உபகரணங்களை மருத்துவ ஆலோசனையுடன் உபயோகிக்கலாம். மற்றும் பார்வைவழி தொழில்நுட்ப உபகரணங்களை பாவிக்கும் போது கண்ணுக்குப் பாதிப்பில்லாமல் கழுத்து மடிப்பு அளவுக்கும் பாதிப்பில்லாமல் 20 வீதம் தாழ்வாக வைத்து பாவித்தல் நல்லது. கூடியபட்சம் அண்ணாந்த நிலையில் (கழுத்து மடிப்பு 90 வீதத்திலும் கூடிய) வேலைகள் செய்வதைத் தவிர்த்தல் நல்லது. எனவே கழுத்துவலி ஏற்படும் வேளை சரியான மருத்துவ ஆலோசனையைப் பெற்று நலமோடு வாழ்வோம்.



சாய்மனைக் கதிரைகளில் தூங்குவது, உடற்தொழிலியல் செயற்பாடுகளுக்கு முர ணானது. கழுத்து முள்ளெலும்புகள் அதிக அழுத்தத்தைப் பெறுகின்றன. இதனால் கழுத்து வலி ஏற்படலாம். தலையில் அதிக பாரம் சுமப்பது பாதிப்பை ஏற்படுத்தலாம்.

*எஸ். பத்மநிருபன்*
*தாதிய உத்தியோகத்தர்*
*(சத்திரசிகிச்சைப் பிரிவு)*
*யாழ். போதனா வைத்தியசாலை.*

# கூனலுக்குக் காரணமான ஒஸ்ரியோபொரசிஸ் (Osteoporosis)




வயது மூப்படையும்போது சிலருக்கு கூனல் ஏற்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்தக் கூனல் ஏற்பட ஒஸ்ரியோபொரசிஸ் என்னும் நோய் நிலைமையே காரணமாகும்.

ஒஸ்டியோபொரசிஸ் என்ற நோய் எலும்புகளின் அடர்த்தி குறைவதனாலேயே ஏற்படுகிறது. இந்த நோய் மனிதர்கள் மூப்படையும் போது தானாகவோ அல்லது வேறு நோய்களின் அல்லது தொடர்ச்சியான சில குறித்த மருந்துப் பாவனைகளின் விளைவாகவோ ஏற்படலாம். இந்த நோய் நிலைமையால் எலும்புகள் வலுவிழந்து உடையும் தன்மை அதிகரிக்கிறது. இதனால் பொதுவாக முள்ளந்தண்டு எலும்புகளே உடையக்கூடிய சந்தர்ப்பம் அதிகரிக்கின்றது.

இந்த நோய் வயது மூத்தவர்களிடம் குறிப்பாக மாதவிடாய் நிரந்தரமாக முடிவடைந்த பெண்களில் அதிகமாக ஏற்படுகிறது. இந்த நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கும் மேலதிக காரணிகளாக பரம்பரைக் காரணி, அதிக மது பாவனை, மூட்டுவாத நோய், மெலிந்த உடல், நீண்ட காலம் அசையாதிருத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இந்த நோய் நிலைமையானது சில ஓமோன்களின் அதிகரித்த அல்லது குறைந்த தொழிற்பாடு காரணமாகவோ அல்லது மூட்டுவாத நோய், ஸ்டீரொய்ட், ஹெபாரின், வலிப்பு மருந்துகள் போன்ற மருந்துகளின் நீண்ட காலப் பாவனை காரணமாகவோ இளம் வயதிலேயே ஏற்படும் வாய்ப்புகளும் காணப்படுகின்றன. கதிரியக்கப்படங்கள், டெக்ஸா ஸ்கான் மற்றும் குருதிப் பரிசோதனை மூலம் இந்த நோய் ஏற்பட்டுள்ளமை மற்றும் அதற்கான காரணிகளும் கண்டறியப்பட்டு அதற்கேற்ப மருந்து வகைகள் மூலமும் உங்கள் வாழ்க்கை முறை மாற்றத்தின் மூலமாகவும் நோய்க்கான சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

அவ்வாறான சில வாழ்க்கை முறை மாற்றங்களாகப் பின்வருவன அமைகின்றன.

1. புகைப்பிடித்தல் மற்றும் மது பாவனையை முற்றாக நிறுத்துதல்.
2. உடல் நிறையைத் தாங்கும் உடற்பயிற்சிகள் எலும்புகளின் அடர்த்தியை அதிகரிக்க உதவுகின்றன.
3. கல்சியம் மற்றும் விற்றமின் டி அதிகம் அடங்கியுள்ள உணவு வகைகளை உட்கொள்ளல்.
4. தவறி விழுதலைத் தடுக்கும் வகையில் வீட்டுச் சூழலை மாற்றியமைத்தல் (கண்பார்வை சிகிச்சை, சூழலை ஒளியூட்டல், கைப்பிடித்து நடக்கக் கூடிய வகையில் வழியை அமைத்தல் - வழுக்காதவாறு பாதையை அமைத்துக் கொள்ளல்).

Dr.சகிலா சிற்றம்பலம்,
*நீரிழிவு சிகிச்சை நிலையம்,*
*யாழ்.போதனா வைத்தியசாலை.*

## மரண அறிவித்தல்



### காளிதாசன் இராசராணி

இணுவிலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கு கோண்டாவிலை (கலட்டிலேன்) வசிப்பிடமாகவும் கொண்ட காளிதாசன் இராசராணி நேற்று முன்தினம் (17.10.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகராசா- சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராதா மற்றும் நகுலாம்பிகை தம்பதியரின் மருமகளும், காளிதாசனின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**கலட்டி லேன்,**
**கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.**
021 791 3330

தகவல்:
**அன்புக் கணவர்.**

(53329)(4.3.6)

## மரண அறிவித்தல்

### சுப்பையா நவரெத்தினம்



புங்குடுதீவு, 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல. 35/1, குமாரவீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா நவரெத்தினம் 15.10.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராம லிங்கம்- நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராசாத்தி அவர்களின் அன்புக் கணவரும், சிவயோகவதி (பிரான்ஸ்), பரலோகவதி (லண்டன்), சிவராமலிங்கம் (லண்டன்), நாகறஜனி, மயூரி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருஷ்ணராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயராசா, மற்றும் மதனியா (லண்டன்), சுஜே ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சண்முகம் மற்றும் தருமலிங்கம் (பிரான்ஸ்), சிவஞானம், பாக்கியம், நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சீதாலெட்சுமி, காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், செந்தி வேல், முத்துலிங்கம், நவரத்தினம் மற்றும் கணேசு, காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, புஸ்பம் மற்றும் சரஸ்வதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெனுசன், மாதுசன், சாரங்கன், காருண்யன், வர்சிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப.10.00 மணிக்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.35/1,
குமாரவீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(53348)(6.4.3)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**நாளை**

ஐப்பசி-03 திங்கட்கிழமை 20.10.2014
திதி: துவாதசி பி.இ.12.06 வரை
நட்சத்திரம்: பூரம் மு.இ.11.43 வரை
சுபநேரம்: 12.02 - 01.32 வரை
இராகுகாலம்: 07.32-09.02 வரை



**மேடம்:** புதிய கோணத்தில் சிந்தித்து பழைய சிக்கலைத் தீர்ப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். திடீர் பயணங்கள் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.



**இடபம்:** துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு பல ஆலோசனைகள் வழங்குவீர்கள்.



**மிதுனம்:** செலவுகளைக் குறைக்கத் திட்டமிடுவீர்கள். உறவினர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நினைத்ததை முடிப்பீர்கள்.



**கடகம்:** பழைய கசப்பான சம்பவங்களைப் பற்றி யாரிடமும் விவாதிக்க வேண்டாம். உதவி கேட்டு உறவினர்களும் தர்ம சங்கடத்திற்கு ஆளாக்குவார்கள். சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விடயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.



**சிங்கம்:** குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் மிகுதிகளை கறாராகப் பேசி வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் மறைமுகப் பிரச்சினைகள் வந்து நீங்கும்.



**கன்னி:** கிடைக்கும் சந்தர்ப்பங்களையும், வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும்.



**துலாம்:** சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் வரும். காணாமல்போன முக்கிய ஆவணம் கிடைக்கும். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள்.



**விருச்சிகம்:** சோர்வு நீங்கி துடிப்புடன் செயற்படத் தொடங்குவீர்கள். புதிய முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நினைத்த காரியம் கைகூடும்.



**தனுசு:** உங்களை அறியாமலேயே ஒரு வித படபடப்பு, தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். நீங்கள் ஒன்று பேசப் போய் மற்றவர்கள் அதை வேறு விதமாகப் புரிந்து கொள்வார்கள். யாரை நம்புவது என்கிற மனக் குழப்பத்திற்கு ஆளாகுவீர்கள்.



**மகரம்:** உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வேற்று மதத்தவர்கள் நண்பர்களாவார்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.



**கும்பம்:** மற்றவர்களுக்காக சில செலவுகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.



**மீனம்:** உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 2 | | | | | 4 | |
| 5 | | | | 2 | | | 6 | |
| 3 | 7 | 1 | 6 | | 8 | 2 | | |
| 7 | | | 4 | 1 | 2 | | | |
| | 4 | | | 9 | | | 1 | |
| | | | 5 | 3 | 7 | | | 4 |
| | | 8 | 3 | | 4 | 6 | 5 | 9 |
| | | | | 6 | | | | 2 |
| | 5 | | | | | | | 3 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 8 | 3 | 9 | 2 | 7 | 5 | 6 |
| 3 | 6 | 2 | 5 | 7 | 8 | 1 | 9 | 4 |
| 5 | 7 | 9 | 1 | 4 | 6 | 2 | 8 | 3 |
| 4 | 9 | 1 | 7 | 6 | 3 | 5 | 2 | 8 |
| 7 | 2 | 3 | 8 | 5 | 4 | 6 | 1 | 9 |
| 8 | 5 | 6 | 2 | 1 | 9 | 4 | 3 | 7 |
| 9 | 1 | 5 | 4 | 3 | 7 | 8 | 6 | 2 |
| 6 | 8 | 7 | 9 | 2 | 1 | 3 | 4 | 5 |
| 2 | 3 | 4 | 6 | 8 | 5 | 9 | 7 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

கனடாவில் கல்வி
கல்வி
வேலை
வதிவிடம்

CANADIAN COLLEGE
FOR HIGHER STUDIES
www.thecanadiancollege.ca
705 Progress Ave - Unit 108, Toronto, ON M1H 2X1
T: (416) 850-1456 E: learn@thecanadiancollege.ca

Study in Canada
Spot Admission



எமது பாடநெறிகள்
System Administration (UNIX)
Network (LAN/WAN) Administration
Post Graduate Diploma in Enterprise IT Management

Apply Now with O/L & A/L for
Jan- Apr-June-Sep 2015 Intake

இலவச கருத்தரங்கு மற்றும் உடனடி அனுமதி
நவம்பர் மாதம் 1ம் மற்றும் 2ம் திகதிகளில்
காலை 10.00 மணியிலிருந்து பகல் 1 மணி வரை
வெள்ளவத்தை FLEX INSTITUTE இல் நடைபெறும்.

தயவு செய்து உங்கள் கல்வி ஆவணங்களைக் கொண்டு வரவும்.
விசாரணைகள் மற்றும் பதிவுகளுக்கு அழையுங்கள் - 0777 761 346

You can meet president of
... College for
Canadian College ...
Higher Studies and UWIN Pro

flex institute
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Tel: 2501 766 E-mail: flexinstitute@sltnet.lk
Web:www.flexinstitute.lk

(C. 17101)
FLEX Graphic


ICEMAN®
Technologies (Pvt) Ltd.,
Unrivalled leader in complete cold chain solutions

சகல குளிர் சாதனங்களுக்குமான மொத்த தீர்வு வழங்குனர்

நமது பலம்
1. ஈடு இணையற்ற அனுபவம் வாய்ந்தவர்களை கொண்டது.
2. உலக தரத்திற்கான தயாரிப்புகள் - சிறந்த கூட்டுறவாளர்கள்
3. வாடிக்கையாளர்கள் வேண்டுகோளுக்கமைய அமைக்கப்பட்டது மொத்த தீர்வுக்கான உத்தரவாதம்
4. நற்தகைமையுள்ளோர், கடல் கடந்த நாடுகளில் பயிற்சியும், அனுபவமும் பெற்ற தொழில் நிபுணர்கள்
5. 24 மணித்தியாலம் / 365 நாள்கள் / வாரந்தோறும், திருத்த வேலைகள் செய்து தரப்படும்
6. நவீன முறைப்படி அமைக்கப்பட்ட Work Shop, சகல விதமான உதிரிப்பாகங்களும் களஞ்சியப்படுத்தப்பட்டது.
7. தொடர்ச்சியான ஆராய்ச்சியும், அபிவிருத்தியும்

Sales Inquires
0112239444 | 0777237546
45, St.Theresa Mw., Rilaulla,Kandana 11320, SRI LANKA.
No.04, Krishnapillai Road, Eachchamodda, Jaffna.
Fax: 011 4830819, E-mail: suresh@icemanlk.com
www.icemanlk.com

GEA Copeland Carrier
LU-VE HEATCRAFT incold





# பாதுகாப்பு அமைச்சின் தடை அதிருப்தியில் மேற்குலகம்!

## அரசின் நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார் பாக்கியசோதி

கொழும்பு, ஒக்.19
வடக்கு செல்லும் வெளிநாட்டவர் தமது அனுமதியைப் பெற்றுத்தான் அங்கு செல்ல வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு விடுத்திருக்கும் அறிவிப்பால் மேற்குலக நாடுகள் அதிருப்தியடைந்துள்ளன என்று மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.

வெளிநாட்டவர் வடக்கு செல்வதற்குப் பாதுகாப்பு அமைச்சு விதித்துள்ள தடை குறித்து கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 5 வருடங்கள் கடந்துள்ள நிலையில், பாதுகாப்பு அமைச்சு இவ்வாறான தொரு நடவடிக்கையை எடுத்துள்ளமை புதுமையாக உள்ளது. இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருக்கின்றதா என்று மேற்குலகத்தினர் கேள்வி எழுப்புகின்றனர். அரசின் இந்த நடவடிக்கையானது மேற்குலக நாடுகளுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

போரின் பின்னர் இலங்கையின் சுற்றுலாத்துறை முன்னேற்றம் கண்டு வருகின்றது. இவ்வாறான நிலையில், வடக்கு செல்லும் வெளிநாட்டவர் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் தான் அங்கு செல்ல வேண்டும் என்று அரசு அறிவித்திருப்பது சரியானதல்ல. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கைக்கு சுற்றுலா செல்ல தாம் தயார். ஆனால், பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றுத்தான் வடக்கு செல்லவேண்டும் என்பது தமக்கு விருப்பமில்லை என்று மேற்குலகத்தினர் கூறுகின்றனர்.

பாதுகாப்பு அமைச்சு விதித்திருக்கும் தடைக்கமைய, வடக்கிலுள்ள தமது உறவுகளைப் பார்க்கவரும், வெளிநாட்டவர்களும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றுத்தான் அங்கு செல்லவேண்டும். தமது உறவுகளைக்கூட சுதந்திரமாக சென்று பார்க்க முடியாத அவல நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதனை அனுமதிக்க முடியாது - என்றார்.

## பரிசில் நாள் விழா

தென்மராட்சி, ஒக்.19
மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் வித்தியாலயம் பரிசில் நாள் விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய கலை அரங்கில் அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும். நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மகேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக வலயக் கணக்காளர் திருமதி சி.நந்தகுமாரும், கௌரவ விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர் திருமதி அ.கமலநாதன், வித்தியாலய பழைய மாணவரும் ஓய்வு நிலை இ.போ.ச. உத்தியோகத்தருமான வி.சிவசம்பு ஆகியோரும் கலந்து கொள்வர். கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்கள் கௌரவிப்பும் இடம்பெறும்.
(ஓ-9)

## பல்கலை. மலர்வளையம் பொய்யான செய்தியாம்

### கடிதம் அனுப்பியிருக்கிறார் பதிவாளர்

யாழ்ப்பாணம், ஒக்.19
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த 11ஆம் திகதி பதிவாளர் அலுவலகத்தின் முன்பாக மலர் வளையம் வைக்கப்பட்டது என்று 'உதயன்' பத்திரிகையில் வெளியான செய்தி தவறானது என்று பல்கலைக் கழகப் பதிவாளர் வி.காண்டீபன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

"உதயன்' செய்தியில் முதலாவது பேரவைக் கூட்டம் ஆரம்பமான நிலையில் பதிவாளர் அலுவலகத்தின் முன்பாக இனந்தெரியாதவர்களால் மலர் வளையம் வைக்கப்பட்டுள்ளது என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு என எழுதப்பட்ட வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது என்றும் அதனை யார் வைத்தார்கள் என்பது அங்குள்ள எவருக்கும் தெரியாது என்றும் கூறப்பட்டிருப்பவை பிழையானவைகள்."

இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இவ்வாறு திரிபுபடுத்தப்பட்டதும் உள்நோக்கமுடையதும் மிகவும் பிழையானதும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்த முனைவதுமான செய்தியை வெளியிட்டதற்காக உதயன் பத்திரிகை பொறுப்பேற்று பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும்" என்றும் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*ஆசிரியர் குறிப்பு:*

*1. மலர் வளையம் வைக்கப்பட்டிருந்ததை பல்கலைக்கழக ஊழியர்கள் பலர் அன்றைய தினம் நேரில் பார்த்திருக்கிறார்கள். உதயன் பத்திரிகையிடம் அவர்கள் அதனை உறுதிப்படுத்தியிருந்தார்கள். அதன் பின்னரே அந்தச் செய்தி வெளியிடப்பட்டது. பதிவாளரின் கடிதம் கிடைத்த பின்னரும்கூட அவர்களிடம் விசாரித்தபோது மலர்வளையம் வைக்கப்பட்டிருந்தது உண்மை என்று அவர்கள் மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். மலர் வளையம் அலுவலகத்தில் இருந்த சமயம் பதிவாளர் எந்தத் தொழிற்சங்கத் தலைவருடன் பேசிக்கொண்டிருந்தார் என்பதற்கும் சாட்சிகள் இருக்கின்றார்கள். ஒருவர் இருவரல்லர்; பலர்.*

*2. பதிவாளர் வி.காண்டீபன் குறிப்பிட்டதுபோல யாழ். பல்கலைக்கழகத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் திரிபுபடுத்தியும் உள்நோக்கத்துடனும் பிழையாகவும் செய்தி வெளியிடவேண்டிய தேவை ஏதும் 'உதயன்' பத்திரிகைக்குக் கிடையாது.*

*யாழ். பல்கலைக்க[illegible] [illegible] தமி[illegible] [illegible]டுத்தலைப் பயணத்தில் ஆற்றிய பங்களிப்புக் குறித்தும் அதன் மாணவர்கள் தமிழ்ச் சமூகத்திற்கு ஆற்றிய அளப்பரிய பணிகள் குறித்தும் மிகச் சிறந்த முன்னாள் துணைவேந்தர்கள் சிலர் இனத்துக்கும் சமூகத்துக்கும் பல்கலைக்கழகத்திற்கும் ஆற்றிய பங்களிப்பு, அதன் மதிப்புக் குறித்தும் இன்று பதவியில் இருக்கும் பலரை விட உதயன் பத்திரிகைக்கு மிக நன்றாகவே தெரியும். பல்கலைக்கழகத்துடன் கூடவே பயணித்த வரலாற்றையும் கொண்டது உதயன். எனவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மீது கறைபூசும் தேவை ஏதும் உதயனுக்கு இல்லை; அதனை ஒருபோதும் உதயன் செய்யவும் மாட்டான்.*

*பல்கலைக்கழக உயர் நிர்வாகிகள் சிலர் தமது அரசியல் விசுவாசத்தைக் காட்டுவதற்காக உதயன் பத்திரிகைக்கு எதிராகச் செயற்படுகின்ற போது அது தமது பதவியைத் தக்க வைப்பதற்காகத் தனி மனிதர்கள் செய்யும் சுயநலத்துடனான கீழ்மை என்பதைப் புரிந்துகொள்வதற்குப் போதிய அறிவும் அனுபவமும் உதயன்' பத்திரிகையிடம் இருக்கிறது. எனவே அதற்காகக்கூட பல்கலைக்கழகத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் தேவை உதயனுக்குக் கிடையாது.*

*3. கிடைத்த தகவலை வெளியிடும்போது உரியவர்களிடம் அந்தச் செய்தியின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வது ஒரு கடமை என்று பதிவாளர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். 'உதயன்' அதனை ஏற்றுக்கொள்கிறது. ஆனால், எந்தவொரு விடயம் குறித்தும் விளக்கம் கேட்பதற்காகத் தொடர்பு கொண்டால், 'உதயன்' என்ற பெயரைக் கேட்ட உடனேயே தொடர்பு துண்டிக்கப்படுவது தான் பதிவாளர் தரப்பில் வழக்கமானது என்பதை அவர் இதனை எழுதுவதற்கு முன்பாக இலகுவாக மறந்துவிட்டார். விளக்கத்தைச் சொல்வதற்குத் தயாராக இருப்பவர்களிடமிருந்து தான் அதனைப் பெற்று வெளியிடமுடியும் என்ற யதார்த்தத்தையும் பதிவாளருக்கு 'உதயன்' ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது.*

*4. முள்ளிவாய்க்கா[illegible] நினைவு [illegible]த்தையொட்டி யாழ். பல்கலைக்கழகம் ஒருவார காலம் இழுத்து மூடப்பட்டபோது, அது தொடர்பான பேரவையின் முடிவு பற்றிய அறிவித்தல் கடிதத்தை பீடாதிபதிகளுக்கு பதிவாளரே கையெழுத்திட்டு அனுப்பி வைத்திருந்தார். அது பற்றிய தகவலை உறுதிப்படுத்த உதயன் தொடர்பு கொண்டபோது "நான் [illegible] பில் [illegible] [illegible]வடுப் [illegible]றாகிறேன்" என்பதே அவர் அளித்த பதில் என்பதையும் இங்கு நினைவுகூருவது பொருத்தமானது.* (ஆ-ர்)

## மோ. சைக்கிளில் சென்ற இளைஞர் தூக்கி வீசப்பட்டார்

நாவற்குழியில் ஏ-9 வீதியில் ஹன்டர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணத்தவர் தூக்கி வீசப்பட்டு கையில் பாதிப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்திணம் இரவு இடம்பெற்றது.

பாதிப்புக்கு உள்ளான மீசாலை வடக்கு சுட்டான்குளப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் பிரதீஸ் (வயது-24) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-9)


## மின்சாரம் தாக்கியதால் சிப்பாய் சாவு

வடமராட்சி, ஒக். 19
மின்சாரம் தாக்கிய நிலையில் கற்கோவளம் இரணுவ முகாமிலிருந்து இராணுவச் சிப்பாய் ஒருவரின் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் நேற்று பிற்பகல் 2.40 மணியளவில் இராணுவத்தினரால் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

மாத்தளை மாவட்டம் லக்கல நாதகலவைச் சேர்ந்த திபத் பிரியபண்டார (வயது- 26) என்ற சிப்பாயின் சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த சடலம் பிரதே பரிசோதனைக்காகப் பருத்தித்துறை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகளும் நடைபெற்று வருகின்றன.
(த-109-173)

## சிறுவர்களின் கல்வி ஒருபோதும் ஏழ்மையால் தடைப்படக்கூடாது

### சரவணபவன் எம்.பி தெரிவிப்பு




யாழ்ப்பாணம், ஒக். 19
இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள். அவர்களது அடிப்படைக் கல்வி இன்றியமையாதது. அவர்களுக்கான கல்வி ஏழ்மையினால் என்றுமே தடைப்பட்டுவிடக்கூடாது. நாளைய நம் சமுதாயத்தினை வளர்த்தெடுக்கும் முக்கிய பணி எம் பலருக்கும் உண்டு. இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அரியாலை பூம்புகார் கிராம மக்களுக்கு உடுபுடைவைகள் வழங்கும் நிகழ்வில் தெரிவித்தார்.

அரியாலை பூம்புகாரைச் சேர்ந்த ஏழை மக்களுக்கு உதவும் பொருட்டு அவர்களுக்கான உடுபுடைவை வழங்கும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது. சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த ஆலயமொன்றின் உதவியுடன் யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு இடம்பெற் றது.

இந்த நிகழ்வில் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் பயன்பெற்றனர்.

அந்த மக்கள் கருத்து தெரிவிக்கையில் தமது கிராமம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகமுமே தமக்கான பெரும்பாலான உதவிகளைச் செய்து வருவதாகவும், அவர்களுக்கு தாம் மிகவும் கடமைப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

மேலும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் மக்களது குறைகளைக் கேட்டு அறிந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் யாழ்ப் பாணம் றோட்டறிக் கழக தலைவர் றோட்டேரியன் அனுராஜ், கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டு மக்களுக்கான உதவியை வழங்கினர்.
(த)

## மருத்துவர் உட்பட இருவர் அம்புலன்ஸ் விபத்தில் சாவு

### சிலாபம் வீதியில் சம்பவம்



புத்தளம், ஒக். 19
புத்தளம் - சிலாபம் பிரதான வீதியின் பத்துளு ஓயா 61 ஆவது மைல் கல் பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் அம்புலன்ஸ் வாகனமொன்று லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த மருத்துவர் ஒருவரும் வைத்தியசாலை சிற்றூழியர் ஒருவரும் உயிரிழந்ததுடன் அதன் சாரதி உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் ஆதார வைத்தியசாலையில் இருந்து நோயாளி ஒருவரைச் சிலாபம் ஆதார வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுமதித்து விட்டுத் திரும்பும் வழியில் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றுடன் அம்புலன்ஸ் மோதியமையே இந்த விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

இதன்போது புத்தளம் ஆதார வைத்தியசாலையில் கடமை யாற்றும் பெண் ம[illegible]ருத்துவரும் கொத்[illegible]ந்தீவு கிராமிய வைத்தியசாலையில் கடமையாற்றும் மதுரங்குளி கணமூலையைச் சேர்ந்த சிற்றூழியர் ஒருவருமே உயிரிழந்ததாகவும், உயிரிழந்தவர்களின் சடலங்கள் சிலாபம் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, விபத்துடன் தொடர்புடைய அம்புலன்ஸ் சாரதி காயங்களுடன் சிலாபம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
(த)

சர்வதேச அங்கீகாரம் பெற்ற
விமானப் பயணச்சீட்டு முகவர் நிறுவனமான

IATA Accredited Agent

METRO
Travels & Tours (Pvt) Ltd.

எமது சேவைகள். . . . .

* மிகக் குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்.
* இந்தியா, மலேசியா, தாய்லாந்து, சீனா ஆகிய நாடுகளுக்கான விசா சேவைகள்.
* சகல நாடுகளுக்குமான பயணக் காப்புறுதிகள்
* உள்ளூர், வெளியூர் பிரயாணிகளுக்கான சுற்றுலா வசதிகள்
* குழு பிரயாண வசதிகள்
* வெளியூர் பிரயாணிகளுக்கு விசா புதுப்பித்தல்
* சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தி ஒழுங்கமைத்தல்.

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.

**METRO TRAVELS & TOURS (Pvt) Ltd,**
#272/1, Stanley Road, Jaffna, Sri lanka.
**Tel: +940212224647, +94 212217199, +94 777881115**
Email: Jesurah@metrotravels.lk
(இ16738) (12.3.6)

# கடைகள் எரிப்பு; சந்தேகநபர்களுக்கு தொடர்ந்து மறியல்

தென்மராட்சி, ஒக்.19

கொடிகாமம் பொதுச் சந்தையில் கடைகளைஉ எரித்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள மூவரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

கடந்த பத்தாம் திகதி இரவு சந்தைக்குள் பிரதேச சபைக்குச் சொந்தமான நான்கு கடைகள் எரிந்த சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸாரால் கடந்த 11 ஆம் திகதி இருவரையும் 14 ஆம் திகதி ஒருவரையும் நீதிமன்றில் முற்படுத்திய போது வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேகநபர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் நேற்றுமுன்தினம் அடையாள அணி வகுப்பை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறும் பொலிஸா ரைப் பணித்தார்.

நேற்றுமுன்தினம் அடையாள அணி வகுப்பு நீதிமன்றக் கட்டடத்தில் இடம் பெற்றது. சாட்சிகள் இருவரும் அடையாளம் காட்டத் தவறினர்.

வழக்குவிசாரணைக்கு எடுக்கப்பட்ட போது மூவரையும் எதிர் வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான்செ.கணபதிப்பிள்ளை உத்தரவிட்டார். (ஒ-9)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பத்மலிங்கம் - அபிராமி
தம்பதியரின் செல்வப்புதல்வன்
**ப. ஆதித்தியன்**
யாழ்.புனித ஜோன்பொஸ்கோ
வித்தியாலயத்தில்
கல்வி கற்று 2014 தரம் 5 புலமைப் பரிசில்
பரீட்சையில் 161 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்துள்ளார். இவர் கல்வியில்
மேன்மேலும் சாதனைகள் படைக்க
வாழ்த்துகின்றோம்.

Congratulations
Best wishes

வாழ்த்துவோர்:

மாமா குடும்பம்
திரு.திருமதி கு.ஜெயந்தன்
சித்தப்பாமார்
திரு.திருமதி பூ.பத்மகரன்
திரு.திருமதி பூ.லிங்கநாதன்

மச்சான்மார்
ஜெ.சஞ்ஜீவ்சரண்
ஜெ.யதுசன்
ஜெ.சதுர்த்திகன்
தங்கைமார்
ப.தருணிகா, லி.வைசாலி

(53339)(12.3.6)

## அழகுக்கலை பயிற்சி



சுவீடன் நாட்டு நிறுவனத்தின் யாழ் சேவை நிலையத்தினால்
தீபாவளியை முன்னிட்டு 20% கட்டணக் கழிவில்...
இந்தியாவில் விசேட பயிற்சி பெற்று சிறப்புப் பெற்ற ஆசிரியையினால்...
- டிப்ளோமா அழகுக்கலை பயிற்சிகள்
- துரித ஒரு மாத கால அழகுக்கலை பயிற்சிகள்
- கேக் ஐசிங் பயிற்சிகள்

அனைத்தும் மிகக் குறைந்த கட்டணத்தில் ஆரம்பமாகவுள்ளன.

அனைத்துப் பயிற்சிகளும் இந்திய முறைப்படி கூடுதலான செய்முறை விளக்கத்துடன் இடம்பெற்று ஒவ்வொரு மாணவர் மீதும் தனித்தனியாக கவனம் செலுத்தப்பட்டு பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பிரிவு 1: 21.10.2014 அன்று 10.00 மணிக்கு
பிரிவு 2 : 25.10.2014 அன்று 10.00 மணிக்கு

குறிப்பு : பயிற்சியை நிறைவு செய்த பழைய மாணவர்களும் இப்பயிற்சியில் இணைந்து கொள்ளலாம்.

பதிவுகளையும் மேலதிக விபரங்களையும் பெற்றுக்கொள்ள 25.10.2014 இற்கு முன்னர் அலுவலக நேரத்தில் வருகை தரவும்.
நிறுவன அமைவிடத்தை அறிந்து கொள்வதற்கு தொடர்புகொள்ள - 021 454 6026

(53320)(7.6.3)

**ஓறிபிளேம்** 616, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (வேம்படி சந்தியில்)

## நீங்கள் அறிவீர்களா?

கண்ணுக்குப்புலப்படாத எண்ணற்ற கொடிய நோய்களைப் பரப்பும் கிருமிகளும் நுண்ணங்கிகளும் நாம் அருந்தும் சுத்திகரிக்கப்படாத நீரிலும் அதனால் தயாரிக்கப்படும் உணவிலும் உள்ளடங்கியிருப்பதை அறிவீர்களா?



தாமதம் வேண்டாம் !!!
100% சுத்தமான நீரை பெற்றுக்கொள்ள எங்கள் தரமுயர்ந்த - HYPER - (USA Standard) இயந்திரங்களை விசேட விலைக்கழிவுடன் நிறைந்த உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள இன்றே ஓடர் செய்யுங்கள்.

தீபாவளியை முன்னிட்டு 2000/= விலைக்கழிவு

எமது மேலதிக சேவைகள்
- வீடு,தொழிற்சாலை,Hotel,Restaurant இற்கானசகல நீர் சுத்திகரிப்புக்குத் தேவையான இலவச நிபுணத்துவ ஆலோசனைகளும், வடிவமைத்து நிறுவுதலும்.
- நீர் சுத்திகரிப்புக்குத் தேவையான சகல விதமான இயந்திரங்களும் உதிரிப்பாகங்களும் நேரடியாக இறக்குமதி செய்து விநியோகித்தல்.
- விவசாய பயிர்ச்செய்கைகளுக்கான நீர்ப்பாசன முறைமைகள் விநியோகித்து வடிவமைத்துத் தரப்படும்.

**Ceylon Green Consultants (Pvt)Ltd** Mob :- 077 3626230
341, K.K.S Road, Jaffna. T/F:- 021 2226888
E - ram@ceylonegreen.com (53325)(4.3.6) W - www.Ceylongreen.com

## ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம் (வ-து)
## பதவி வெற்றிடம்

கீழ்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01.வர்த்தக முகாமையாளர்** -குறியீட்டு இல 106/10
**சம்பளத்திட்டம்** - 10700-120x 10-130x 10-13200 (66/2006 சுற்று நிருபப்படி)

**01.தகைமைகள்:**
(அ) கூட்டுறவு பணியாளரின் 11 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளரின் 12 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்.
அல்லது
(ஆ) கூட்டுறவு பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) / க.பொ.த. (உயர்தரம்) இல் 03 பாடங்களிலான சித்தியும் சந்தைப்படுத்தல், வழங்கல், பொருள் விநியோகம், பொருள்களின் இறக்குமதி, ஏற்றுமதி என்ற துறை களில் ஒன்று அல்லது மேற்பட்டவற்றின் மேற்பார்வை மட்டத்திலான பதவி யில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

**02.களஞ்சியப் பொறுப்பாளர்**-குறியீட்டு இல 202/13
**சம்பளத்திட்டம்** - 9950-85x10-90x10-11700 (66/2006 சுற்று நிருபப்படி)

**தகைமைகள்:**
(அ) கூட்டுறவு பணியாளரின் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட் டுறவுப் பணியாளர் 202/15 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட பகுதியில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்
அல்லது
(ஆ) கூட்டுறவுப் பணியாளர் சாதாரணதரம் சித்தி அல்லது க.பொ.த (சாதாரண தரம்), தமிழ், கணிதம் / வர்த்தக கணிதம் / எண்கணிதம் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் மேற்குறித்த பதவியில் 02 வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

**03.தட்டெழுத்தாளர்**- குறியீட்டு இல 305/15
**சம்பளத்திட்டம்** - 9450-75x 10-80x 10-11000 (66/2006 சுற்று நிருபப்படி)

**தகைமைகள்:**
(அ) க.பொ.த(சாதாரண தரம்) சான்றிதழ் தொடர்புபட்ட மொழி உட்பட 06 பாடங் களில் சித்தியும் சிங்கள, தமிழ் தட்டெழுத்து நிமிடத்திற்கு 20 சொற்கள் ஆங்கிலமாயின் 30 சொற்கள்.
* கணினி அறிவு அவசியம்

**02. வயதெல்லை:18-45 வரை**

**விண்ணப்ப முடிவுத்திகதி:10.11.2014**

**குறிப்பு:**
01.சங்க எல்லைப் பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
02.சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.
03.வேறு சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.
04.சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்த வேண்டும்.
05.சுற்று நிருபங்களுக்கு அமைய மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
06.விண்ணப்பங்கள் யாவும் சுயமாக தயாரித்து நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்ப வேண்டும்.
07.விண்ணப்ப கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.
08.விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

**பொது முகாமையாளர்,**
(51663)(4.6.3) **ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம், ஊர்காவற்றுறை.**




**Finished A/L's in August?**

ஏன் நீங்கள் உங்கள் உயர்கல்வியை ஆஸ்திரேலியா / நியூசிலாந்து ஆகிய நாடுகளில் தொடரக் கூடாது?

Macquarie University of Sydney, பிரதிநிதிகளை சந்தித்து Engineering, IT & Science துறைகள் தொடர்பான வாய்ப்பு மற்றும் புலமைப்பரிசில்கள் தொடர்பான விவரங்களை அறிந்து கொள்ளலாம். மற்றும் edlocate இன் ஆலோசகர்களை சந்தித்துக் கலந்துரையாடுவதன் ஊடாக 22 Australian universities & New Zealand universities தொடர்பான விவரங்களை நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.

Apply with pending A/L results for Feb'15 Intake and be eligible to have **IELTS** coaching Free

**Date: 27th October 2014**
**Time : 11am- 2pm**
**Venue: IIS City Campus**

Students & Parents are welcome for **FREE** one on one **counseling sessions**

**Study Abroad by Edlocate at IIS**

edlocate
www.edlocate.lk

IIS CITY CAMPUS
IIS Study Abroad Centre 100, Clock Tower Road, Jaffna.

Call
**021 222 8060**
**021 222 2831**
for appointments
Tamil speaking staff in attendance

# விற்பனை

## யாழ்.சுண்டுக்குளியில் வீடு விற்பனைக்கு
யாழ்.சுண்டுக்குளியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
(53225) தொடர்பு: இல.16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 077 614 6434

## கொழும்புத்துறையில் வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, சுவாமியார் வீதியில் 2 பரப்பு 11 ¼ குழியுடன் கூடிய சகலவசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
(53226) (12.3.6) தொடர்பு: 077 614 6434

## தென்மராட்சியில் காணி விற்பனை
தென்மராட்சி, தென்மராட்சிப்பகுதி, சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவு, சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கொல்வில்லைப் பெருமாளம் மறுபிரிவுகளும் நிலப்பரப்பு 10 உடைய காணி விற்பனைக்குண்டு.
(51964) (12.3.6) தொடர்பு: 077 603 4341

## காணி விற்பனைக்கு
சுன்னாகம் மத்தி, உதவி அரசாங்க அதிபர் செயலக வீதியில் (A.G.A. Office Lane) அமைந்துள்ள "யாந்திரை" என்னும் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நல்ல குடியிருப்பு சூழலில் வீடு கட்ட உகந்த ஆதனம்.
தொடர்பு: (53350) (7.6.3)
077 129 8159

## அராலி வீதியில் பெக்டரி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், அராலிவீதியில் அமைந்துள்ள பெக்டரியில், யோகட், கப்ஜூஸ் பீ(f)ரஸ், ஜூஸ், கோடியல், சோஸ், ஜாம் போன்றவற்றை உற்பத்தி செய்யக் கூடிய சகல வசதிகளும் கொண்ட கட்டடம் விற்பனைக்குண்டு.
(53261) தொடர்பு: 077 367 0822

## விற்பனைக்கு
புத்தம்புதிய 2014 செப்டெம்பர் வகைகள் Honda Vezel Z Grade யாழ்ப்பாணத்தில் பல வர்ணங்களில் விசேட விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: (c/16979)
071 274 1120

## வீடு விற்பனைக்கு
பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக அருகில் அமைந்திருக்கும் அதிநவீன வசதிகளுடன் கூடிய புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் மேல்மாடி வீடு (6 அறைகள், 2 ஹோல், சமையலறை) முழுவதும் மாபிள் பதித்தது, வாகனத் தரிப்பிடத்துடன்) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு :077 819 8223 (53358) (5.6.3)

## காணி விற்பனைக்கு
- சுன்னாகம் பழைய பொலிஸ் நிலைய வீதியில் (பெசன் கவுஸ்) பின்பக்கம் 5 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
- சுன்னாகம் வங்கி வீதியில் ரயில்வே கடவைக்கு பக்கத்தில் 11 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :
021 224 0567
071 803 4207
(53313)(7.6.3)

## வீடு, காணி விற்பனைக்கு
கோப்பாய் வடக்கு பிராமனோடையில் பிரதேச செயலகத்திற்கு அருகில் 5 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 044 9243 (சி/17119) (7.6.3)

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், கச்சேரிக்கு அண்மையாக கச்சேரி-நல்லூர் வீதியில் 1¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 614 6434 (53311)(4.6.3)

## குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்கு
கடைகளில் பாவிக்கும் 6'X4' நீளமுடைய பாவித்த குளிர்சாதனப் பெட்டி உடன் விற்பனைக்குண்டு.
(சி51968) (12.3.6) தொடர்பு: 077 843 2056 வல்வெட்டித்துறை.

## கார் விற்பனைக்கு
Toyota corolla 121, G - Grade, Japan, Gold color, Automatic, Full Option, KA - 17xx, Security System.
(53293) (12.3.6) தொடர்பு: 077 157 9869

## வாகனங்கள் விற்பனைக்கு
PP - XXXX இலக்கமுடைய பட்டபடி Red Colour, G S - XXXX லான்மாஸ்டர், 201 - XXXX ஓட்டோ என்பன உடன் விற்பனைக்கு உள்ளன.
தொடர்பு:
(சி17054) (12.3.6) 077 526 8772/077 817 8765

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
52 நாள்கள் நிரம்பிய உயர்ந்தரக ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தடுப்பூசி போடப்
(53046) (12.3.6) தொடர்பு: 077 755 6244

## சுண்டுக்குளியில் வீடு விற்பனைக்குண்டு
சுண்டுக்குளியில் 2 பரப்புக் காணியில் 4 அறையும், 2 ஹோல், முழுவதும் மாபிள் பதித்த நல்ல தண்ணீர் கிணற்றுடனும் சகல வசதிகளுடனும் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: இல.16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(53224) 077 614 6434

## விற்பனைக்கு
சினைப்பசு, கடா ஆடும், நாம்பன் மாடும், வேப்பமரமும், இலுப்பை மரமும் விற்பனைக்குண்டு.
P.V.சூரியர்
10,கஸ்தூரி வீதி, கொக்குவில் மேற்கு.
(53362) (5.3.6) 021 222 7217

## இயற்கைப் பூக்கள் விற்பனை
உங்கள் வைபவங்களுக்குத் தேவையான பூக்கள் (ரோஜா, எஸ்டமேனியா, செவ்வந்தி) மற்றும் பலவகைப் பூக்களையும் பெற முடியும். முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.
தொடர்பு: 077 390 7335 (53344) (7.6.3)

## வயல் விற்பனைக்கு
யாழ்ப்பாணம், நாவற்குழியில் நெணியன்வெளியிலுள்ள 24 பரப்பு வயல் விற்பனைக்கு உண்டு. எதிர்பார்க்கப்படும் விலை ஒரு பரப்பு ரூபா.25,000/= பேசித் தீர்க்கலாம்.
தொடர்புகளுக்கு:
0716234045

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
Honda Shine விற்பனைக்கு (20000 km ஓடியது) or மாற்றுவதற்கு Herohonda Hunk or Super Spelendor or Plusar 180/150
(53306) (12.3.6) தொடர்பு: 077 035 8197

# மணமக்கள்

## மணமகள் தேவை
இந்து கௌரவ குடும்பம், 1981 ஆம் ஆண்டு கடகராசி பூச நட்சத்திரம் 4ஆம் பாதம், கி.பா.8 சொந்த தொழில் செய்ப வருக்கு தகுந்த மணமகள் தேவை.
தொடர்பு: 077 834 1260 (53342) (7.6.3)

## மணமகன் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 29 வயதுடைய லக்கினத்தில் செவ்வாய், பாவம் 58, கனடா PR உள்ள படித்த மணமகளுக்கு படித்த மணமகன் தேவை. தரகர்கள் தேவையில்லை.
(53304) (12.3.6) தொடர்பு: 071 847 5162

## மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த BSc படித்த மணமகன்களுக்கு தகுந்த மணமகள்களை எதிர்பார்க்கிறோம். வயது 29 உயரம் 5'10", பரணி U.K PR மணமகனுக்கும் வயது 44 உயரம் 5'8" Norway PR மணமகனுக்கும் வயது 32 உயரம் 5'10" Canada PR மணமகனுக்கும் அழகிய மணமகள் களை எதிர்பார்க்கிறோம். www.friendsmatrimony.com தொடர்பு : 011 722 1674 (சி/17116)(7.6.3)

# வேலைவாய்ப்பு

## வேலைக்கு ஆள்கள் தேவை (கடை)
கணினி அறிவுள்ளவர் தேவை. யாழ் நகரை அண்டிய பகுதியில் உள்ளவர் மட்டும்.
தொடர்பு : 077 147 9485 (53343) (7.6.3)

## ஆசிரியர் தேவை
CIL நிறுவனத்துக்கு Spoken Sinhala கற்பிக்கக் கூடிய ஆசிரியர் தேவை.
Ring/Send your CV : 077 738 2108 or CIL, 39/4A, 3rd Lane, Power House Road, Jaffna. (53314) (7.6.3)

## வீடு, குழந்தை பராமரிப்பாளர் தேவை
சிறிய குடும்பம் ஒன்றுக்கு இந்திய துணைத் தூதரகத்துக்கு அண்டிய 5 மைல் சுற்றளவுக்குள் வீடு, குழந்தை (1½ வயது) பராமரிப்பாளர் தேவை.
தொடர்பு: (53240) (12.3.6)
077 436 4898/077 658 9434

## பணிப்பெண் தேவை
யாழ்.நகரில் வசிக்கும் மூன்று பேர் கொண்ட வைத்திய குடும்பம் ஒன்றுக்குத் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
தொடர்பு:072 224 2220/077 967 2613 (53351)(4.6.3)

# வாடகைக்கு

## கடை வாடகைக்கு
கிளிநொச்சியில் கனகபுரம் வீதியில் HNB வங்கிக்கு அருகாமையில் சகல வசதிகளுடனும், சகல வியாபார நிலையத்திற்கும் ஏற்ற கடை வாடகைக்கு வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0772533390

## வீடு வாடகைக்கு
55, பலாலி வீதி, கந்தர்மடத்தில் அலுவலகம்/களஞ்சியத்துக்கு உகந்த வாகனத் தரிப்பிட வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 077 755 8340 (சி/17120) (7.6.3)

## அறைகள் நாள் வாடகைக்கு
ஒருவருக்கு 600/=, இருவர் 1300/=, நால்வர் 2000/=
6 Hours 450/= ஒருவருக்கு
**Hotel Villa City**
422, Galle Road, Wellawatte
T.P: 072 255 22 22. (C/17121) (10.6.3)

## வீடு வாடகைக்கு விடப்படும்
யாழ்.ஆஸ்பத்திரிவீதியில் சென்பீற்றேர்ஸ் லேனில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: (53278) (12.3.6)
077 918 4002/077 543 3062

## வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதி, யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் மூன்று அறையுள்ள சகல வசதியுடன் வீடும், அத்துடன் வேலை பார்க்கும் பெண்கள் அல்லது கல்வி கற்கும் மாணவிகளுக்கு அறைகளும் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: (53322) (7.6.3)
இல. 831/34, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
021 222 1781

## கட்டடம் வாடகைக்கு உண்டு
இல.66, கன்னாதிட்டி சந்தியில். அமைந்துள்ள மூன்று மாடிகளைக் கொண்ட கடைக் கட்டடம் வாடகைக்கு உண்டு.
(Soft Logic இற்கும் Cargicls இற்கும் இடைப்பட அமைந்துள்ளது)
தொடர்பு : 077 032 8362 (53210) (7.6.3)

## வீடு வாடகைக்கு
பருத்தித்துறை பிரதான வீதியில் இருபாலைச் சந்திக்கு அருகில் சகல வசதிகளுடன் (வாகனத் தரிப்பிடம் உட்பட) கூடிய மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (53278) (12.3.6)
தொடர்பு: 077 666 9228


# ஏனையவை

## 20L Coral Water
யாழ்.நகரப் பகுதியில் உள்ள உங்கள் வீடுகளுக்கு 20L போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் கொண்டு வந்து தரப்படும்.
விலை : 220 மட்டும்.
தொடர்பு : 077 254 3253 (53346) (7.6.3)

## வீடு வாடகைக்குத் தேவை
யாழ்.மாநகரசபைக்குட்பட்டபகுதியில் 3அறைகள், 2Toilet, Car park உடன் வாடகைக்குத் தேவை.
(53269) (12.3.6) தொடர்பு: 071 860 9232

## தேவை
மாட்டெருவும் உமியும் தொகையாகத் தேவை. வழங்கக்கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 077 330 3337 (53401) (5.6.3)

## LOOKING FOR A CHRISTIAN EDUCATIONAL INSTITUTION
Association of Business Executives Diploma in Business Administration தகைமை உடைய ஆங்கிலம் சரளமாக எழுதவும், பேசவும் கூடியவர், ஜெய்ப்பூர் செயற்கைக் காலில் நடப்பவர், Edexcel, Cambridge Ordinary Level Commerce, Accounts, Economics, & Business Studies, கற்பிப்பவர், Accomodation தரக்கூடிய கிறிஸ்தவ கல்வி நிலையங்களுடன் இணைந்து General English வகுப்புகள் நடத்த விரும்புகின்றார்.
தொடர்பு:
(சி16995) LEONAD 077 611 0802

## விசேட பல் வைத்திய நிபுணர்கள் வருகை


★ பல் முக சீராக்கல்
(Consultant orthodontist)
★ முக சத்திர சிகிச்சை
(Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்
- ★ மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் அரசம்)
- ★ ஒழுங்கற்ற பற்களை சீராக்குதல்
- ★ தாடை மிதப்புகளை சீராக்குதல்
- ★ அண்ணப்பிளவு உதடுகளுக்கான சிகிச்சை
- ★ நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல்

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)

## ஒத்துமாறல்
2013 - 2014 பல்கலைக்கழக அனுமதிக்கான உயர்தர பரீட்சையில் சித்திபெற்று யாழ்ப்பாண மருத்துவ பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிய ஒரு மாணவர், பேராதனை மருத்துவ பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர் ஒருவருடன் ஒத்து மாற விரும்புகின்றார். பேராதனை மருத்துவ பல்கலைக்கழகத்திலிருந்து யாழ்ப்பாண மருத்துவ பல்கலைக் கழகத்துக்கு ஒத்துமாற விரும்பினால் உடன் தொடர்புகொள்ளவும்.
(53310) (12.3.6) தொடர்பு: 077 372 2498

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111



## கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்

இடமாற்றத்தை முன்னிட்டு கடைசி வாரமாக
தீபாவளி சிறப்பு மலிவு விற்பனை
யாழ் மாநகரம் காணாத
புதுவரவுகள் புதுப்பொலிவுடன்
அனைத்துவிதமான ஆடைகள் மற்றும்
பான்சி பொருள்கள்
சிறுவர்களுக்கான விளையாட்டு
பொருள்கள் அனைத்தும்
குறித்த விலையில் இருந்து
அரைவாசி விலைக்குப்
பெற்றுக் கொள்ளலாம்.

114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9393

(53319)(7.6.3)




## மருத்துவமனையில் குறைந்து வரும் பொருள்கள் அன்பளிப்பு

அன்பளிப்புப் பொருள்களால் சாவகச்சேரி மருத்துவ மனையில் மருந்து கட்டும் அறையும் ஊசி போடும் அறையும் நிறைகின்றன.

இந்த அறைகளில் பணியாற்றுவோரின் உன்னத சேவையைக் கௌரவிக்கும் வகையில் இந்த அறைகளில் பயன்படுத்தக் கூடிய பொருள்களை தாமாகவே முன்வந்து வழங்குகின்றனர் சிகிச்சைகளில் குணமடைந்த நோயாளர்கள்.

இந்த இரு அறைகளும் புதிதாக வர்ணம் தீட்டப்பட்டு அங்கு தேவையாக காணப்படும் பொருள்களை வாங்கி வந்து அறைகளில் பொருத்தியுள்ளதைக் காணமுடிந்தது. சுவர்க்கடிகாரங்கள், மருந்துகள் வைப்பதற்கான கண்ணாடியிலான றாக்கைகள் உட்பட பல்வேறு பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதை காணமுடிகிறது. (ஒ-9)


## விசா பெற்றுக்கொள்ள இருப்பவர்களுக்கு




UK, Australia, Canada, USA, New Zealand, Denmark, France, Germany, Italy, Japan, Korea, Netherlands, Norway, Switzerland, Sweden etc. (மற்றும் ஏனைய நாடுகளுக்கு)

## வங்கியில் பணவைப்பு





- விசா பெற எதிர்பார்த்திருக்கும் உங்களுக்கு பணம், மற்றும் ஏதேனும் பிரச்சினையா....?
- உயர் கல்வியை தொடர இருப்பவர்களுக்கு
- வெளிநாட்டில் உயர்கல்வியை தொடர்பவருக்கும்
- மாணவர்களின் பெற்றோர்களுக்கும்
- வெளிநாட்டில் இருக்கும் உறவினர்கள் மற்றும் நண்பர்களை சந்திக்க இருப்பவர்களுக்கும்
- சுற்றுலா செல்ல இருப்பவர்களுக்கும்
- வர்த்தகம், மற்றும் கண்காட்சிகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கும்
- 3,6.12 பணவைப்பு, வரவு / செலவு, Air Ticket, Hotel Booking, Travel Insurance, Airport Pickup, Accommodation, உங்கள் விண்ணப்பப் படிவங்கள் பூர்த்தி செய்தல் மற்றும் உங்கள் ஏனைய குறைபாடுகள், தேவைகளுக்கு...

**விசா சம்பந்தமான சகல ஆலோசனைகள், வங்கிக் கடன் மற்றும் பணத்தேவைகளுக்கான ஏற்பாடுகளும் செய்து தரப்படும்**

Migration / Skill Migration / Visit Visas / Student Visas / Dependent / Family Visas / Business / Investment / Rejection - Appeals / New Applications etc....

ஒரே தினத்தில் எங்கள் சேவைகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள முன்கூட்டியே நேரத்தை பதிவுசெய்து கொண்டு வரவும்.

## ஸ்கைவோர்க் வீசா சொலூஷன்

SKYWALK Visa Solutions

No.65,1/1,Galle Road, Dehiwala.
(Food City - 1st Floor)
www.skywalk-vs.com
**Hotline: 0777711905**
(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).



Happy Diwali! விரைவு! பாதுகாப்பு! நம்பகத்தன்மை! Merry Christmas!

## பண்டிகைக்காலத்தை முன்னிட்டு

இரண்டு தசாப்தங்களுக்கு மேல் கடிதங்கள்,
பொதிகள் சேவையில் பல்லாயிரக்
கணக்கான வாடிக்கையாளர்களின் மனதில் இடம்பிடித்து நிற்கும்

## திருமுருகன் கொம் நெற்

தமது வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகைகளை வழங்கவுள்ளது.

220 க்கு மேற்பட்ட நாடுகளுக்கான துரித சேவை.
3 - 5 வேலை நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்.
உங்கள் இல்லங்களில் வந்து பொறுப்பேற்று உரிய முகவரியில் ஒப்படைக்கும் வசதி.
கடிதங்கள், உடுபுடவைகள், அன்பளிப்புப் பொருட்கள், கடலுணவுகள், மருந்துப் பொருட்கள், மற்றும் இதர பொருட்களையும் அனுப்பிட முடியும்.

தற்போது 11Kg ற்கு மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள்.
(1kg க்கான கட்டணம்).
(லண்டன் 625/=, கனடா 950/= பிரான்ஸ் 675/=, ஜேர்மனி 650/=, சுவிஸ் 750/= இத்தாலி 800/=, அவுஸ்ரேலியா 700/=)
(இச்சலுகை எமது நிறுவனத்தில் மட்டுமே உள்ளது.)

**திருமுருகன் கொம் நெற்** பிறைவெட் லிமிடெட்
271A, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
(ஆல் சிலோன் புத்தகக் கடைக்கு முன்பாக)

கிளைகள்:
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. 18, பிரதான வீதி, நெல்லியடி.
30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 50, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
பிரதான வீதி, சங்கானை.
(ஆசைப்பிள்ளை நகைக்கடைக்கு முன்பாக)

தொடர்புகளுக்கு:
0777554528 / 0212227835
நிபந்தனைக்கு உட்பட்டது.

(C/17089)


## மரண அறிவித்தல்

### திருமதி பத்மாவதி பாலசுப்பிரமணியம்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி பாலசுப்பிரமணியம் 16.10.2014 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வாமதேவன் மற்றும் நாகரத்தினம், கேதிலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அனுஷா (சுவிஸ்), அகிலா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், குணா, கிருபா ஆகியோரின் அன்பு மாமியாரும், ராம்பிரகாஸ், திவியா, சாகித்யா, சாயிசரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2014) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி ஒழுங்கை,
மானிப்பாய், யாழ்ப்பாணம்.

தகவல்: பெறாமகன்
சூசியந்தன் (ராஜன்)
077 802 8567

(53347)(6.4.3)

## மரண அறிவித்தல்

### திருமதி இலட்சுமிதேவி வேலுப்பிள்ளை (காரைநகர்)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், வேதரடைப்பு காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமிதேவி வேலுப்பிள்ளை நேற்று (18.10. 2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பச்சி வேலுப்பிள்ளையின் (மகாலட்சுமி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்- பாணந்துறை) பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற வேலாயுதர் ஆறுமுகம் (துப்பாசி) சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மகளும், கோமதிதேவி, உருக்குமணிதேவி, ஏகாம்பரம், சற்குணராசா(பிரான்ஸ்), காலஞ்சென்ற தவராசா; அமிர்தாம்பிகை ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற ச.குலதேவராசா(TATA வைன் ஸ்ரோர்ஸ்-வவுனியா), பொன்னையா, திலகவதி, அன்னலட்சுமி(லண்டன்), உருத்திரகுமார், சிவசக்தி ஸ்ரோர்ஸ்-முழங்காவில்) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற முருகேசம்பிள்ளை(லண்டன்), சுப்பிரமணியம்பிள்ளை (கனடா-ஓய்வுபெற்ற விமானப்படை உத்தியோகத்தர்), காலஞ்சென்ற பரமேஸ்வரி, தனலட்சுமி மற்றும் காசுபதி(கனடா) ஆகியோரின் சகோதரியும், சதாகோகிலன், ஜனகாந்தன், கோபிநாத், துஸ்யந்தன், சுவஸ்திகா, விதுஷ் (லண்டன்), நிரேஸ் (லண்டன்), நிஷா(லண்டன்), பாமினி, கபிலன், சாரங்கன் காலஞ்சென்ற தாரணி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2014) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு சக்கலாவோடையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சக்கலாவோடை,
காரைநகர்.


தகவல்:
குடும்பத்தினர்.
077 639 3465

(53187)(6.4.3)

# ALUMNI ASS

## JAFFNA ADVANCED TECH

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




## ALUMNI AS

JAFFNA ADVANCED TEC

**No.665/2, BEACH ROAD, JAFFNA.**

Tele.:- 021 3

(C/16970)(10.6.3)


அதிஷ்டத்தால் நாடே அதிரும்
Dialog
LORD OF THE RELOAD
ஐந்தாம் வார வெற்றியாளர்கள்
• 30 இலட்சம் சூப்பர் பரிசு வெற்றியாளர்கள்
• 42 இலட்சாதிபதிகள்
• மொத்த வெற்றியாளர்கள் 90,000ம்
H M A சம்பத்குமார
கொடகவெல
K.W.P.K. தம்மிக
பலாவெல
M.S.M. பர்ஹான்
தியதலாவ
K.G.R.P. குமார
கம்பளை
R.M.N. பிரசன்ன தர்மசேன
கோன்காஹவெல
R. தினேஷ் குமார்
தங்கொடுவ
H.K.S. குமார
கிதுல்கலை
A. யேசுதாஸ்
யாழ்ப்பாணம்
P.D. ஹன்சிகா
வெலிமடை
C/16992
• நாள்தோறும் இலட்சாதிபதி
• மாதம்தோறும் 30 இலட்சம் சூப்பர் பரிசு வெற்றியாளர்
டயலொக் வாடிக்கையாளராகிய உங்களுக்கு மட்டுமே
அனைத்து ரீலோட் மற்றும் காட்களுக்கும் வெற்றி வாய்ப்பு உண்டு.
Dialog
எதிர்காலம் இன்றே.

# 9 மாத காலத்தில் 69 கோடி ரூ. பெறுமதியான தங்கம் பறிமுதல்

## சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.19
கடந்த ஒன்பது மாத காலத்தில் 69 கோடி ரூபா பெறுமதி கொண்ட 130.5 கிலோ கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளரான லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார். இன்றளவில் அத்தகைய நூறு சுற்றிவளைப்புக்கள் நடத்தப்பட்டு நூற்றுக்கு மேற்பட்ட சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி முதலாம் திகதி யில் இருந்து இம்மாதம் 14 ஆம் திகதி வரையிலும் இலங்கைக்குள் கொண்டு வருவதற்கு மற்றும் நாட்டிலி ருந்து வெளியே கொண்டு செல்ல தயார்படுத்தப்பட்டிருந்த தங்கம் விமான நிலையத்தில் வைத்தும் கடலில் வைத்தும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்டுள்ள தங் கத்தில் 85 கிலோ கிராம் தங்க மும் நாட்டிலிருந்து கடத்திச் செல்ல ஆயத்தமான நிலையிலிருந்து கைப்பற்றப் பட்டுள்ளது. அந்த தங்கத்தின் மொத்தப் பெறுமதி 45 கோடி ரூபாவா கும் என்றும் அவர் தெரி வித்துள்ளார்.



அதேபோன்று இலங்கைக்குள் எடுத்து வர முயற்சிக்கப்பட்ட வேளை 45 கிலோ கிராம் தங்கம் கைப்பற்றப் பட்டுள்ளது. அதன் பெறுமதி 24 கோடி ரூபா எனவும் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

இலங்கை சுங்கப்பகுதியினரால் சுற்றிவளைப்புக்கள் மற்றும் பரிசோதனைகள் இறுக்கமாக்கப்பட்டதையடுத்து விமான நிலைய மார்க்கங் களைக் கைவிட்டு கடல் மார்க்கமாக தங்கத்தை நாட்டிலிருந்து கடத்திச் செல்லும் நாட்டுக்குள் கொண்டு வருவதற்கும் முயன்று வருவதாகவும் தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-22)

# அதிவேக மார்க்கத்தில் பயணிகள் தொ.பே. மூலம் ஆசனப்பதிவுகள்



கொழும்பு, ஒக்.19
தெற்கு அதிவேக மார்க்கத்தில் பயணிகள் பஸ்களில் தொலை பேசி மூலமாக ஆசனங்களை ஒதுக்கிக் கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதியில் இருந்து மொபிற்ரெல் செல்லிடத் தொலை பேசி ஒன்றில்ன் இலக்கம் 365 இற்கு அழைப்பு எற்படுத்துவதன் மூலம் தெற்கு அதிவேக் மார்க்கத்தில் பயணிக்கும் பயணிகள் பஸ்களில் ஆசனங்களை ஒதுக்கிக் கொள்ள முடியும்.

தேசிய போக்குவரத்து ஆணைக் குழு மற்றும் மொபிற்ரெல் நிறுவனத்தின் ஒருங்கிணைவுடன் செல்லிடத் தொலைபேசிகள் மூலமாக ஆசனங்களை ஒதுக்கிக் கொள்ளும் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஆசனங்களை ஒதுக்கிக் கொள்வதற்கான இந்தப் புதிய சேவையில் பயணி ஒருவா் தமது பயணத்தை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் தினத்துக்கு முன்னரான இரண்டு வாரகாலத்தில் இருந்து உரிய பஸ்ஸில் பயணங்கள் ஆரம்பிக்கப்படவுள்ள ஒரு மணித்தியாலத்துக்கு முன்னரான காலகட்டத்துள் ஆசனங்களை ஒதுக்கிக் கொள்ள முடியும்.

செல்லிடத் தொலைபேசி மூலம் ஆசனங்களை ஒதுக் கிக் கொண்டதன் பின்னர் அது தொடர்பாகவுள்ள இரகசிய எண் பயணியின் தொலை பேசி இலக்கத்துக்கு குறுந் தகவல் ஒன்றின் மூலமாக அனுப்பப்படுவதோடு அந்த எண் பயணி பயணிக்கவுள்ள பஸ் நடத்து நருக்குத் தெரியப்படுத்தப் பட்டதும் ஒதுக்கப்பட்டுள்ள ஆசனத்துக்குரிய பயணச் சீட்டை பயணியில் பெற்றுக் கொள்ள முடியும். (வ-22)

# தேசிய தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துக

## பவ்ரல் அமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஒக்.19
காலத்தை, நிதியை, சிரமத்தை மற்றும் வன்முறையை உச்ச பட்சமாகக் குறைத்துக் கொள் வது தொடர்பாக நாட்டில் முக்கியத்துவம் பெறும் ஜனாதிபதித் தேர்தல், நாடாளு மன்றத் தேர்தல் மற்றும் மாகாண சபைகளுக்கானதேர்தல் ஆகியவற்றை ஒரே தினத்தில் நடத்துவதற்கு அவசியமான சட்ட ஆக்கங்களை உடனடியாக மேற்கொள்ளுமாறு பவ்ரல் அமைப்பு பொறுப்பு வாய்ந்த தரப்புகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

1988 ஆம் ஆண்டின் ஜனாதி பதித் தேர்தலில் இருந்து அண்மையில் நடந்து முடிவடைந்த ஊவா மாகாண சபைத் தேர்தலை நடத்தி இலங்கை சாதனை ஒன்றைப் புரிந்திருப்பதாகவும் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி சுட்டிக்காட்டி யுள்ளார்.

முக்கியமான குறித்த மூன்று தேர்தல்களையும் ஒரே தினத்தில் நடத்துவது மாத்திரமல்லாது தேர்தல்கள் இடம்பெறும் திகதிகளை மிகச் சரியாக கால அட்டவணை ஒன்றும் உருவாக்கப்பட வேண்டியுள்ளதாகவும் யார் அதிகாரத்தில் இருந்தாலும் நாட்டின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதனால் இந்த யோசனைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியிருப்பதாகவும் மவ்பிம சிங்களப்பத்திரிகைக்கு அவர் தெரிவித் துள்ளார்.

24 ஆண்டு காலத்துள் ஒவ்வொரு ஆண்டிலும் இரண்டு தேர்தல்கள் என்றவாறு தேர்தல்கள் நடத் தப்பட்டுள்ளன.

இவ்விதமாக ஆண்டொன்றில் இரண்டு தேர்தல்கள் என்ற ரீதியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சரவை அமைச் சர்கள் போன்றே ஜனாதிபதியும் கூட தமது காலத்தை ஒதுக்கிக் கொள்ளும் போது நாட்டின் அபிவிருத்தி தொடர்பாக கொள்கைகளைத் தயாரிப்பதில் எஞ்சுவது ஒரு சிறிய காலப் பகுதியே. தேர்தல் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 2 மாதகாலம் தேவைப் படுகின்றது என்பதால் அவர் களுக்கு ஆண்டொன்றில் நான்கு மாதங்களை தேர்தல் களுக்காகச் செலவிட வேண்டி நேர்வதாகவும் சுட்டிக்காட் டியுள்ளார்.

புள்ளிவிவரத் தரவுகளைப் பகுப்பாய்வு செய்து பார்க்கும் போது ஆண்டொன்றில் மூன் றில் ஒரு பகுதியை தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்கு செலவிட வேண்டியுள்ளது. தத்தமது கட்சிகள் மற்றும் குழுக்களுக்களின் வெற்றிக்காக காலத்தை அர்ப் பணிக்க வேண்டிய கட்டா யத்துக்கு மக்கள் பிரதிநிதிகள் உள்ளாகுகின்றனர். இது மிக மோசமானதொரு நிலைப் பாடாகும். நாடாளுமன்ற உறுப்பினர் கள் அமைச்சர்களின் கால அவகாசத்தில் 24 ஆண்டுகளில் குறைந்த பட்சமாக 2 ஆண்டுகள் தேர்தல் செயற்பாடுகளில் லெவாகியுள்ளது. சாதாரணமாக தேர்தலொன்றுக்கு 400 கோடி ரூபாவே செலவாகின்றது. மூன்று தேர்தல் களை ஒரே தினத்தில் நடத்துவதால் இந்தச் செலவீனத்தை 800 கோடி ரூபா வரையில் மீதப்படுத்திக் கொள்ள முடிகிறது. நிதியை மீதப்படுத் திக் கொள்வது போன்றே காலத்தை யும் பெருமளவில் மீதப்படுத்திக் கொள்ளவும் முடிகிறது. (வ-22)




FUTURE PENSIONS PLAN

மனநிறைவான ஓய்வுக்காலம், கொமர்ஷல் வங்கி வழங்கும் **"Future pensions Plan"** ஓய்வூதியத் திட்டம், இன்றே ஓய்வுக்கால வாழ்க்கையைத் திட்டமிடுங்கள்

நீங்கள் 18 - 65 வயதிற்கு இடைப்பட்டவராயின் மாதாந்தமோ, ஒரே தடவையிலோ பணத்தை வைப்புச் செய்து "Future Pensions Plan" ஓய்வூதிய திட்டத்தை ஆரம்பிக்க முடிவதுடன் தேர்ந்தெடுக்க 06 ஓய்வூதியத் திட்டங்கள்.

- 55 தொடக்கம் 75 வயது வரை சத்திர சிகிச்சை மற்றும் வைத்தியசாலை அனுமதிகளுக்கு வருடாந்தம் ரூபா 50,000 இலவச காப்புறுதி
- ஓய்வூதிய தொகை பெறும் காலத்திற்குள் மாதாந்த ஓய்வூதியத் தொகைக்குச் சமமான வருடாந்தப் போனஸ் தொகை
- ஓய்வூதியத்தை இணைந்த ஓய்வூதியத் திட்டமாகவும் ஆரம்பிக்க முடியும். (இருவரும் 60-65 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்)
- துரதிஷ்டவசமான மரணத்தின் போது உங்கள் வாழ்க்கைத் துணைக்கு / உங்களால் நியமிக்கப்பட்ட ஒருவருக்கு ஓய்வூதியத்தின் கால எல்லை முடியும் வரை மாதாந்த ஓய்வூதியத் தொகையும், வருடாந்தப் போனஸ் தொகையும் வழங்கப்படும்.
- 15,20 அல்லது 25 வருடங்கள் வரை ஓய்வூதியம் பெறும் காலத்தை தெரிவு செய்யலாம்.
- உங்கள் வைப்புக்கு 7% (வருடாந்த விளைவு வீதம் 7.22%) கவர்ச்சிகரமான வட்டி

COMMERCIAL BANK

Fitch ரேட்டிங் - AA(lka) RAM ரேட்டிங் - RAM AA+/P1 *நிபந்தனைகளுக்கு உட்பட்டது. C/16989 +94 112 353 333 www.combank.lk





Facia - சருமம் , கூந்தல் மற்றும் நகங்களுக்கு என இயற்கை உள்ளடக்கங்கள் கொண்டு மரைன் கொலஜன், திராட்சை விதையின் சாறான பயோட்டின் சேர்க்கையில் உலகின் தர நிர்ணயங்களுக்கு ஏற்ப அவுஸ்திரேலிய அரச அங்கீகாரம் பெற்று தயாரிக்கப்படுகிறது. இலங்கையில் ஆயுர்வேத திணைக்களத்தில் பதிவு பெற்ற உற்பத்தியான Facia எந்த வித பக்க விளைவுகளுமின்றி உயரிய பலாபலனை பெற்றுதரும்



மஹேஷி மதுஷங்கா
நடிகை





Alaris

Facia

மேலதிக விபரங்களுக்கு அழைக்க
077 3540 878

இலங்கை ஆயுர்வேத திணைக்களத்தில் பதிவுபெற்றது
No: 02/01/PA/14/479

Applicap - CR - 024432, Day Cream - CR-026352

https://www.facebook.com/facia.lk

Alaris Lanka (Pvt) Limited. A Division of Zifam Pinnacle Pty Ltd. Sydney, Australia.

C/16990

SampathBank
Hybrid Carnival
Unregistered Hybrid வாகனங்களுக்கு
சம்பத் வங்கியின் வாசியான லீசிங்!



தற்போது வட்டி மேலும் குறைந்துள்ளது

தற்போது 10.5%
VAT அடங்கலாக ஒரு இலட்சத்திற்கு (5 வருடங்களுக்கு)
மாதாந்தம் ரூ. 2,113/-

- மறைமுகமான கட்டணங்கள் இல்லை.
- போலியான வாக்குறுதிகள் இல்லை.
- தேவையற்ற அலைச்சல்களுக்கு இடமில்லை.

செப்டெம்பர் 01 முதல்
ஒக்டோபர் 31 வரை

மேலதிக விவரங்களுக்கு 0112 30 30 50 அழையுங்கள்

சம்பத் லீஸிங்
find us on
C/16986
சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்
Sampath Bank Fitch Ratings AA-(lka)
www.sampath.lk

ஷீர்ஷபதி
LINK NATURAL
கேஷா
முழுமையான ஆயுர்வேத
கூந்தல் எண்ணெய் பராமரிப்பு
C/16991

தினசரி பாவனையின் மூலம்
- தலைமுடிக்கு போசணையை தருகின்றது
- ஆரோக்கியமானதும் கவர்ச்சியானதுமான தலை முடியை தருகிறது
- பொடுகினை தடுக்கின்றது
- தலைமுடி நுனியில் வெடித்தலை தடுக்கிறது



தற்போது கடைகளில் - லிங்க் கேஷாவில் அடங்கியிருக்கும் மருத்துவ மூலிகைகளின் அனுகூலங்களை பாதுகாப்பாக உங்களுக்கு வழங்குவதற்கு கண்ணாடி போத்தலுடனான புதிய பெட்டி
ரூ. 150/=

லிங்க் நெச்சுரல் புரொடக்ஸ் தனியார் நிறுவனம் சீ.ஐ.சீ. இல்லம் 199, கிவ் வீதி, கொழும்பு 02. தொ.பே.எண். : 011-2409294 மின்அஞ்சல் : info@linknaturalproducts.com இணையம் : www.linknaturalproducts.com

தரமான ஹரிஸ்சந்திர
உற்பத்திகள்



மா



அப்பளம்



உடனடி தயாரிப்பு



கோப்பி



நூடில்ஸ்



சவர்க்காரம்

ரூ.25.00 தொடக்கம்
தரத்திற்கான நம்பகரமான பெயர்
www.harischandramills.com
(C/16981)


SINGER
SINGER X SERIES
ASUS
hp
lenovo
தீபத்திருநாளை முன்னிட்டு
கணினிகளுக்கான விசேட சலுகைகள்
3 YEAR WARRANTY
SINGER X SERIES
SINX-243AT
• Intel Celeron Dual Core
• 14" Display, 2 GB, 320 GB
வட்டியின்றி
ரொக்கக் கழிவு Rs. 4,000
Rs. 52,999/-
Rs.3,533/-x12
DONGLE
விசேட விலை Rs. 48,999
airtel
12 MONTHS DATA + VIRUS GUARD
இலவசம்
intel 4th Gen
வட்டியின்றி
ரொக்கக் கழிவு Rs.13,400/-
விசேட விலை
Rs.74,999 /-
HP-I3-15NB
• Intel Core i3 (4th Gen.)
• 15.6" HD LED Display
• 4GB DDR 3, 500GB HDD
Rs.88,399/-
Rs.5,893/-x12
intel 4th Gen
வட்டியின்றி
ரொக்கக் கழிவு Rs. 11,000/-
விசேட விலை
Rs. 64,999/-
lenovo LEN-NB-I3-4G
• Intel Core i3 (4th Gen.)
• 15.6" HD LED Display
• 4GB DDR 3, 500GB HDD
Rs.75,999/-
Rs.3,937/-
DESKTOP PC
CLASSIC
SINGER SIN-CL-LED
• Intel Atom 2.4GHz
• ASUS Integrated M/B
• 2 GB DDRs, 500GB SATA
• DVD RW, Key board &Mouse
PRINTER
இலவசம்
Rs. 43,999/-
Rs.3,217/-
SINX-M173H
SINGER ALL-in-ONE COMPUTER
• Intel Celeron B830 1.8GHz
• 2GB DDR3, 320 GB SATA
• 17.3" Display, HD Graphics
Rs.49,999/-
Rs.3,333/-x12
வட்டியின்றி
விசேட விலை Rs. 44,999
ரொக்கக் கழிவு Rs.5,000/-
கிடைக்குமிடங்கள்
SINGER Plus காட்சியறைகள் (011) 5 400 400
மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடம் www.singersl.com
C/17025






அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரியர் தின நிகழ்வில் மாணவர்களாலும் பெற்றோர்களாலும் ஆசிரியர்கள் மதிப்பளிக்கப்பட்ட போது.. (வ-18)



கிளிநொச்சி சிவபாதகலையகத்தில் கடந்த வியாழக்கிழமை ஆசிரியர் தின நிகழ்வு இடம்பெற்றது. அன்றைய தினம் மு.ப. 11 மணியளவில் பாடசாலையின் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு மாணவர்களாலும். பெற்றோர்களாலும் மேற்கொள்ளப்பட்டது.
ஆசிரியர்கள் மாணவர்களால் அழைத்துச் செல்லப்பட்டு பாடசாலை மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன்போது மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (வ-18)





வவுனியா தாண் டிக்குளம் , ஓயார்சின்னக்குளம் ஸ்ரீ தில்லையம் பலப்பிள்ளையார் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாணிவிழாவின் சில பதிவுகள் ...












பூரிப்பான நல்லுணர்வு உங்களுக்கும் எனக்கும்

ரூ.188,393 + VAT

C/16988

www.yamahaworld.lk






தற்போது

முதல் வகுப்பில் கால்பதித்த முதல் நாளிலே

HNB பத்தும் விமன ரிவோட்ஸ்

தற்போது HNB பத்தும் விமன ரிவோட்ஸில் புதிய பல ரிவோட்ஸ்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

உங்கள் அன்புச் செல்லம் முதலாம் வகுப்பிற்குச் செல்லும் முதல் நாளிலேயே HNB பத்தும் விமன ரிவோட்ஸ் ஆனந்தமாய் கிடைக்கின்றது.

**HNB பத்தும் விமன ரிவோட்ஸ்**

உங்கள் HNB கணக்கின் நிலுவை ரூ.10,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையாக இருப்பின் உங்கள் வாழ்வுடன் தொடர்புடைய நிகழ்வுகளுக்கு உங்கள் கணக்கின் மிகுதிக்கேற்ப ரூ.50,000 வரையிலான பணப்பரிசு கிடைக்கவிருக்கிறது.
(எந்தவொரு குழந்தையின் பிரசவம்,உங்கள் குழந்தை முதல் வகுப்பிற்கு செல்லும் முதல் நாள்,பல்கலைக்கழக பட்டம், திருமணம், 10வது திருமண ஆண்டு, 21 வது பிறந்த தினம், 55 வது பிறந்த தினம், வைத்தியசாலையில் அனுமதிக்கையில்)

அது மட்டுமல்ல.உங்கள் கணக்கின் நிலுவைக்கு ஏற்ப கவர்ச்சிகரமான வட்டியும் உண்டு.

மேலதிக தகவல்களுக்கு அருகிலுள்ள HNB வாடிக்கையாளர் நிலையத்துடன் அல்லது கீழ் காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

HNB PATHUM VIMANA ரிவோட்ஸ் 2014

அனைவருக்கும் பரிசுகள்

HNB தலைமையகம், HNB டவர்ஸ், 19வது மாடி, 479, டி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.
தொ.பேசி: 0112 661959 / 0112 661974 / 0112 661946 தொலை நகல்: 0112 664892
மின்னஞ்சல்: pathumvi@hnb.lk வெப்தளம்: www.hnb.net

HNB

C/16982

HOLMES POLLARD & STOTT

# நுகர்ச்சிக்கான விநியோகங்களை மட்டுமல்லாது புதிய தொழில் முயற்சிகளிலும் ஈடுபட முன்வருக

அச்சுவேலி, ஒக்.19

"பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் நுகர்ச்சிக்கான விநியோகங்களை மட்டும் நம்பி இருக்காமல் புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபட முன்வரவேண்டும். அதன் மூலம் உள்ளூர் உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பு, மக்களின் வாழ்வாதார முயற்சிகளுக்கு கைகொடுத்து உதவ முடியும்.

அதேநேரம் இளைய தலை முறையினர் இளைஞர்கள் கூட்டுறவு துறையில் ஆர் வத்தோடு ஈடுபாடு கொள் வதுடன் மூத்த பிரசைகளிடம் இருந்து உரிய முறையில் அனுபவப் பகிர்வு மற்றும் தேர்ச்சிகளை பெற்றுக் கொள்ள வேண்டும்".

இவ்வாறு கூறினார் யாழ். மாவட்ட தலைமைச் செயலக கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் பொ.மோகன்.

அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் இ.சந்திரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்துக்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கூட்டுறவுத்துறை மிக நெருக்கடியான காலக்கட்டங்களில் மக்களின் வாழ் வாதாரத்துக்கும் தொழில் முயற்சிக்கும் கைகொடுத்து உதவியது. மக்களோடு மக்களாக நின்று சேவையாற்றியது. ஆனால் சமகாலச் சமூக சூழலில் பொருளாதார நிலையில் நலிவடையத் தொடங்கியுள்ளது. யாழ். மாவட்டத்தில் பலநோக்கு கூட்டுறவுச் சங் கங்கள் சில பொருளாதார நிலையில் நலிவடைந்துள்ளன. ஆனால் அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் மாவட்ட நிலையில் சகல தர நிலையிலும் முதன் நிலையில் உள்ளமை பாராட்டத்தக்கது.

யாழ். மாவட்டத்தில் கூட்டு றவுத்துறையில் மூத்த பிரசைகள் காட்டும் ஆர்வம் ஈடுபாடு இளைய தலை முறையினர் மற்றும் இளைஞர்களிடம் காணப்பட வில்லை. இது கவலை அளிக்கின்றது. இளைஞர்கள் கூட்டுறவுத் துறையில் ஆர்வத்தோடு ஈடுபட வேண்டும். பங்கு கொள்ள வேண்டும். மூத்த பிரசைகளின் அனுபவப் பகிர்வை சமகாலத்தில் பெற்றுக்கொள்ள முன்வரவேண்டும். அதன் மூலமே எதிர்காலத்தில் கூட்டுறவுத்துறை மேல்நிலை பெறும்.

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம் கடன் அறவீடு மற்றும் சோர்வுகளை அறவிடுசெய்வதில் உரிய சட்டதிட்டங்களுக்கு அமைய சங்கத்தின் நலன் வளர்ச்சியை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முன் வரவேண்டும். அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இது மிக அவசியம். சங்கத்தின் தொழிற்படு மூல தனம் பாதிக்கப்படுமானால் சங்கத்தின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் இடையும். இதனைக் கருத்தில் கொண்டு தொழிற்படு மூல தனம் பாதிக்கப்படாத வகையில் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கைகளை மேற் கொள்ளவேண்டும்.

பலநோக்கு கூட்டுறவுச் சங் கங்களின் நுகர்ச்சி நடவ டிக்கை, செயற்பாடுகள் சமகால போட்டி வர்த்தக நடவடிக்கை மற்றும் திறந்த பொருளாதார கொள்கைகளால் பாதிப்ப டைந்து வருகின்றது. இதனை கருத்தில் கொண்டு சங்க நிர்வாகம் தனது தொழில் முயற்சி நடவடிக்கைகளை சமூகத்தின் தேவையை அறிந்து விரிவுபடுத்திக் கொள்ள முன்வரவேண்டும். உள்ளூர் உற்பத்தி முயற்சிகளுக்கு வாய்ப்பளித்து செயற்பாடுகளை விரிவாக்கம் செய்ய வேண்டும்.

பணித்தொகுதியினர் பணி நிலையில் சங்கத்தின் வளர்ச் சியைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். சங்க நிர்வாகம் பணிப்பாளர்களின் நலன்களையும் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். நிர்வாகிகளுக்கும் பணியாளர்களுக்கு இடையே சங்க வளர்ச் சியில் கருத்து ஒற்றுமை நிலவவேண்டும். இது சங்கத்தின் ஆரோக்கி யமான வளர்ச்சிக்கு உதவும்.

கூட்டுறவுச் சங்கங்கள் உள் ளூர் நுகர்ச்சியாளர்களின் தேவை அறிந்து உற்பத்தி களை மேற்கொள்ளல், தயாரிப்பு முயற்சியில் ஈடுபடல் ஆகியவற்றின் மூலம் தரமான பொருள்களை பாவனையாளர்களுக்கு வழங்குவதோடு லாபமும் ஈட்ட முடியும். புதியவர்களுக்கு வேலை வாய்ப்பையும் வழங்க முடியும்"- என்று கூறினார். (வ-11)




உங்கள் HNB அட்டையை (CREDIT/DEBIT) உபயோகித்து 25% வரை விலைக்கழிவினைப் பெற்றுக்கொள்ளுங்கள்

| | | | |
|---|---|---|---|
| Nellai Silks<br>நெல்லை சில்க்ஸ்<br>நெல்லியடி | 20% வரை | Topaz<br>டொபாஸ்<br>யாழ்ப்பாணம் | 15% |
| Fashion Park<br>பஷன்பார்க்<br>சுன்னாகம் | 25% வரை | Top Lady<br>டொப் லேடி<br>வவுனியா | 15% வரை |
| One Minute<br>ஒன்மினிட்<br>மன்னார் | 20% | Ishara Textile<br>இஷாரா டெக்ஸ்டயில்<br>யாழ்ப்பாணம் | 10% |
| Saravana Tex<br>சரவணா டெக்ஸ்<br>தட்டார் தெரு நல்லூர் | 20% | Family Style<br>பமிலிஸ்டயில்<br>வவுனியா | 10% |
| Fashion Connection<br>பஷன் கனெக்ஷன்<br>கிளிநொச்சி | 15% | Rasi Silks<br>ராசி சில்க்ஸ்<br>யாழ்ப்பாணம் | 10% |
| Arun Tex<br>அருண் டெக்ஸ்<br>நெல்லியடி | 15% | Sivaganesan Textile<br>சிவகனேசன்டெக்ஸ்டயில்<br>யாழ்ப்பாணம் | 10% |
| Style Park<br>ஸ்டயில் பார்க்<br>யாழ்பாணம் | 10% | City Tex<br>சிட்டி டெக்ஸ்<br>யாழ்ப்பாணம் | 10% |
| SRA Collection<br>SRA கலெக்ஷன்<br>யாழ்ப்பாணம் | 10% | Mega Mart<br>மெகாமாட்<br>யாழ்ப்பாணம் | 10% |
| City Asraf Palace<br>சிட்டி அர்சப் பலஸ்<br>மன்னார் | 5% | Venukka Text<br>வேனுகாடெக்ஸ்<br>வவுனியா | 5% |
| SAR Bookshop<br>SAR புத்தகசாலை<br>மன்னார் | 5% | | |

இச்சலுகை ஒக்ரோபர் 15ஆம் திகதியிலிருந்து 31ஆம் திகதி 2014 வரை மட்டுமே



HNB CARDS

Don't postpone happiness

Hatton National Bank PLC – PQ 82

பிச் ரேட்டிங்: AA-(lka)

HNB தலைமையகம்,

HNB டவர், 19வது மாடி, 479, டி. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10.

Follow us on

C/16985

## விதை உ. கிழங்கு வழங்கப்படும் முழுப்பணத்தையும் செலுத்துக

### யாழ்.மாவட்ட உ.கி. உற்பத்தியாளர் கூ. ச. யாழ். மாவட்ட சமாசத் தலைவர் அறிவிப்பு

அச்சுவேலி.ஒக்.19



விதை உருளைக்கிழங்கு பெற விரும்பும் விவசாயிகள் 50 கிலோ கொண்ட பொதி ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபா வீதம் முற்பணம் செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும். விதை கிழங்கு வழங்கப்படும் போது மிகுதிப் பணம் முழுவதையும் செலுத்த வேண்டும் இந்த வருடம் விதை கிழங் குக்கு மானிய உதவி வழங் கப்படாமையால் விவசா யிகளே முழுத் தொகை யையும் செலுத்த வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தி யாளர் கூட்டுறவுச் சங்கங்களின் யாழ். மாவட்டசமாசத்தின்தலைவர்இ.தெய்வேந்திரன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்:

கடந்த வருடம் விதை உருளைக் கிழங்கில் 132 மெற்றிக்தொன் 50 வீத மானிய விலையில் வழங் கப்பட்டன. யாழ். மாவட்டத்தில் கோப்பாய், தெல்லிப்பழை, உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளில் உருளைக்கிழங்கு உற்பத்தி யாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த வருடம்நிறுவப்பட்டன. அவை மூன்றையும் இணைத்து யாழ்.மாவட்ட சமாசம் செயற்படுகின்றது.

கடந்த வருடம் 860 விவசா யிகள் வரையில் உருளைக் கிழங்கு பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர். இந்த வகையில் இந்த வருடம் பதிவு செய்தவர் களின் எண்ணிக்கை குறைவாகவே காணப் படுகின்றது.

விதை உருளைக்கிழங்கின் விலை 50 கிலோ கொண்ட பொதி ஒன்று 12 ஆயிரத்து 50 ரூபா வரையில் இருக்கலாம். விவசாயிகள் உருளைக் கிழங்குச் செய்கையில் ஆர்வம் கொண்டுள்ள போதிலும் விதை கிழங்குக்கான முழுத் தொகையையும் செலுத்தி பெற்றுக் கொள்வதில் பொரு ளாதார நிலைப்பாடு தடையாக உள்ளது என்று தெரிவித்தார். (வ-11)

## சிறுநீரக நோயாளிகளுக்கான உதவுதொகை அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.19

சிறுநீரக நோயாளிகளுக்கு உதவு தொகையாக வழங்கப்பட்டு வந்த ஆயிரம் ரூபா கொடுப் பனவை மூவாயிரம் ரூபாவாக அதி கரிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப் புரை விடுத்திருப்பதாக விசேட செயற்றிட்டங்கள் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரி வித்தார்.

விசேட செயற்றிட் டங்கள் அமைச்சால் முன்வைக் கப்பட்டிருந்த யோசனை ஒன்று தொடர்பாக ஜனாதிப தியால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள் ளதாகவும் இது சிறுநீரக நோயாளர் களது சிகிச்சைக்காக வழங்கப்படும் கொடுப்பனவு என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சிறுநீரக நோயாளி ஒருவர் அங்கீ கரிக்கப் பட்ட மருத்துவ நிபுணர் ஒருவரிடமிருந்து அந்த நோய்க் கான சிகிச்சைக்குப் பரிந்துரை ஒன்றைப் பெற்று அதை சமூக சேவைகள் திணைக்களத்துக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் இந்த கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதற்கு மேலதிகமாக சிறுநீரக நோயாளர்கள் மற்றும் அவர்களது வீடுகள் தொடர் பாக சுயதொழில் வாய்ப் புக்களை அறிமுகப்படுத்தும் வேலைத் திட்டம் ஒன்றும் எதிர் காலத்தில் ஆரம்பிக்கப்பட விருப்பதாகவும் அமைச்சர் சந்திரசேன தெரிவித்துள்ளார்.

பாரம்பரிய நெல்லினங் களைப் பயன்பாட்டுக்கு எடுத் துக் கொள் வதன் ஊடாக சிறு நீரக நோயைத் தவிர்த் துக் கொள்ள முடியும் என்று ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டாகும் போது சிறுநீரக நோயை முற்றாக ஒழித்து விடுவதே அரசின் இலக்காகி இருப்பதாகவும் தெரி வித்துள்ள அமைச்சர் இந்த விசேட செயற்றிட்டத்துடன் விசேட செயற் றிட்டங்கள் அமைச்சு உள் ளிட்ட 13 அமைச்சுக்கள் இணைந் திருப்ப தாகவும் தெரிவித்துள்ளார். (வ-22)



இளவாலை வருத்தபடாத வாலிபர் சங்கத்தால் சங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'உயர்த்தும் கரங்கள்' திட்டத்தின் கீழ் முள்ளி வளைப்பகுதியில் போரால் பாதிக்கப்பட்ட 75 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இளைஞர்களால் திரட்டப்பட்ட ஒரு இலட்சத்து 50 ஆயிரம் நிதியில் இருந்து இந்தப் பொருள்கள் கடந்த 15 ஆம் திகதி வழங்கி வைக்கப் பட்டுள்ளன. (வ-14)

# 50 ஆவது ஆண்டு நிறைவு விழா

கொழும்புத்துறை.ஒக்.19

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை திங்கட்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

பாடசாலை அதிபர் ந.தயாளன் தலைமையில் நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். காலை அமர்வில் பொன்விழா நூல் வெளியீடு வருடாந்தப் பரி சளிப்பு என்பன இடம்பெறும்.

பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும் சிறப்பு விருந்தினராக யாழ். கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுமாரும் கலந்து கொள்வர். மாலை அமர்வு 3 மணிக்கு ஆரம்பமாகி பணியாற்றிய ஆசிரியர் கௌரவிப்பு, கலை நிகழ்வு என்பன இடம்பெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக சட்டத்தரணி செ.கண பதிப்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக யாழ்.வலய முறை சாரக் கல்வி உதவிப் பணிப் பாளர் மு.இராசநாயகமும் கலந்து கொள்வர். (வ-135)

# ஆங்கிலக் கல்வி பயிற்சி நெறிகளில் இணையலாம்

யாழ்ப்பாணம், ஒக்.19

தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து தீவக கல்வி வலயம் முன்னெடுத்து வரும் ஆங்கில கல்வி பயிற்சி நெறி களில் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களும் கலந்து கொள்ள முடியும்.

இந்தப்பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்புவோர் வேலணை சரஸ்வதி வித்தி யாலய அதிபருடன் தொடர்பு கொள்ளலாம் என்று தீவக வலய கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன்குயின்ரஸ் தெரிவித்தார். தற்போது பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 5.30 மணி வரை நடைபெறும் இந்தப் பயிற்சிநெறியில் ஆங்கிலம், சிங்களம், தகவல் தொழில்நுட்பம் போன்ற பாடங்கள் போதிக்கப்படுகின்றன. திங்கள், புதன், வெள்ளி ஆகிய கிழமைகளில் இவை இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-7)

# வவுனியாவில் மரநடுகை

வவுனியா, ஒக்.19

தேசிய மரநடுகை தினத்தை முன்னிட்டு வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா நகர சபை பூங்காவில் கடந்த புதன் கிழமை மரநடுகை இடம் பெற்றது. பயன்தரு மரங்கள், பழமரங்கள் என்பன அங்கு நடப்பட்டு மரநடுகை தினம் நினைவு கூரப்பட்டது. இந் நிகழ்வில் வவுனியா உதவி பிரதேச செயலாளர் திருமதி எஸ்.கர்ணன், வவுனியா நகரசபைச் செயலாளர் க.சத்திய சீலன், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத் தலைவர் தமிழ்மணி அகளங்கன், நகரவரியிறுப்பாளர் சங்கத் தலைவர் செ.சந்திரகுமார், சுத்தானந்த இளைஞர் சங்கத் தலைவர் சேனாதிராஜா, ஓய்வு பெற்ற அதிபர் சிவஞானம் மற்றும் ஊடகவியலாளர்கள், சமூகஆர்வலர்கள் எனப் பலரும் இந்தநிகழ்வில் கலந்து கொண்டு மரங்களை நட்டனர். (வ-421)



இக்காலத்து குடும்ப வாகனம்
உங்கள் முச்சக்கர வண்டி பஜாஜ்
ஆக இருக்கவேண்டியது ஏன்?



விலை ரூ.435,375/=
இவ்விலையில் உள்ளடக்கப்படாததோடு, முன்னறிவிப்பின்றி மாறுபடலாம், நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

செலவு - மிகக்குறைவு!
எரிபொருள் சேமிப்பு - மிகக் கூடியது!
ஆசனம் - மிகசொகுசு!
சத்தம் - மிகக்குறைவு!
சேமிப்பு - மிகக் கூடியது!
தொழிற்பாடு - மிகவும் சிறந்தது!
பாவனைக்காலம் - மிகக் கூடியது!
மீள் விற்பனைப் பெறுமதி - மிகக் கூடியது!
உதிரிப்பாகங்களின் விலை - மிகக்குறைவு!
விற்பனை வலையம் - மிகப்பெரியது!
சேவை வலையம் - சிறந்த தொழிற்பாடுடையது!
பூரண நம்பிக்கை - மிகக் கூடியது!
முற்கொடுப்பனவு - மிகக்குறைவு!

35 வருட முன்னேற்றம்

மூன்று பரம்பரைகளாக, அவர்களின் உணர்வுகள் எண்ணங்களைப் பகிர்ந்ததுடன், அவர்களுக்கு நன்மையளித்து மேலும் முன்னோக்கி...

மேலதிக தகவல்களுக்கு அருகே உள்ள கிளையொன்றினை நாடுங்கள் C/16987

tradlanka

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம் PB270
75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 02. துரித அழைப்பு: 0772-981050, 0772-981051, 0773-599977
தொ.பே: 011-4700600 பெக்ஸ்: 011-4700677 மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com


# SSOCIATION
## CHNOLOGICAL INSTITUTE

SLIATE

17.10.2014 வெள்ளிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை உயர் தொழில் நுட்பவியல் நிறுவன 11ஆவது பட்டமளிப்பு வைபவத்தில்

**HNDA, HNDM, HNDIT, HNDE, HNDBS, HNDBA** பட்டம் பெற்ற யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களையும் பட்டம் பெற்ற ஏனைய மாணவர்களையும் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

*Best Wishes*




## ASSOCIATION
D TECHNOLOGICAL INSTITUTE,

021 3206542 E-mail:- jatialumni@gmail.com Web site:- www.jatialumni

# டுபாய்
## நாட்டில் முன்னணி நிறுவனத்தில் வேலை வாய்ப்பு



| தொழில் வகை | | எண்ணிக்கை | சம்பளம் (Dhs) |
|---|---|---|---|
| கை உதவியாளர்கள் | General Helpers | 50 | 950 |
| சுத்திகரிப்பாளர்கள் (பெண்) | Female Cleaners | 50 | 800 |

Dhs 1 = ரூபா.35/-

விண்ணப்பதாரர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்

சேவை நிபந்தனைகள்
- ஒப்பந்த காலம் 02 வருடங்கள்.
- நன்னடத்தைக் காலம் 06 மாதங்கள். சேவை நேரம் வாரத்துக்கு 06 நாட்கள். நாளொன்றுக்கு 09 மணித்தியாலம்.
- தங்குமிடம், வைத்தியம் மற்றும் போக்குவரத்துவசதிகள் இலவசம்.
- ஒப்பந்தகால முடிவில் மீண்டும் நாட்டுக்குவர விமான பயணச்சீட்டு இலவசம்.
- ஏனையவை UAE நாட்டின் தொழிலாளர் சட்டங்களுக்கு உட்பட்டவை.
- சாப்பாட்டுக் கொடுப்பனவு சம்பளத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. (Dhs 200)

HOTLINE 0727 124 402

AI/2541/Advt/12/14

**இக்ரா வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**
இல 634- 1/1 மற்றும் 1/2, மருதானை வீதி, மருதானை, கொழும்பு-10.
(ஆனந்தா கல்லூரிக்கு முன்பாக)
License No. 2541
தொலைபேசி: 0094 115 544 333 தொலைநகல்: 0094 115 544 337
E-mail : info@ikralk.com

---

# சவூதி அரேபியாவுக்கு
## தோட்ட வேலையாட்கள்
**GARDENER**



நேர்முகப்பரீட்சை தற்போது வெளிநாட்டு முகவர்களால் நடைபெறுகின்றது

HOTLINE 0727 124 402

வேலைவாய்ப்பு 50
சம்பளம் 850+OT

சேவை நிபந்தனைகள்
- ஒப்பந்த காலம் 02 வருடங்கள்
- நன்னடத்தைக் காலம் 06 மாதங்கள். சேவை நேரம் வாரத்துக்கு 06 நாட்கள். நாளொன்றுக்கு 09 மணித்தியாலங்கள்
- தங்குமிடம், வைத்தியம் மற்றும் போக்குவரத்து வசதிகள் இலவசம்.
- ஒப்பந்தகால முடிவில் மீண்டும் நாட்டுக்குவர விமான பயணச்சீட்டு இலவசம்.
- ஏனையவை UAE நாட்டின் தொழிலாளர் சட்டங்களுக்கு உட்பட்டவை.
- சாப்பாட்டுக் கொடுப்பனவு சம்பளத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. (Dhs 200)

SR 1 = ரூபா35/-

பெற்றுக்கொள்ளப்படும் பணம் ரூபா 95,359/- மட்டும்

AI/2541/Advt/11/14

**இக்ரா வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**
இல 634- 1/1 மற்றும் 1/2, மருதானை வீதி, மருதானை, கொழும்பு-10.
(ஆனந்தா கல்லூரிக்கு முன்பாக)
License No. 2541
தொலைபேசி: 0094 115 544 333 தொலைநகல்: 0094 115 544 337
E-mail : info@ikralk.com

---

# 75ஆவது பிறந்ததின நல்வாழ்த்துக்கள்
HAPPY BIRTHDAY



**த.திருநாவுக்கரசு**
**19.10.2014**

அன்பினை ஊட்டி
அறிவினால் எமை வளர்த்து
பண்பு எனும் பாசத்தினால்
எம்மை வழிப்படுத்திய
எமது அப்பாவின் பிறந்த நாளில்
அவர் பல்லாண்டு காலம்
நோய் நொடியின்றி
சீரும் சிறப்புடனும் வாழ
வாழ்த்துகின்றோம்.

அன்புடன்
வாழ்த்துவோர்:
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(53354)(10.6.3)

---

# குறைந்த விலையில் உன்னதமான பயணம்



உலகில் எந்தப்பகுதிக்கும் சென்றுவர விமான பயணச்சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| Chennai | Frankfruit | Madurai | London |
| Thiruchi | Guangzhou | Bombay | Zurich |
| Delhi | Narita | Singapore | Perth |
| Bangkok | Melbourne | Malaysia | New York |
| Honk Kong | Toronto | Rome | Auckland |
| Paris | Sydney | Dubai | Doha |

**ஹேலீஸ் டிரவல்ஸ் & டூர்ஸ்**
உங்கள் உல்லாச பயணத்திற்கு ஒரே தெரிவு!

யாழ்ப்பாணக்கிளை: 275, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 1878 மனோ : 077 773 0818

---

# நீங்களும் ஒரு அனுமதி பெற்ற விமான பொறியியலாளர் ஆகுங்கள் !

LPAA

**BE AN AIRCRAFT LICENSE ENGINEER**



SCHOLARSHIP AVAILABLE

Lanka Pacific Aviation Academy is proud to
**BE THE FIRST TO offer**
**EASA part 66 Aircraft Maintenance Licence Course**
as a Satellite out location of AIR-TECH BUILDING GERMANY.
Approved reference DE 147.0014 GERMANY
**EASA 147 Approved Training Institute**

முதல்முறையாக தென் இந்திய மாணவர்கள்
விமான பொறியியல் பாடநெறியை கற்க இலங்கையில்!
குறிப்பிட்ட அளவு ஆசனங்களே உள்ளன!
முதல் வருபவர்களுக்கு முதல் சேவை அடிப்படையில்
தற்போது அனுமதிக்கப்படுகிறார்கள்!

எமது முதலாவது தொகுதி மாணவர்கள் வெற்றிகரமாக சேவை நிலையில்!

**LANKA PACIFIC AVIATION ACADEMY**
அனுமதி பெறும் அலுவலகம்:
35/1, Angulana Station Road, Rathmalana. (Close Soysapura)
தொலைபேசி. 0777 273844, 0777 709049, 0112638617
LANKA PACIFIC AVITAION ACADEMY
Apply online - www.lpaavi.com

கனவை நனவாக்க.....

---

# எதிர்காலத்தில் பசுமை உலகம் (தனியார்) நிறுவனம் வரைவுள்ளது
## இஞ்சி பயிர்ச்செய்கை

இலங்கையின் முன்னணி நிறுவனமாக இயங்கும் எதிர்காலத்தில் பசுமை உலகம் நிறுவனமாகிய நாங்கள் எமது திட்டங்களில் ஒன்றான விவசாயத்தை ஊக்குவிக்கும் பொருட்டு இஞ்சி பயிர்ச்செய்கையினை அறிமுகப்படுத்தியுள்ளோம். வருமானத்தை மேம்படுத்தும் இத்திட்டத்தை நடைமுறைப் படுத்த விரும்புவர்கள் எம்மோடு 076 531 0421 எனும் இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளும்படி வேண்டப் படுகின்றீர்கள்.

**இஞ்சி பயிர்ச்செய்கையின் நன்மைகள்**
- இஞ்சி ஓர் உத்தரவாதத்துடன் கூடிய முதலீடு
- விவசாய ஆராய்ச்சி நிபுணர்களின் ஆலோசனை
- உங்களது நிலத்தில் பயிரிட்டு பராமரிக்க முடியும்
- உவர்நிலம் மற்றும் களிநிலம் போன்றவற்றிலும் பயிரிட முடியும்
- அறுவடை வரை தொடர்ச்சியான பராமரிப்பு, மேற்பார்வை, ஆலோசனைகள் வழங்கப்படும்.
- சந்தையில் இஞ்சிக்கான கேள்வி கூடுதலாக காணப்படுகின்றது
- சிறியளவு முதலீட்டுடன் அதிகளவு இலாபத்தை ஈட்ட முடியும்
- இயற்கை திரவ உரத்தினை பயன்படுத்த முடியும்
- அறுவடைக் காலம் 8 தொடக்கம் 10 மாதங்கள் இதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்
- மீளப்பயிரிடப்படும்போது செலவு குறைவாகக் காணப்படும்.
- சந்தை வாய்ப்பு வசதிகள் எமது நிறுவனத்தினால் ஏற்படுத்தி கொடுக்கப் படும்.

**குறிப்பு :**
சந்தை வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் மேற்படி முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்ய ஆர்வமுள்ளவர்கள் 30.10.2014இற்கு முன்னதாக மேற்படி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

| காணியின் அளவு | பயிரிடப்படும் இஞ்சியின் அளவு | 8 -10 மாத அறுவடைப் பெறுமதி | தற்போதைய சந்தைப் பெறுமதி | முதலீடு |
|---|---|---|---|---|
| 01 பரப்பு | 60kg | 1400kg | 1,400,000.00 | 210,000.00 |
| 02 பரப்பு | 100kg | 2800kg | 2,800,000.00 | 420,000.00 |
| 03 பரப்பு | 150kg | 4200kg | 4,200,000.00 | 630,000.00 |

***நிபந்தனைகளுக்கு உட்பட்டது***

திட்ட அமுலாக்கல் பிரிவு
எதிர்காலத்தில் பசுமை உலகம் (தனியார்) நிறுவனம் வரைவுள்ளது.
இல. 133, கண்டி வீதி, கச்சேரி, யாழ்ப்பாணம்.

(53402)(7.6.3)

NORTH LEAD Computer & Accessories Wholesaler, Computer Repairing & Services
Computer & Language Classes, Computer Printing & Designing

ALL LAPTOPS, DESKTOP REPAIRS ONE DAY SERVICE

QUICK REPAIR & SERVICE — QUICK PICK-UP AND DELIVERY

Laptop & Desktop Accessories Available




LED, LCD TV & Monitor, Printer, UPS, Subwoofer etc.

| | |
|---|---|
| Laptop LED Screen : 7850 | Laptop DVD Writer : 3850 |
| Laptop Keyboard : 3750 | Lap Hard Disk 500GB : 6950 |
| Laptop Battery : 5850 | Lap Motherboard From : 18750 |

கணனிகளின் அனைத்து உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

No: 328, Stanley Road, Jaffna. (Near to Ariyakulam Junction) Tel: 021-222 4459, 0774192275

Branch: No:12, Kanagapuram Road, Kilinochchi (Near to Barathi Hotel) Tel/Fax: 021-206 0909, 0772533390

## பயிற்சி மூலம் ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ளல்

**தகைமைகள்**

1. 18 தொடக்கம் 35 வயது வரை ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
2. க.பொ.த.சாதாரண தரம் 5 பாடங்களில் திறமை சித்தி அல்லது க.பொ.த உயர்தரம் சித்தி
3. நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு தெமட்டகொட, வெல்லம்பிட்டிய, மாவனெல்ல இடங்களில் 7 மாதங்கள் பயிற்சி கொடுக்கப்படும்.
4. பயிற்சிக் காலத்தில் 1 தொடக்கம் 11ஆம் வகுப்பு வரை உள்ள தனியார் பாடசாலைகளில் பயிற்சி கொடுக்கப்படும்.
5. உங்களது விண்ணப்பத்தை பிறந்த குறிப்பு, தராதரப்பத்திர குறிப்பு பிரதி எடுத்து அத்துடன் 9x4 வடிவமுள்ள தபாலுறையில் 45 ரூபா முத்திரையுடன் தபாலுறையின் மேல் மூலையில் 1 தொடக்கம் 11ஆம் வகுப்பு வரை என்று எழுதி பதிவுத்தபாலில் அனுப்பவும். ஆங்கில அரசாங்கப் பாடசாலையிலும் தனியார் பாடசாலையிலும் படிப்பிக்கும் ஆங்கிலப் பாடங்களை படிப்பிக்க ஆசிரியர்களை சேர்த்து பயிற்சி கொடுத்தல் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகுதி**

* வயது 18 தொடக்கம் 35 வரை, க.பொத. G.C.E or, Level 5 பாடங்களில் விசேட சித்தி அல்லது G.C.E Adv உயர்தர பாடங்களில் சித்தி அடைந்தவரும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.
* நேர்முகப் பரீட்சை தெமட்டகொட, வெல்லம்பிட்டிய பொது காரியாலயத்தில் நடைபெறும்.
* ஆங்கில பாடத்தில் குறைவானவர்களுக்கு 40 நாட்களில் பயிற்சி கொடுக்கப்படும். (இலவசமாக)
* பயிற்சி கிழமையில் 5 நாட்களுக்கு 7 மாதங்களுக்குக் கொடுக்கப்படும்
* பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு தனியார் பாடசாலையில் பயிற்சி கொடுக்கப்படும். தகுதியானவர்களுக்கு அப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் வேலை பெற்றுக்கொடுக்கப்படும்.

**Teacher Training Institute**

No.164/C, Awissawella Road, Orugodawatta, Wellampitiya.
தொலைபேசி : 071 5669641, 077 1529731, 0112677641

*பதிவுத்தபாலில் அனுப்பவும் அனுப்ப வேண்டிய முகவரி*

(சி/17118)(4.3.6)

Officer
Blooming Buds International
Teaching Training Center No.388/1/1
Base Line Road, Dematagoda, Colombo-09

BLOOMING BUDS The Wisdom of children — PV 94034

---

**Solar Panel 2 Bulbs Lighting System** + Multi Mobile Charger

Rs. 5990/=

அதிசிறந்த உயர்தரமானது

* 10 Years Warranty for Solar Panel
* 1 Year Warranty for Battery + LED

நிபந்தனைக்குட்பட்டது

**Solar Panel 3 Bulbs Lighting System** + Multi Mobile Charger

Rs. 8590/=

Contact : Dharma Sales & Marketing 072 3392021

(சி.17116)


Stores: **Remo's Pvt (Ltd.)** 13, Layards Rd, Off Dickons Rd, Colombo - 05.

---

CEYLON THEATRES

இப்பொழுது திரையில்

**MAJESTIC CINEMA - CARGILLS SQUARE** (Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

---

கேக் ஐசிங் பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் 03.11.2014

**BEAUTY CORNER**



Bridal Dressing, Hair Perming & Straighting, Facials, Wedding Cakes, Rich Cakes, Birthday Cakes

162, Kannathiddy Road, Jaffna.

162, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம், மணிக்கூட்டு வீதியிலிருந்து 3ஆம் வீடு.
TP: 021 222 8522, 071 882 8522

---

நாமல் நிறுவனத்துடன் இணையுங்கள் www.namalfunds.com

namal NATIONAL ASSET MANAGEMENT LTD



அலகு நம்பிக்கைப் பொறுப்புக்கள் மற்றும் நிறுவன நிதிகளை நிர்வகிக்கும் இலங்கையின் முன்னோடி சொத்து முகாமைத்துவக் கம்பனியாகிய நாமல் 1991 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. பங்குகள் மற்றும் நிலையான வருமானம் தரும் சந்தைகளில் முதலீடு செய்வதன் மூலம் பல்வேறு வகையான சொத்துகளின் வலுவான நிதிச் செயற்பாடுகளை ஊக்குவிப்பது எமது பணியாகும்.

எமது பலதரப்பட்ட முதலீட்டுத் திட்டங்களைச் சந்தைப்படுத்துவதற்கு, சிறந்த பயன் நோக்கமும் உற்சாகமும் கொண்ட இளைஞர்களை வேலைக்குச் சேர்த்துக்கொள்ள நாம் விரும்புகிறோம். வட மாகாணத்தில் வெற்றிடங்கள் உள்ளன. தெரிவு செய்யப்படும் அலுவலர்கள் நாமல் வடமாகாண அலுவலகத்தில் (யாழ்ப்பாணம்) இருந்தும் வட மாகாணத்திலுள்ள யூனியன் வங்கிக் கிளைகளிலிருந்தும் செயற்படுவார்கள்.

**விற்பனை அலுவலர்கள் - முதலீட்டு ஆலோசகர்/ முதலீட்டு ஆலோசனைப் பயிலுநர்**

தேவைகள்:

* க.பொ.த.சா.தரம்/ க.பொ.த.உயர்தரம்
* வயது 18 - 35
* விற்பனையிலும் நல்லுறவிலும் வியாபார ஊக்குவிப்பிலும் ஆர்வம்
* சிறந்த தொடர்பாடல் மற்றும் ஒருங்கிணைப்புத் திறமைகள்
* நிதிச் சேவைகள் சந்தைப்படுத்தல் மற்றும் வைப்புக்களின் திரட்டலில் முன்னனுபவம் மேலதிக அனுகூலமாகக் கருதப்படும்.

தெரிவு செய்யப்படுபவர்கள் அடிப்படை சம்பளத்துடன் தரகுப்பணம் உள்ளிட்ட கவர்ச்சியான சம்பளத் திட்டத்தை எதிர்பார்க்கலாம்.

இவ்விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 7 நாள்களுக்குள் ஆர்வமுள்ளவர்கள் தமது சுய விவரக்கோவையை உறவினரல்லாத 2 நபர்களின் பெயர்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் சகிதம் அனுப்பவேண்டும்.

தேசிய சொத்து முகாமைத்துவ லிமிட்டட்,
கொழும்பு பங்குபரிவர்த்தனை நிலையம் - யாழ்கிளை
இல.147,2/3, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் Jaffna @ namal. lk.
T.P.021 221 7221

விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கடித உறையின் இடதுகை மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயப்பொருள் கட்டத்தில் குறிப்பிடவும்

(53337)

---



## UHF / VHF Walkie Talkie for Easy Rent

* Competitive prices.
* Exclusive 40 KM UHF operator in Sri Lanka.
* Free supplement of required licence
* Quick and multiple connectivity.
* 24 years of solid trusted excellence.

TRC APPROVED — 24x7 Guaranteed Service

For More Information Contact
Faiz - 0772 315 293

(சி.17103)

trunknet — Powered by MOTOROLA

Dynacom Engineering (Pvt) Ltd. IWS Centre : 451, Kandy Road, Kelaniya. www.iwsholdings.com
An IWS HOLDINGS Company

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

---

**Study, Work & Settle**

அடிப்படைத் தகைமை O/L அல்லது A/L சித்தி மட்டுமே

LITHUANIA
CYPRUS / INDIA
AUSTRALIA (Scholarship Available)
UK / CANADA
GERMANY
DUBAI
40 Days Visit Visa 40,000/=

**NEW ZEALAND** FREE

* Two week accommodation
* Laptop
* Airport pickup
* Mobile sim card
* Wi-fi
* Job skill training
* Job placement assistance
* Part time job for hospitality & computing students
* Scholarship available
* No need IELTS

**Malaysia** செல்லும் உங்களுக்கு...
இலவச விமானப் பயணச் சீட்டு,
இலவச தங்குமிட வசதி,
பாடநெறிக் கட்டணத்தில் 80% தள்ளுபடி,
பயணத்துச் செலவு 850 டொலர் மட்டுமே,
வயது வேறுபாடு இல்லை,
முதல் 100 மாணவர்களுக்கு மட்டும்,
part time job செய்ய முடியும்.
450,000/- புலமைப் பரிசில்கள்

**SINGAPORE**

* ஒரு மாதத்திற்குள் பயணம்
* கல்வி நெறிகளின் பின்னர் Part time jobs (மாதம் ரூ.100,000 வரை)
* ஐரோப்பா பல்கலைக்கழகங்களுக்கு transfer செய்ய முடியும்
* பாடநெறிக் கட்டணம் தவணைக் கட்டணங்களாகச் செலுத்த முடியும்

விசா கிடைத்த பின் பணம் செலுத்தலாம்

பட்டம் பெற்ற பின் குறைந்த பட்சம் 3 இலட்சம் சம்பளம்

We help for Refused Visa, Visit Visa, Business Visa, Tourist Visa, Dependent Visa

SCHENGEN VISA

Courses: Certificate, Diploma, Undergraduate, Master, Mphil, Phd

edutrust — 4 Years Edu Trust

**V T L Management**
No.380, Galle Road, Colombo-03.
Cool line: 077-9600085 / 0775902280 /011-5922116
Email: vtlmgt@gmail.com Web: www.vtlmgt.edu.lk

0774939777 தமிழில் தொடர்பு கொள்ள

எம்முடன் ஒரு தடவை தொடர்பு கொண்டு பாருங்கள்

(சி.17107)

---

**பணிநிலை வெற்றிடங்கள்**

### இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - முல்லைத்தீவுக் கிளை

கீழ்வரும் நிரந்தர பணிநிலைகளுக்கான முழு/ பகுதிநேர வெற்றிடங்களுக்கு முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பணிநிலைகள்:**

01 வெளிக்கள உத்தியோகத்தர்கள்
02 நிறைவேற்று கள முகாமையாளர்கள் (ஆகக்குறைந்தது காப்புறுதித் துறையில் ஒரு வருட அனுபவம்)
03. சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரிகள்

**தகைமைகள்:**

01 வயது எல்லை 18 - 60
02. க.பொ.த உயர்தரத்தில் 03 பாடங்கள் அல்லது க.பொ.த சாதாரணதரத்தில் கணிதம், தமிழ் அடங்கலாக 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேற்படி பணிநிலைகளுக்கான விவரங்களைச் சுயமாகத் தயாரித்து கீழ்வரும் முகவரிக்கு 2014/10/24 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முகாமையாளர்
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,
பிரதான வீதி, முல்லைத்தீவு.
தொ.பே. 021 229 0089

(53097) (45.6.3)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் கணபதிப்பிள்ளை நடராசா

கடந்த 19.09.2014 வெள்ளிக்கிழமை
இறைபதமடைந்த
எங்கள் தந்தையாரின் வீட்டுக்கிருத்தியம்
இன்று (19.10.2014) ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 10.00 மணியளவில்
கந்தர்மடம், ஆத்திசூடி வீதியில்
அமைந்துள்ள எமது இல்லத்தில்
நடைபெறவுள்ளதால்,அத்தருணம் தாங்கள்
குடும்பசகிதம் வருகைதந்து
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்,
மதிபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

மகன் – ந.சிவதாசன்
மருமகன் – சி.நடராஜலிங்கம்
74/12, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்.

பிறப்பு 08.01.1926 இறப்பு 19.09.2014

(53357)(7.6.3)



# VACANCIES

## SALES-EXECUTIVE (Male & Female)

We are a company dealing with Children educational programme and there is an exciting & excellent opportunity for Self - motivated, committed indivduals to take up the responsibility as

SALES EXECUTIVE

**Requirements**

* GCE (A/L) Qualified
* Below 35 years old (School leavers may apply for trainee position)
* Good communication skill in English & Tamil

**Benifits**

- An attractive salary
- Travelling allowances
- Commissions payments
- Telephone facilities
- Motorbike allowances
- Incentive & Overseas trips for target achievers
- Career development (Management position)

**If you believe that you are the right cantidate,**
Please e-mail or contact immediately
Branch Manager: G.Anthany
Phon No: 077 356 6835, 021 567 1130



Pioneer House (PVT) Ltd.
No.100, 2nd Floor, Manipay Road, Jaffna.
E-mail: jaffnapioneerhouse@gmail.com

(51786)(12.3.6)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சின்னக்குட்டி சின்னத்தம்பி

(C.T.B. Mechanic)

பிறப்பு : 25*01*1932 இறப்பு : 19*09*2014

கடந்த 19.09.2014 இறைபதமடைந்த
எங்கள் அன்புத் தெய்வத்தின்
வீட்டுக்கிருத்தியக் கிரியைகள்
இன்று (19.10.2014) ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும்
கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



(53349)(7.6.3)

பருத்தி ஓலை,
மயிலணி வீதி. சுன்னாகம்.

குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 12.02.1955 இறப்பு 19.09.2014

வலைஞர் மடம் முல்லைத்தீவைப்
பிறப்பிடமாகக் கொண்ட



## திருமதி பிறேமாவதி சிவலிங்கம்

பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து வழிகாட்டிய எங்கள் தெய்வமே!
உங்கள் நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (19.10.2014) ஞாயிற்றுக்கிழமை வலைஞர் மட புனித செபமாலை ஆலயத்தில் காலை 6.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

31/23, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

மகன் - தவராஜா (செல்வம்),
மருமகள்-மதிவதனா, பேரப்பிள்ளைகள்.

(53353)(10.6.3)

# மரண அறிவித்தல்



## திருமதி நல்லம்மா குமாரசாமி

காளி கோயிலடி, தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் ஆசாரி வீதி, கோண்டாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா குமாரசாமி நேற்று (18.10.2014) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-சின்னப் பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற குமார சாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, இராசலிங்கம் அவர்களின் சகோதரியும், புஸ்பராணி (கொழும்பு), பாஸ்கரன் ஆகியோரின் மாமியும், சுஜாதாவின் பெரியதாயும், கோகிலகிருஷ்ணன், ஐதுர்ஷன், கவின்ஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (19.10.2014) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இடம் பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(53365)(4.3.6)

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## வைரவன் கந்தசாமி(தவம்)

துன்னாலை தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வை.கந்தசாமி (தவம்) 16.10.2014 வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவன்- மாணிக்கம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற பாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், பாஸ்கரன்(சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), ஜெசிகலா, துசாந்தி(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துஸ்யந்தினி(சுவிஸ்), மைதிலி (சுவிஸ்), கணேஸ் (சுவிஸ்), வசந்தன் ஆகியோரின் மாமனாரும், அம்சன்(சுவிஸ்), ஆரணி (சுவிஸ்), ஜெரிக்கா(சுவிஸ்), தீபிகா(சுவிஸ்), சஷ்வின்(சுவிஸ்), அதிசா(சுவிஸ்), அக்ஷா (சுவிஸ்), ஆர்த்திகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (19.10.2014) ஞாயிற்றுக் கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேருண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

துன்னாலை தெற்கு, கரவெட்டி. (51969)(4.3.6) வை.வசந்தன் (மருமகன்)

# மரண அறிவித்தல்



## கனகம்மா பொன்னுத்துரை

3ஆம் ஒழுங்கை ஆரியகுளம் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட கனகம்மா பொன்னுத்துரை கடந்த (15.10.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னுத் துரையின் அன்பு ம்னைவியும் ஆனந்தராசா, தவமலர், பச்சைக்கிளி, இந்து ராணி, தங்கம், தங்கேஸ்வரி, நகுலேஸ்வரி (பிரான்ஸ்), வரதராசா (பிரான்ஸ்), பற்குணராசா (பிரான்ஸ்), நாகேந்திரராசா, ஆசை, காந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயும் கமலா, திருநாவுக்கரசு, மார்க்கண்டு, திரவியம், அன்னம், தேவராசா, தர்மராசா(பிரான்ஸ்), சுகந்தி (பிரான்ஸ்), சுதா (பிரான்ஸ்), சாந்தி, விஜயா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் 82/8, 3ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணத்தில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

3 ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம். 0776692613



# மலேசியா

புறப்படுதல் முற்றிலும் இலவசம்

| தொழில் | எண்ணிக்கை | சம்பளம் |
|---|---|---|
| வீட்டுப் பணிப்பெண் Domestic Maid | 25 | 850 |

RM 1 = ரூபா.35/-



HOTLINE 0727 124 402

சேவை நிபந்தனைகள்

- ஒப்பந்த காலம் 02 வருடங்கள்.
- சேவை நேரம் 12 மணித்தியாலங்கள்.
- இருவழி விமான டிக்கட்டுகள் இலவசம்.
- ஏனையவை மலேசியா நாட்டின் தொழில் சட்ட வசதிக்கு உட்பட்டவை.

AI/2541/Advt/10/14



## இக்ரா வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

இல 634- 1/1 மற்றும் 1/2, மருதானை வீதி, மருதானை,கொழும்பு-10.
(ஆனந்தா கல்லூரிக்கு முன்பாக)
தொலைபேசி: 0094 115 544 333 தொலைநகல் : 0094 115 544 337
E-mail : info@ikralk.com

License No. 2541


19.10.2014 இன்று இல்லற பந்தத்தில்
பொன்விழாக் காணும்
தியாகராஜா நல்லம்மா தம்பதியினரிற்கு
எமது இனிய திருமணநாள் நல்வாழ்த்துக்கள்

## 50ஆவது ஆண்டு திருமணநாள் வாழ்த்துக்கள்



நயினை அம்பாள்
தேவஸ்தான
நற்றலைவன் தம்பதியர்!
நாகேஸ்வரி நல்லருளால்
நல்லறமாம் இல்லறத்தில்
ஐம்பதாண்டுகள்
நிறைவு காணும்
நன்னாளின்று
மகிழ்ந்தன்பால்
இன்னும் பல்லாண்டு
காலம்
இனிது வாழ
வேண்டுமென்று
அம்பாளை
இறைஞ்சி நாம்
வாழ்த்துகின்றோம்!
வாழ்க! வாழ்க!!
சுபம்.

அன்போடு வாழ்த்துவோர் :
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
பணியாளர்கள்

(53355)(7.6.3)

# கண்ணீர் அஞ்சலி

(c17065)(08)



உரும்பிராயை பிறப்பிடமாகவும் இல.28, பிறட்ரிக்கா வீதி, வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட

**முத்துத்தம்பி நாகலிங்கம்**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த துயர் அடைவதோடு அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிநிற்கின்றோம்.

**ஓம் சாந்தி !**

செ.செல்வராசா(நாதன்) குடும்பத்தினர், ச.விஜயகுமார் குடும்பத்தினர்
க.இராஜேந்திரகுமார் குடும்பத்தினர், இராஜகோபால் குடும்பத்தினர்

# தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயம் (கரவெட்டி) கந்தபுராண படன பூர்த்தி

கந்தபுராண படன பூர்த்தியும் உற்சவமும் நாளை (20.10.2014) திங்கட்கிழமை இடம்பெறத் திருவருள் பாலித்துள்ளது. அன்று 6.30 மணிக்கு காலைப் பூசையைத் தொடர்ந்து "வள்ளி யம்மை திருமணப் படல படனம்" ஆரம்பமாகி மாலையில் நிறைவுறும். தொடர்ந்து பூர்த்தி உற்சவம் நிகழும். அடியார் கள் கலந்து கொண்டு திருவருள் பெற்றுய்யும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

- நிர்வாக சபையினர்

(51967
(12.3.6)

# ஆசிரிய மாணவர்கள் இரத்ததானம்

அச்சுவேலி, ஒக்.19

கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவர்கள் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இரத்ததானம் செய்தனர்.

இரத்ததான நிகழ்வு கடந்த புதன்கிழமை கலாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. சர்வதேச ஆசிரியர் தின நிகழ்வை முன்னிட்டு நடைபெற்ற இரத்ததான நிகழ்வில் ஒரேதினத்தில் நூறுக்கு மேற்பட்ட ஆசிரிய மாணவர்கள் இரத்ததானம் செய்தனர்.

இரத்ததானம் செய்வதற்கு மேலும் பலர் முன்வந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணங்களினால் இரத்ததானம் செய்யமுடியவில்லை. மேலும் ஒரு தினத்தில் இரத்ததான நிகழ்வு நடைபெறும் என ஆசிரியர் கலாசாலை மாணவர் தலைவர் எஸ்.சயந்தன் தெரிவித்தார்.

(ஓ-11)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**வேலுப்பிள்ளை சண்முகலிங்கம்**

[பிரபல புகையிலை வியாபாரி]



தோற்றம் 22.08.1928 — மறைவு 05.11.2007

பல ஆண்டுகள் கடந்தாலும்
ஆறவில்லை எம் துயரம் எமக்குப்
பல அறிவுரைகள் கூறி எம்மை
வழி நடத்திய குடும்ப விளக்கின்
நினைவுகள் என்றும் எம்மை விட்டு அழியா.

தேவாலய வீதி, திருநெல்வேலி கிழக்கு,
021 320 6334 [53340][4.3.6]

குடும்பத்தினர்.

# இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற
பரம்பரை ஜோதிடர்

**S.N குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா, வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும். (50509)(4.3.6)

காலை 9 மணி முதல்
மாலை 5.00 மணி வரை.
இல.97/8, கண்ணகி அம்மன் கோயில் ஒழுங்கை, கோப்பாய் வீதி, உரும்பிராய், யாழ்ப்பாணம். (உரும்பிராய் சந்திக்கு அருகில்)

T.P: 072 681 6681, 072 681 6691

# தற்போது நொதேர்ண் சென்ரல் வைத்தியசாலையில்...

யாழ் மண்ணில் பிறந்து உயர்கல்வி மற்றும் பயிற்சியும் பெற்று ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் மருத்துவ நிபுணராய் பணியாற்றிய

**வைத்திய கலாநிதி எம். சதானந்தன்**

35 வருடங்கள் மருத்துவ சேவை அனுபவத்துடன் இப்போது தாய்நாட்டுக்கு சேவையாற்ற இலங்கை திரும்பியுள்ளார். அவர்

- குழந்தைப் பேறில்லாதவர்களின் குறைகளைத் தீர்த்தல்
- மாதவிடாய் சம்பந்தப்பட்ட வியாதிகளை நிவர்த்தி செய்தல்
- கர்ப்பம் தரித்த ஆரம்ப நாட்களில் ஏற்படும் குருதிப் பெருக்கு வயிற்று நோ போன்ற நோய்களை நிவர்த்தி செய்தல்
- பெண்களுக்கான ஓமோன் சம்பந்தப்பட்ட நோய்களைக் குணப்படுத்தல் போன்ற

சிகிச்சைகளை வழங்குவதில் விசேட நிபுணத்துவம் பெற்றவராவார். இவருடைய மருத்துவ ஆலோசனைகளை தற்போது **யாழ்ப்பாணத்தில் - நொதேர்ண் சென்ரல் வைத்தியசாலையில்** பெற்றுக் கொள்ளலாம்.

முன் பதிவுகளுக்கு:077 343 9988 ராணி
021 222 2263 / 021 221 9988 / 021 221 9977

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**மகேந்திரன் மயூரன் (மதன்)**

மலர்வு 26 ★ 08 ★ 1987
உதிர்வு 30 ★ 10 ★ 2013

பாதியில் எமைப் பரிதவிக்க விட்டுவிட்டு
இன்றுடன் ஆண்டு ஒன்றானதையா
உனை நினைக்கும் போதெல்லாம்
மூச்சுத் திணறி இதயமது துடிக்க மறுக்கிறதே
மண்ணதனில் வாழ்ந்தது போதுமென்றா-என்செல்வமே
விண்ணுலகம் நோக்கிப் பறந்து சென்றாய்!
வீதிதனில் செல்பவரெல்லாம் தம்பி எனும் போது
என் நெஞ்சமது துடிக்கிறது கண்கள் தூங்க மறுக்கிறது
எமையெல்லாம் கண்ணீர் சிந்த வைத்து விட்டுக்
காலனிடம் பறந்து சென்றதேனோ?

உன் ஆத்மாசாந்தி அடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வட்டு வடக்கு,
சித்தன்கேணி. (53181)(3.6.4)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

திருமதி

**வசந்தா சிவசுப்பிரமணியம்**

(புங்குடுதீவு 4ஆம் வட்டாரம்)



புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு-15, அளுத்மாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தா சிவசுப்பிரமணியம் (17.10.2014) வெள்ளிக்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், சிவசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், தவரஞ்சினி, விஜயன், சுகந்தி, கீதா ஆகியோரின் பாசமிகு தாயும் வேல்வேந்தனின் பாசமிகு மாமியும் கேஸ்வினியின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(53364)(7.6.3)
தொடர்பு: 011 252 4287, 077 871 5204

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி **சதுஷா சுந்தரலிங்கம்**



அன்னை மடியில் 02.09.2002
ஆண்டவன் அடியில் 19.10.2013

ஓர் ஆண்டு ஆனதுவோ
உங்கள் முகம்கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

சி.கந்தையா - பேரன், க.வாமதேவி - பேர்த்தி,
உதயகுமார் - குட்டி மாமா
மட்டுவில் வடக்கு, சந்திரபுரம், சாவகச்சேரி.

(53250)(7.6.3)

# ஈரவிழிகளுடன் ஆண்டுகள் இரண்டு

அமரர் **கந்தன் சின்னத்துரை**



தோற்றம் 24 . 04 . 1939
மறைவு 10 . 11 . 2012

திதி : 19.10.2014

ஆண்டுகள் இரண்டென்ன எத்தனை கடந்தாலும்
மறப்போமா உங்கள் முகம் இன்னும் எத்தனை காலம் எம்முடன்
சந்தோசமாக இருப்பீர்கள் என்று எண்ணினோம்
ஆனால் பாரினில் எம்மைத் தவிக்கவிட்டு
இவ் உலகைவிட்டு உங்களை எடுத்த
காலனுக்கு இரக்கம் தான் இல்லையோ?
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
நாவலம்பதியானை இறைஞ்சுகின்றோம்.

ஊரெழு கிழக்கு.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(53…41)(7.6.3)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 21.09.2014 ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

அமரர் **தம்புத்துரை விஜயேந்திரன்**

(B.A (Hons), M.A
(அபிவிருத்தி உத்தியோகத்தர்
கரவெட்டி பிரதேச செயலகம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (19.10.2014) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் கொடுக்கிளாய் கடற்கரையில் நடைபெறும்.
அந்நிகழ்விலும் தொடர்ந்து நாளை (20.10.2014) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்..

குறிப்பு : இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கொடுக்கிளாய்,
உடுத்துறை.

குடும்பத்தினர்.

(C/17059)(7.6.3)

# சினங்கொள்ளும் சங்கா



இந்தியாவுக்கு எதிராக ஒருநாள் தொடரில் பங்கேற்பதற்கு இலங்கை கிரிக்கெட் சபை சம்மதம் தெரிவித்தமைக்கு இலங்கை அணியின் மூத்த வீரர்களில் ஒருவரான குமார் சங்கக்கார விசனம் தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ணத்தொடருக்காக இலங்கை அணி கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அவர்களுக்கான பயிற் சியை முன்னாள் தேசிய ரக்பி சங்க தலைவர் சந்திரிசன் பெரேரா வழங்கிவருகிறார். இந்த நிலையில் மேற்கிந்திய தீவுகள் அணி தொடரிலிருந்து விலகியுள்ள நிலையில், இந்தியாவுட னான ஒருநாள் தொடருக்கு இலங்கை அணி எவ்வாறு சம்மதித்தது என்று கேள்வி எழுப்பியுள்ளார் சங் கக்கார.

அவர் தனது டுவிட்டரில் தெரிவித்துள் ளதாவது, தற்போது தான் 6 வார கால நீண்ட பயிற்சி முடிவுக்கு வருகிறது. திடீரென இந்தியத் தொடருக்கு தயாராவது சாத்தியமா என்ற தொனியில் கேள்வி எழுப்பி யுள்ளார். (ரி)

# சிறுவனால் சலசலப்பு




இந்தியா மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதிய 4ஆவது ஒருநாள் ஆட்டத்தில் பந்து எடுத்து கொடுக்கும் சிறுவனால் சிறிய சலசலப்பு ஏற்பட்டது. நேற்று முன் தினம் நடந்த ஆட்டத்தின் 38ஆவது ஓவரை மேற்கிந்திய தீவுகள் அணியின் ஜெரோம் ரெய்லர் வீசினார். அந்த ஓவரின் 4ஆவது பந்தை ரெய்னா அடிக்க, அது பவுண்டரி நோக்கி சென்றது. அப்போது ரசல் ஓடி வந்து அந்த பந்தை தனது காலால் தடுத்தார். இந்த நேரத்தில் எல்லைக் கோட்டுக்கு வெளியே நின்ற பந்து எடுத்துக் கொடுக்கும் சிறுவன், தவறாக மைதானத்துக்குள் வந்து பந்தை எடுத்து, ரசலிடம் கொடுத்தார். இதனைப் பார்த்த அனைவரும் வியப்படைந்தனர். இந்த நிகழ்வு போட்டிக்கு நடுவே சலசலப்பை ஏற்படுத்தியது. பின் இந்தியாவுக்கு 2 ஓட்டங்கள் மட்டும் வழங்கப்பட்டது. உடனடியாக அந்த சிறுவனை மைதான நிர்வாகிகள் வேறு இடத்தில் அமர வைத்தனர். இந்த ஆட்டத்தில் இந்தியா 59 ஓட்டங்கள் வித் தியாசத்தில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# இந்தியாவுக்கும் வாய்ப்புண்டு




2015 ஆம் ஆண்டு உலகக்கிண்ண கிரிக்கெட்டில் இந்தியாவின் வாய்ப்புகள் பலமாக உள்ளதாகக் கூறிய அலன் போர்டர், முழு உடல் தகுதியுடைய இஷாந்த் சர்மா அதில் முக்கியமான வீரர் என்று கூறியுள்ளார்.

டில்லியில் நேற்று நடைபெற்ற கிரிக்கெட் நிகழ்ச்சியில் அலன் போர்டர், ரிக்கி பொண்டிங், ஸ்டீவ் வாஹ் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சிகளுக்கிடையே செய்தியாளர்களைச் சந்தித்த ஆஸ்திரேலிய முன்னாள் அணித் தலைவரான அலன் போர்டர், காயமடையாமல் இருந்தால் இஷாந்த் சர்மா இந்தியாவுக்கு ஒரு முக்கியமான வீரர், அவர் ஒரு சிறந்த பந்து வீச்சாளர். ஆஸ்திரேலிய ஆடுகளங்களில் அவரால் சிறப்பாக பந்து வீச முடியும் என்று கூறினார். இந்திய அணித்தலைவர் டோனி பற்றி அவர் குறிப்பிடும்போது, அவர் ஒரு பலமான ஆளுமையானவர். ஆனால் டெஸ்ட் கிரிக்கெட்டில் அவர் இன்னும் முனைப்புடன் ஒரு தலைவரராக செயல்படுவது அவசியம். இந்திய அணியில் சிறந்த வீரர்கள் உள்ளனர், இதனுடன் சரியான அணுகுமுறையைக் கையாண்டால், நிச்சயம் வரும் உலகக்கிண்ணத் தொடரில் அவர்களால் சிறப்பாக விளையாட முடியும் என்றார். (ரி)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகபூசணிசங்கரலிங்கம்



காரைநகரைப் பிறப்பிடமாகவும், நெடுங்கேணி, சாலம்பையை வசிப் பிடமாகவும், இல.07 பிரம்படி லேன், கொக்கு விலை தற்காலிக வசிப்பிட மாகவும் கொண்டவருமான திருமதி நாகபூசணி சங்கரலிங்கம் நேற்று (18.10.2014) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து-சிவகாமிப்பிள்ளை தம்பதி யரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வர்களான சுப்பிரமணியம்- அன்னம்மா தம் பதியரின் மருமகளும், ரவிதாஸ், ரவிந்திரன், செல்வி, கலைச்செல்வி ஆகியோரின் அன்புத் தாயும், யசோதா, பத்மராணி (கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), ரமேஸ்குமார், ஜெயரஞ்சித் ஆகியோரின் அன்பு மாமியும், சத்மிகன், தர்சிகா, மதுசன், விதுசிகா, விதுசிகன், விபுச னன், ஜென்சிகா, அக்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத் துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.07, பிரம்படி லேன்,
கொக்குவில் கிழக்கு. (53375)(10)

தகவல்:
குடும்பத்தினர்.

# யுவராஜ், சேவாக்கிற்கு வாய்ப்பில்லை



2015 உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் சேவாக், யுவராஜ் சிங் இடம்பெறுவதற்கு வாய்ப்பில்லை என்கிறார் இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் சௌரவ் கங்குலி. தனியார் நிறுவனம் ஒன்று நடத்திய நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற கங்குலி செய்தியாளர்களிடம் மேற்படி தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது : சேவாக், யுவராஜ் ஆகியோர் நான் பார்த்ததில் மிகச்சிறந்த வீரர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் காலம் இவர்களையும் பீடித்துள்ளது. இது அனைவருக்கும் ஏற்படுவதுதான். உலகக் கிண்ண கிரிக்கெட்டிற்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் அதிக மாற்றங்களை டோனியும் விரும்ப மாட்டார். ஆகவே அவர்களுக்கு வாய்ப்பு இல்லை என்றே நான் கருதுகிறேன். டெஸ்ட் போட்டிகளில் இந்தியா சிறப்பாக இல்லாவிட்டாலும் ஒருநாள் கிரிக்கெட்டில் இந்திய அணி நல்ல நிலையில் உள்ளது எனவே இந்த முறை வெற்றி வாய்ப்பு உள்ளது என்றார் கங்குலி. (ரி)



# பாகிஸ்தான் பகல் கொள்ளை

சம்பியன்ஸ் லீக் தொடரில் கிடைத்த பணத்தில் 60 சத வீதத்தை பாகிஸ்தான் கிரிக் கெட் சபை எடுத்துக் கொள்ள 3கோடி பணத்தில் வீரர்க ளுக்கு 55 லட்சமே பகிரப்பட் டுள்ளது.

நடைபெற்று முடிந்த ஆறா வது சம்பியன்ஸ் லீக் ரி- 20 தொடர் இந்தியாவில் நடந்தது. இதில் பாகிஸ்தான் சார்பில் லாகூர் லயன்ஸ் அணி பங் கேற்றது.

அந்த அணிக்கு கிடைத்த 3 கோடி இந்திய ரூபா பணத்தில், 1.69 கோடியை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எடுத்துக்கொண் டது. வருமானவரி [illegible] 76லட்சம் அறிவிடப்பட, மீதமுள்ள 55 லட் சம் மட்டுமே லாகூர் அணி யின் வீரர்களுக்கு கிடைத்தது. இருப்பினும் முக்கிய சுற்றுக்கு முன் னேறினால் கிடைக்கும் 1.23 கோடியை வீரர்களே பகிர்ந்து கொள்ளலாம் என்று அறிவிக் கப்பட்டு இருந்தது. ஆனால் அந்த அணி [illegible]மதன்மைச் சுற்றுட னேயே [illegible] இருந்து வெளி [illegible] தொடரில் [illegible] யேற்றப்பட்டது. இதனால் லாகூ அணியில் பங்கேற்ற 15 வீரர் கள் மற்றும் நிர்வாகிகளுக்கு குறைந்த பட்சம் 10 லட்சத்தில் இருந்து அதிகமாக 11 லட்சம் வரை கிடைத்துள்ளது. (ரி)

## அந்தியேட்டி அழைப்பு



தோற்றம் 23.07.1990

மறைவு 23.07.2014

[illegible] 23.07.2014 அன்று சிவபதமடைந்த கடந்த [illegible] விளக்கு எங்கள் குல[illegible]

அமரர் நாகராசா சுதாகரன்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (20.10.2014) திங்கட்கிழமை காலை 5 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மதியம் 12.00 மணி அளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்


அத்தாய், அல்வாய் கிழக்கு,
அல்வாய். (C/17067)(10)

குடும்பத்தினர்.





தெல்லிப்பழை கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட அம்பனை குடும்பப் பாடசாலைகளுக்கு இடையே சிறுவர் தினத்தையொட்டி நடைபெற்ற போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வும் மற்றும் சிறுவர் தினக் கொண்டாட்டமும் வெள்ளிக்கிழமை முதன்மைப் பாடசாலையான தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.
அம்பனை குடும்பப் பாடசாலைகளில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, அளவெட்டி சீனன் கலட்டி ஞானோதயா வித்தியாலயம், பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம், கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலயம், தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயம் அளவெட்டி சதானந்தா வித்தியாலயம் என்பன கலந்து கொண்டன. (ஒ-86)



ஒக்ரோபர் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கொக்குவில் பொது நூலகத்தால் வியாழக்கிழமை முதல் ஆங்கில நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்கள் சென்று பயன்பெற்று வருகின்றனர். (ஒ)



ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர்களுக்கும் மாணவ முதல்வர்களுக்கும் இடையே நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற ஆசிரியர் அணியின் தலைவர் தமிழருவி த.சிவகுமாரன், கல்லூரியின் அதிபர் ம.ச.பத்மநாதனிடமிருந்து வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொள்வதையும் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்களான எஸ்.சுந்தராங்கன், என்.பிரதாஸ் ஆகியோரையும் காணலாம். (ஒ)



யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் யாழ். கல்வி வலய 'செயற்பட்டு மகிழ்வோம்' சிறுவர் விளை யாட்டுப் போட்டி நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த கல்வி அமைச்சின் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி அலகு செயற்றிட்ட அதிகாரி மில்ரோய் ஜயமான்ன, மங்கல விளக்கேற்று வதையும் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி போட்டியை ஆரம் பித்து வைப்பதையும், விருந்தினர்கள் போட்டிகளைப் பார்வையிடுவதையும் சிறப்பு விருந்தினரான மாகாணக் கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சத்திய பாலன் பரிசில் வழங்குவதையும் காணலாம். (ஒ)

நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையில் உள நல நாள் நிகழ்வுகள் அதிபர் தி.ரவீந்திரநாதன் தலைமையில் இடம்பெற்றன. பிரதம விருந்தினராக யாழ். வலய கல்வி கணித ஆசிரிய ஆலோசகர் ஈ.எவ்.ஆர். ஜெயக்குமார் கலந்து கொண்டார். (ஒ)



வவுனியா வளாகத் தில் இடம்பெற்ற விஜயதசமி விழாவில் ஆசிரியர் கிருஷ்ணதாசன் பூங்கண்ணனால் எழுதப் பட்ட 'வளாகவிருட்சம்', 'பொது அறிவுக் கையேடு' என்ற காலாண்டு சஞ்சிகை வெளியிடப்பட்டது. இந்தச் சஞ்சிகையின் முதற் பிரதியை வவுனியா வளாக சிரேஷ்ட உதவி நூலகர் எஸ். சண்முகதாசன் வழங்க வவுனியா வளாக முதல்வர் க.க. அருள்வேல் வெளியிட்டார். (ஒ)















சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்ற வருடாந்த கலை விழா நிகழ்வு அண்மையில் மன்றத்தின் கலா மண்டபத்தில்நடைபெற்றது. விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், ச.ஸ்ரீமதுசூதனக் குருக்கள், வலி.மேற்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் நிருபா காசிநாதன் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும், நடைபெற்ற நிகழ்வுகளில் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம்.

# சீரற்ற காலநிலையால் 17 லட்சம் பேர் பாதிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் இதுவரையில் நால்வர் பலியாகியுள்ளனர். அத்துடன், 4 இலட்சத்து 82 ஆயிரத்து 793 குடும்பங்களைச் சேர்ந்த 16 லட்சத்து 95 ஆயிரத்து 860 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

14 மாவட்டங்களில் கடந்த 3 ஆம் திகதி முதல் நேற்று சனிக்கிழமை காலை வரையிலான கடந்த 15 நாள்களாக இடம்பெற்ற இடர்களினாலேயே இந்த இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அது தெரிவித்துள்ளது.

வரட்சி, மழை, மண்சரிவு, வெள்ளப்பெருக்கு, காற்று, இடர்களிலேயே அவர்கள் சிக்கியுள்ளனர். மொனராகலை, பதுளை, பொலநறுவை, அனுராதபுரம், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, குருநாகல், புத்தளம், ஹம்பாந்தோட்டை, மாத்தறை, கேகாலை, இரத்தினபுரி, மாத்தளை ஆகிய 14 மாவட்டங்களிலும் 24 வீடுகள் முற்றாக சேதமடைந்து 223 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்து உள்ளன. சீரற்ற காலநிலை தொடர்வதால் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## தொடர்ச்சிகள்

### அம்மாவுக்கு

நீதிபதி மைக்கல் டி குன்ஹா, ஜெயலலிதா உள்ளிட்ட 4 பேரையும் பிணையில் விடுவிக்க 11.40 மணியளவில் உத்தரவிட்டார்.

இதனையடுத்து நான்கு பேரும் தலா ஒரு கோடி ரூபா சொத்துப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர். இதன் பின்னர் நீதிபதி குன்ஹாவின் உத்தரவு, பரப்பன அக்ரஹார சிறைச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. சிறைப் பதிவாளரிடம் கையளிக்கப்பட்டு, சிறை நடைவடிக்கைகளை முடித்துக் கொண்டு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா 3.15 மணிக்குச் சிறையிலிருந்து வெளியே வந்தார்.

பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் ஜெயலலிதாவுக்கு அதி உச்ச பாதுகாப்பு வழங்குமாறு உத்தரவிட்டிருந்ததற்கு அமைய, 11 பாதுகாப்பு வாகனங்கள் சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டிருந்தன. அதில் சிறப்புக் காரில் ஏறிய ஜெயலலிதா, எச்.ஏ.எல்விமான நிலையத்துக்குச் சென்றார். 4.10 மணிக்குச் சிறப்புத் தனி விமானம் மூலம் சென்னை புறப்பட்ட அவர், மாலை 5.05 மணிக்குச் சென்னை விமான நிலையத்தை வந்தடைந்தார்.

சென்னை விமான நிலையத்தில் குவிந்திருந்த அ.தி.மு.க தொண்டர்கள் அவருக்கு மிகச் சிறப்பான வரவேற்பளித்தனர். அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு வாகனங்கள் சூழ தனது இல்லத்தை நோக்கி ஜெயலலிதா காரில் பயணித்தார். அவர் செல்லும் வழிநெடுகிலும், பல மணி நேரம் காத்திருந்து பொதுமக்கள் பூமழை பொழிந்தனர். கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது தமிழக மக்கள் அலையெனத் திரண்டிருந்தனர்.

மாலை 6 மணியளவில் போயஸ் தோட்டத்திலுள்ள தனது வீட்டை ஜெயலலிதா வந்தடைந்தார். (த-5)

### கூட்டமைப்பு

என்ற, எதிர்பார்ப்பு எழுந்துள்ளதாகவும் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் எடுத்த நடவடிக்கையை ஐரோப்பிய நீதிமன்றம் ரத்துச் செய்து கடந்த வியாழக்கிழமை தீர்ப்பு வழங்கியிருந்தது. இதற்குப் பல தரப்பினரும் மகிழ்சியை வெளிப்படுத்தியிருந்தனர்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சேனாதிராஜாவிடம் கேட்டபோது, ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் நன்கு ஆராய்ந்து தீர்ப்பு வழங்கியிருக்கின்றது. இந்தத் தீர்ப்பை ஏனைய நாடுகளும் பின்பற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. தமிழினப் பற்றாளர்கள் இதனை வரவேற்கின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்களும் இதனை வரவேற்கின்றோம் - என்று தெரிவித்தார். (த-5)

### மஹிந்தவின்

வதில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. இந்த மின் விளக்குகளுக்குக் கரைச்சிப் பிரதேச சபை கட்டணம் செலுத்தாமையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

வடக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் பிரதான வீதிகளின் விளக்குகளுக்குரிய கொடுப்பனவை மின்சார சபை வழங்குவதைப் போல இங்கும் வழங்கவேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ பணித்திருந்தார்.

இதனையடுத்து கிளிநொச்சி நகர் பிரதேச மின் விளக்குகள் அன்றைய தினமே ஒளிர்ந்தன. ஆனால் யாழ். மாவட்டத்தில் அதற்குரிய எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

யாழ்.மாவட்டத்தில் பிரதான வீதி அகலிப்புடன், வீதி விளக்குகள் முக்கியமான சந்திகளில் பொருத்தப்பட்டுள்ளன. அவை பொருத்தப்பட்டு 10 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் ஒளிரவில்லை. குறித்த வீதிவிளக்குகளுக் குரிய கட்டணத்தை அந்தந்தப் பிரதேச சபைகள் செலுத்தவேண்டும் என்பதாலேயே, இது தொடர்பில் பிரதேச சபைகள் மின்சார சபையுடன் ஒப்பந்தம் செய்யவில்லை.

யாழ்.மாவட்டத்தில் சுமார் 800 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டும் பயனில்லாத நிலையில் உள்ளன. இந்த நிலையில் ஜனாதிபதியின் அறிவிப்பை அடுத்து அவற்றை ஒளிரச் செய்வதற்கு மின்சார சபை நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அதுவும் இடம்பெறவில்லை.

'ஜனாதிபதியின் பணிப்பு தொடர்பில் சுற்றறிக்கை எதுவும் வரவில்லை. அத்துடன் அந்த வீதி விளக்குகளுக்கான பராமரிப்புத் தொடர்பில் பிரதேச சபைகள் எம்முடன் ஒப்பந்தம் செய்ய வேண்டும். மேலும் குறித்த விளக்குகள் 120 வாற்ஸ் உடையவை. இவற்றைப் பயன்படுத்தினால் மின்சாரம் விரயமாகும். மின்சாரத்தைச் சேமிக்குமாறு சொல்லிக் கொண்டு இவ்வாறு செய்வது பொருத்தமானது அல்ல.' என்று மின்சார சபையின் யாழ்.மாவட்ட உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-5)

### யாழ். மாநகர

இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது, தீபாவளிப் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு தென்னிலங்கை வர்த்தகர்களின் வருகை அதிகரித்துள்ள நிலையில் குடாநாட்டு வர்த்தகர்களின் வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பில் அவரிடம் கேட்ட போது,

குடாநாட்டில் நடைபாதை வியாபாரம் மற்றும் அங்காடிக் கடைகளின் உருவாக்கத்தால் யாழ்.வர்த்தகர்கள் பொருளாதார ரீதியாகப் பாதிப்பு ஏற்பட்டுள்ளமையை யாழ். மாநகர சபைக்குத் தெரியப்படுத்தியிருந்தோம். ஆனால் மாநகர சபை தன்னுடைய சொற்ப இலாபத்துக்காகத் தென்னிலங்கை வர்த்தகர்களுக்கு அனுமதியை வழங்கி வருகிறது.

தென்னிலங்கையில் அங்காடி வியாபாரம் நிறுத்தப்பட்டிருப்பதால் அங்குள்ள வர்த்தகர்கள் குடாநாட்டுக்கு வருகை தருகின்றனர். எனவே உள்ளூராட்சிச் சபைகளும் யாழ். மாநகர சபையும் அனுமதி வழங்கும்போது குடாநாட்டின் பொருளாதார நிலையையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

யாழ்.மாநகர சபையைத் தமிழ்ப் பற்றுள்ள அல்லது பிரதேசத்தின் அபிவிருத்தியில் அக்கறை கொண்டுள்ள ஒருவர் பொறுப்பேற்கும் பட்சத்திலேயே யாழ்ப்பாண வர்த்தகர்களுக்கு நன்மை கிடைக்கும். இது தொடர்பில் மாகாண சபையும் கருத்தில் கொள்ள வேண்டும். குறிப்பாக வர்த்தகத்தில் பாதிப்பு ஏற்படும் போது மக்களின் பொருளாதாரமும் பாதிப்புறும். வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குப் பொருளாதார ரீதியான அபிவிருத்தியே கட்டாயம் தேவை எனவும் தெரிவித்தார் ஜெயசேகரம்.

இதேவேளை,

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தென்பகுதி நடைபாதை வியாபாரிகள் யாழ்ப்பாணத்துக்குப் படையெடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நூற்றுக்கணக்கான நடைபாதை வியாபாரிகள் வாகனங்கள் மூலம் யாழ். நகரை வந்தடைந்தனர். மழை காரணமாக அவர்கள் கொண்டு வந்த உடுபுடைவைகளை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

யாழ். மாநகராட்சி மன்றத்தினால் முற்றவெளியில் புல்லுக்குளத்துக்கு முன்பாகவுள்ள திறந்தவெளி அரங்க வளாகத்திலேயே நடைபாதை வியாபாரத்துக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த வளாகத்தில் கொட்டகைகளை அமைத்து வியாபார நடவடிக்கையில் தெற்கு வியாபாரிகள் ஈடுபட்டு வருகின்றனர். (த-14-17)

### ரணில்

தன் பின்னணியில் இருக்கும் எதிர்க்கட்சி அரசியல்வாதி யார்?' என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. இந்தச் சுவரொட்டிகள் கொழும்பில் பல இடங்களிலும் பெரிய அளவில் ஒட்டப்பட்டிருந்தன. இதனால் அங்கு ஒரு பரபரப்பான நிலை ஏற்பட்டது.

அதேவேளை, புலிகள் மீதான தடையை நீக்கவே ரணில் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார் என்று ஜனாதிபதி மஹிந்த தெரிவித்ததாக கொழும்பு அரச ஆங்கில ஊடகம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டிருந்தது. இந்தச் செய்தி வெளியான அதே நாளில் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டமையால் ரணிலுக்கும் புலிகளுக்கும் தொடர்பு என்ற தகவல் கொழும்பு முழுவதும் தீ எனப் பரவி பரபரப்பு மேலும் வலுப் பெற்றது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பௌத்த பிக்குகளுக்கு அற நெறிப் பாடசாலை ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு அலரி மாளிகையில் இடம்பெற்றபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார் என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க புலிகளின் ஆதரவாளர். அவர் ஐரோப்பாவுக்கு பயணம் மேற்கொண்டு இரண்டு வாரங்களில் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது. புலிகளின் கனவான தனி ஈழத்தை அமைக்கும் நோக்கில் தற்போதும் புலம் பெயர் நாடுகளில் நிதி சேகரிப்பு நடைபெறுகிறது. எனினும் நான் இருக்கும் வரை ஈழம் என்பது கனவாகவே இருக்கும். அதற்காகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு முயற்சிக்கிறார்கள்" என்று ஜனாதிபதி மஹிந்த இந்த வைபவத்தில் கூறினார் என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் நேற்று கொழும்பு நகரில் பரபரப்பான நிலை காணப்பட்டது. கொழும்பில் ஒட்டப்பட்ட குறித்த சுவரொட்டிகளை பெரும் எண்ணிக்கையான சிங்கள மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று வாசித்தனர் என்று அங்கிருந்த கிடைத்த செய்திகள் தெரிவித்தன. நேற்று இரவு வரை குறித்த சுவரொட்டிகள் அகற்றப்படாமல் அப்படியே இருந்தன என்று கூறப்பட்டது. (த - 5)

### மன்னார்

வைத்திய அதிகாரி தனஞ்சய வைத்தியரத்ன தெரிவித்துள்ளார்.

மன்னார் - திருக்கேதீஸ்வரம் வீதியில் நீர்க் குழாய் பொருத்தும் நடவடிக்கைகளின் போது, கடந்த 2013ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20 திகதி மனிதப் புதைகுழி இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

பின்னர் அது தோண்டப்பட்டு மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டதுடன் நீதிமன்றத்தின் உத்தரவின்படி விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் அதனைத் தோண்டும் பணிகளை நிறைவு செய்வது தொடர்பான அறிக்கையே எதிர்வரும் 27 ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்கப் படவுள்ளது. (த)

### மது விற்பனைக்கு

நோக்குடன் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் வர்த்தகர்கள் மற்றும் பொலிஸா உட்படப் பொதுச் சுகாதார [illegible]ரிசோதகர்களையும் [illegible]ணைத்து விசேட குழு க[illegible] ஜூன் மாதம் நியமிக்கப்[illegible]து.

இந்தக் குழுவின[illegible] விழிப்புணர்வு நடவடிக்[illegible] மேற்கொள்ளப்பட்டு வ[illegible] நிலையில் அடுத்த கட்[illegible]வடிக்கையாக மது மற்றும் புகை பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் உரிய சட்டங்களை நடைமுறைப்படுத்தாத பட்சத்தில் அவர் கள் மீதான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மது மற்றும் புகைபொருள்களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு அவற்றை விற்பனை செய்ய முடியாது. அத்துடன் புகைபொருள்களை தமது வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் வைத்துப் பாவிப்பதற்கு அனுமதி வழங்க முடியாது. மாறாக அவ்வாறு விற்பனை செய்யும்போது தனியாக மறைவான இடங்களை பொது மக்களுக்குப் பாதிப்பு இல்லாமல் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இதேவேளை, புகைப்பொருள் மற்றும் மதுவைத் தயாரிக்கும் நிறுவனங்கள் மது விளம்பரங்களையோ அல்லது நிகழ்வுகளுக்கு அனுசரணை வழங்குவதோ தடை செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகள் குறித்து யாழ்.மாவட்டத்தில் பொலிஸார் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்த விசேட குழுவினர் கண்காணிப்பு மேற்கொள்ளவுள்ளனர்.(த-14)

### கஜதீபனிடம்

அவரது வீட்டுக்குச்சென்ற சீருடை அணிந்த நான்கு இராணுவத்தினர், அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

வயாவிளான் இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி பண்டார என்று அறிமுகப்படுத்திக் கொண்டவரே தன்னிடம் விசாரணைகளை மேற்கொண்டதாக கஜதீபன் தெரிவித்துள்ளார்.

வீட்டுக்கு வந்த இராணுவத்தினர் தனது தந்தையிடம், நான் எங்கே என்று கேட்டதாகவும், அதன் பின்னர் நான் வெளியில் வந்தபோது விசாரணை நடத்தியதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதன்போது உங்களுக்கு திருமணமாகிவிட்டதா, மனைவி யார், குழந்தைகள் உள்ளனரா, எத்தனை பேர்? என தேவையற்ற பல கேள்விகளை அவர்கள் தன்னிடம் வினவினர் என்றும், தன்னிடம் இராணுவத்தினர் சகல தகவல்களையும் அறிந்து கொண்டனர். எனினும் விசாரணைக்கான காரணத்தை தெரிவிக்கவில்லை. மேலிடத்து உத்தரவு என்று மட்டுமே குறிப்பிட்டனர் என்றும் கஜதீபன் தெரிவித்தார்.

கடந்த மாதமும் மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் வீட்டுக்குச் சென்ற இராணுவத்தினர் குடும்பப் பதிவுகளை மேற்கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் பலாலி இராணுவ ஊடகப் பிரிவு அதிகாரி மேஜர் மல்லவராச்சியிடம் கேட்டபோது, விசாரணை செய்து பதிலளிப்பதாகத் தெரிவித்தார். (த-5)

### இவ்வாண்டு

702 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இந்த ஆண்டு இன்று வரை 426 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியே பதிவாகியுள்ளது.

மேலும் நேற்று 1.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன் இந்த மாதத்தில் நேற்று வரை, 34.5 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதேவேளை, நாட்டின் ஏனைய பகுதிகளில் பெய்து வரும் கடும் மழை காரணமாக இது வரை 150 வீடுகள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளதாக மத்திய இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (த-5)

### காணி

154 ஜி இல் குறித்துரைக் கப்பட்டவாறான, மாகாண சபை நிரலின் 18 ஆம் பந்தியின் பின்னிணைப்பு 2 இல் விபரிக்கப்பட்டவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசையும், ஜனாதிபதியையும் முறைப்படி கோருவதென்று இந்தச் சபை தீர்மானிக்கின்றது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானம் வடக்கு மாகாண சபையில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இதனை நடைமுறைப்படுத்துமாறு கோரி அவைத் தலைவர் சீ.வி.கே. சிவஞானத்தினால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவுக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (த-5)


## புனரமைப்பு ஆரம்பம்



புனரமைப்புப் பணிகள் முடிவுறும் வரையில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறமாட்டது என யாழ். மாநகர ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் அறிவித்துள்ளார்.

துரையப்பா விளையாட்டரங்கு இந்திய அரசின் விளையாட்டுத் துறை அமைச்சின் உதவியுடன் புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டு புதிய அரங்கிற்கான அடிக்கல் நடப்பட்டது. இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புனரமைப்புப் பணிகள் நடைபெறுவதால், குறித்த பணிகள் முடிவுறும் வரை அங்கு விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறமாட்டாது என அவர் அறிவித்துள்ளார். (ரி-7)

## போராடி வெற்றி பெற்றது மல்லாவி மத்திய கல்லூரி



யாழ்ப்பாணம்.ஒக்.19

கடுமையான போராட்டத்தின் மத்தியில் எதிரணியை வெற்றி பெற்றது மல்லாவி மத்திய கல்லூரி அணி, அதே வேளை இலகுவாக வெற்றி பெற்றது கொக்குவில் இந்துக் கல்லூரி அணி.


வடமாகாண ரீதியாக யாழ். மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை நடத்தும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 19 வயதுப்பிரிவு ஆண் பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் வவுனியா மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 33:25 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. தொடந்து இடம்பெற்ற ஆட்டத்தில் மல்லாவி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் மல்லாவி மத்திய கல்லூரி அணி 34:33 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இதேவேளை நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மோதிக் கொண்டது. இதில் கடுமையான போராட்டத்தின் பின்னர் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி 31:30 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ரி- 23)

## கிரிக்கெட் பயிற்றுனர்களுக்கான செயலமர்வு





வலி.வடக்கு,ஒக்.19

வட மாகாண கிரிக்கெட் பயிற்றுனர்களை உருவாக்கும் வகையில் இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் இலங்கை கிரிக்கெட் பயிற்றுனர்கள் சங்கத்தினால் கடந்த ஒரு வார காலமாக கிரிக்கெட் பயிற்றுனர்களுக்கான செயலமர்வு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடத்தப்பட்டது.

பயிற்றுனர்கள் மட்டம் ஒன்றுக்காக நடைபெற்ற இந்த பயிற்சி முகாமில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 30 பயிலுனர்கள் இணைக்கப்பட்டு துடுப்பாட்டம் பந்து வீசுதல் களத்தடுப்பு என அனைத்து துறைகளிலும் செயல்முறைப் பயிற்சிகள் மற்றும் விரிவுரைகள் இடம் பெற்றன.

இந்த செயலமர்வில் கொழும்பில் இருந்து வருகைதந்த இலங்கை கிரிக்கெட் பயிற்றுனர்கள் பிரிவைச் சேர்ந்த பயிற்றுனர்களான சுனில் பெர்ணான்டோ, ஹசன்டிமெல் ரவீனைந்திரா, புஸ்பகுமாரா, சமிலகமகே, எக்கநாயக்கா, பிரசாந் ராஜபக்ஷ ஆகியோரும் மற்றும் யாழ் மாவட்டப் பயிற்றுனர்களான லக்சிதா கெங்காதரன், ஜெயக்குமார் சுதர்சன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ரி-86)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம்,ஒக்.19

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் சென்.மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான, அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி- 23)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.19

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும், அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் முறையிலான ஆட்டங்கள் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுகழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று ஞாயிற்றுக்கிழமை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி- 23)

## வெற்றிக் கோல் அடித்தார் சுதர்சன் சம்பியனானது சென். அன்ரனிஸ்

யாழ்ப்பாணம்.ஒக்.19

சுதர்சனின் அதிரடி ஆட்டத்தின் மூலம் பெறப்பட்ட கோல், ஆட்டத்தின் வெற்றிக் கோலாக, வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக பி அணியை வீழ்த்தி சம்பியன் ஆனது அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி.

இரணமாதாநகர் கடற்தொழில் கூட்டுறவு சங்கமும் இரணமாதாநகர் கிராம அபிவிருத்திச்சங்கமும் இணைந்து நடத்தும் அழைக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான, அணிக்கு 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரணமாதாநகர் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக பி அணியை எதிர்த்து அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது அமர்க்களமாக ஆரம்பமான முதற்பாதி ஆட்டத்தின் 3 ஆவது நிமிடத்தில் அந்தோனியார்புரம் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் சுதர்சன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை அருமையாகப் பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்தார். இதனால் முதற்பாதி ஆட்டம் தொடக்கத்திலேயே சூடுபிடிக்கத் தொடங்கியது. பதிலுக்கு தமது அணிக்கான கோலைப் பெற கடுமையாகப் போராடினர் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக பி அணியினர். ஆனால் அவர்களால் தமது கோல்கள் எதனையும் பெற்றுக் கொள்ளமுடியாமல் போக ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டது. அப்போது அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியதும் இரு அணி வீரர்களும் புது வேகத்துடன் மோதிக் கொண்டனர். இரு அணி வீரர்களும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்ல என் நிரூபிக்கும் வகையில் மோதியதால் ஆட்டம் பார்வையாளர்களுக்கு விருந்தாக அமைந்தது. இரண்டு அணியனரும் தமது அணிக்கான கோல் போடுவதற்கு கடுமையாக முயற்சித்த போதும் அவர்களால் தமது அணிக்காக மேலதிகமாக கோலைப் பெறமுடியவில்லை. ஆட்ட நேர முடிவில் அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

ஆட்டத்தின் சிறந்த வீரராக அந்தோனியார்புரம் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் சுதர்சனும், சிறந்த கோல் காப்பாளராக சென். ஆன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் எம்.மதுஷனும் தெரிவானார்கள். தொடரின் சிறந்த அணியாக தோட்ட வெளி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி தெரிவானது.

இதேவேளை தாழ்வுப்பாடு சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் வலைப்பாடு சென்.ஆன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற மூன்றாவது இடத்திற்கான ஆட்டத்தில் தாழ்வுப்பாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கியது. (ரி- 23)

## சமனிலை தவிர்ப்பு உதையில் யங்கம்பன்ஸை வென்றது மனோகரா

கரணவாய்,ஒக்.19

சமனிலை தவிர்ப்பு உதை மூலம் 3:2 என்ற கோல் மூலம் கம்பர் மலை யங்கம்பன்ஸ் அணியை வீழ்த்தி அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது இருந்த போதும் புள்ளிக்கள் அடிப்படையில் இரு அணிகளும் அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றன.

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம், மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. அதில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும், அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் மோதின.

இரு அணிகளுமே ஏற்கனவே அரையிறுதி ஆட்டங்களிற்கு தெரிவு செய்யப்பட்ட நிலையில் குழுவில் முதல் இடத்தைத் தெரிவு செய்வதற்காக இந்தப் போட்டி நடத்தப்பட்டது. இதனால் ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்றது. இரு அணியினரும் கோல் பிரதேசங்களை மாறி மாறி ஆக்கிரமித்த போதும் கோல் போடுவதந்கான சந்தர்ப்பங்களை வீணாக்கியதால் ஆட்டம் சமனிலையில் முடிவடைந்தது. இதனை அடுத்து வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 3:2 என்ற கோல் கணக்கில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. குழுவில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.



அடுத்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் சக்கோட்டை சென் சேவியர் விளையாட்டுக் கழகமும் மோதின.

இதில் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் 3:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பாக தர்சன் சாந்தன் மற்றும் குமார் ஆகியோர் தலா ஒரு கோலைப் போட்டனர். (ரி-108)

# சங்கா, லாராவை முந்தினார் கோஹ்லி



❝ நேற்று முன்தினம் நடைபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான 4ஆவது ஒருநாள் ஆட்டத்தில் அபாரமாக ஆடிய விராட் கோஹ்லி, ஒருநாள் அரங்கில் தனது 20ஆவது சதத்தை பதிவு செய்தார்.


சர்வதேச ஒருநாள் ஆட்டத்தில் அதிக சதம் அடித்தவர்கள் பட்டியலில் சங்கா, லாராவைப் பின்தள்ளி புதிய சாதனை படைத்துள்ளார் இந்தியஅணியின் துணைத்தலைவர் விராட் கோஹ்லி.

நேற்று முன்தினம் நடைபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான 4ஆவது ஒருநாள் ஆட்டத்தில் அபாரமாக ஆடிய விராட் கோஹ்லி, ஒருநாள் அரங்கில் தனது 20ஆவது சதத்தைப் பதிவு செய்தார். இதன்மூலம் அதிக சதம் அடித்த வீரர்கள் பட்டியலில், 7ஆவது இடத்தை முன்னாள் பாகிஸ்தான் வீரர் சயீட் அன்வருடன் பகிர்ந்து கொண்டார்.

மேலும் தலா 19 சதங்களைப் பெற்றுள்ள மேற்கிந்திய தீவுகள் அணியின் பிரையன் லாரா, இலங்கை அணியின் குமார் சங்கக்கார ஆகியோரையும் முந்தினார். அதிக சதம் அடித்தவர்களின் பட்டியலில் இந்தியாவின் சச்சின் 49 சதங்களுடன் முதல் இடத்திலும், ஆஸ்திரேலியாவின் பொண்டிங் 30 சதங்களுடன் இரண்டாவது இடத்திலும், இலங்கையின் ஜெயசூரியா 28 சதங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

அதேவேளை தனது 133ஆவது இன்னிங்க்ஸில் கோஹ்லி கடந்துள்ள 20 சதங்கள் என்னும் இந்த மைல் கல்லை, நட்சத்திர வீரர் சச்சின் 197ஆவது இன்னிங்ஸிலேயே அடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ரி)

## காலிறுதியுடன் வெளியேறினார் சாய்னா



தரவரிசையில் இரண்டாவது இடத்திலுள்ள சீன வீராங்கனையுடனான காலிறுதியில் அதிர்ச்சித் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார் இந்திய பூப்பந்தாட்ட வீராங்கனை சாய்னா நேவால்.

டென்மார்க் ஓபன் சுப்பர் பூப்பந்தாட்ட தொடரின் போட்டிகள் டென்மார்க்கின் ஒடென்ஸ் நகரில் நடைபெற்று வருகிறன. இதில் நேற்று முன்தினம் பெரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்திய வீராங்கனை சாய்னா நேவால், உலகத் தர வரிசையில் 2ஆவது இடத்தில் இருக்கும் சீன வீராங்கனை ஷிசியான் வாங்கை சந்தித்தார். 45 நிமிடங்கள் நடந்த மோதலில் சாய்னா நேவால் 20:22, 15:21 என்ற நேர் செற்றில் அதிர்ச்சி தோல்வியடைந்தார். அத்துடன் குறித்த தொடரில் இருந்தும் வெளியேறினார். (ரி)

❝ 45 நிமிடங்கள் நடந்த மோதலில் சாய்னா நேவால் 20:22, 15:21 என்ற நேர் செற்றில் அதிர்ச்சி தோல்வியடைந்தார்

## தூய்மை இந்தியாவில் சானியா



இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆரம்பித்து வைத்த தூய்மை இந்தியா திட்டத்தில் இந்தியாவின் நட்சத்திர ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சாவும் இணைந்துள்ளார்.

கடந்த 2ஆம் திகதி காந்தி ஜெயந்தி தினத்தை முன்னிட்டு தூய்மையான இந்தியாவை உருவாக்கும் நோக்கில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியினால் தூய்மை இந்தியா திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு திரையுலக நட்சத்திரங்கள், விளையாட்டுத் துறை நட்சத்திரங்கள் உள்ளிட்ட 9 பேருக்கு மோடி அழைப்பு விடுத்திருந்தார். அவரது அழைப்பினை ஏற்ற நட்சத்திரங்கள் பலரும் அந்தத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் இந்திய நட்சத்திர ரென்னிஸ் வீராங்கனை சானியா தனது தந்தையுடன் இந்தத் திட்டத்தி இணைந்து ஐதராபாத்தில் வீதிகளை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளார். இந்தத் திட்டத்தில் சானியா இணைந்து கொண்டதன் பின்னர் நடிகர்களான ஷாருக்கான், ரித்தேஷ் தேஷ்முக், ஸ்குவாஷ் வீராங்கனை தீபிகா பல்லிகல், பூப்பந்தாட்ட வீராங்கனை பி.வி. சிந்து, ரென்னிஸ் வீரர் சோம்தேவ் தேவ்வர்மன், தெலுங்கானா அமைச்சர் கேடிஆர் ஆகியோரை இந்தத் திட்டத்தில் இணையுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

அண்மையில் இந்திய கிரிக்கெட் அணியின் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரும் இந்தத் திட்டத்தில் இணைந்து, தனது ரசிகர்களுடனும் நண்பர்களுடனும் இணைந்து தெருக்களை சுத்தம் செய்தமை குறிப்பிடத்தக்கது. (ரி)

## சச்சின் - டிராவிட் சாதனை தகர்ந்தது



ஒருநாள் கிரிக்கெட்டில் அதிகூடிய இணைப் பாட்டத்தைப் பெற்று உலக சாதனை படைத்திருந்த சச்சின் - டிராவிட் ஜோடியின் சாதனையை தென்னாபிரிக்க ஜோடி முறியடித்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற தென்னாபிரிக்க உள்நாட்டு ஒருநாள் ஆட்டமொன்றில் நைட்ஸ் அணிக்கு எதிராக டொல்பின் அணியின் தொடக்க வீரர்களான மோர்னி வான் விக் மற்றும் கேமருன் டெல்போர்ட் ஜோடி 50 ஓவர்கள் முழுவதும் ஆட்டமிழக்காமல் விளையாடி 367 ஓட்டங்களை குவித்தனர். இதில் மோர்னி வான் விக் 171 பந்துகளில் 15 பவுண்டரி 5 சிக்ஸர்களுடன் 175 ஓட்டங்களும், டெல்போர்ட் 130 பந்துகளில் 12 பவுண்டரி 6 சிக்ஸர்களுடன் 169 ஓட்டங்களும் எடுத்தனர். பதிலுக்கு ஆடிய நைட்ஸ் அணி 342 ஓட்டங்களை பெற்று 25ஓட்டங்களால் தோல்வியுற்றது.

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் சச்சின், டிராவிட் ஜோடி இணைந்து 1999ஆம் ஆண்டு நியூஸிலாந்துக்கு எதிராக ஐதராபாத்தில் நடந்த ஆட்டத்தில் 331 ஓட்டங்களை எடுத்ததே சாதனையாக இருந்து வந்தது. அனைத்து விதமான ஒருநாள் ஆட்டங்களுடனும் ஒப்பிடுகையில் வான் விக்-டெல்போர்ட் ஜோடி சச்சின் - டிராவிட்டின் பதிவை முறியடித்து புதிய சாதனை படைத்துள்ளனர்.

அதேவேளை முதலாவது இலக்குக்காக பாகிஸ்தான் உள்நாட்டு கிரிக்கெட் வீரர்கள் குலாம் அலி மற்றும் சொகைல் ஜாபர் இணைந்து ஒருநாள் ஆட்டத்தில் 326 ஓட்டங்கள் எடுத்ததே முதல் தர கிரிக்கெட்டில் முதலாவது இலக்குக்காக இருந்து வந்த சாதனையாகும். (ரி)

## தடை வருமா

INDIAN PREMIER LEAGUE



மேற்கிந்திய தீவுகள் அணி இந்தியச் சுற்றுப்பயணத்தை பாதியில் இடைநிறுத்துவதாக எடுத்துள்ள முடிவை அடுத்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை கடும் அதிர்ச்சி அடைந்துள்ளது. அத்துடன் எதிர்காலத்தில் ஐ.பி.எல் தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணி வீரர்கள் விளையாடத் தடை விதிக்கப்படலாம் எனவும் தெரிகிறது.

மேற்கிந்தியதீவுகள் அணியின் வீரர்கள் சங்கம், மேற்கிந்திய கிரிக்கெட் சபையுடன் செய்து கொண்ட சம்பள ஒப்பந்தம் மீதான சர்ச்சைகளுக்கு தீர்வு ஏற்படாததால் குறித்த தொடரில் விளையாட முடியாது என்று அந்த அணி வீரர்கள் போர்க்கொடி உயர்த்தினர். இதனால் தொடரை பாதியிலேயே முடித்துக் கொள்வதாக மேற்கிந்திய அணி நிர்வாகம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் நேற்று முன் தினம் அறிவித்தது.

இதனால் அதிர்ச்சியடைந்துள்ள பி.சி.சி.ஐ குறித்த தொடருக்குப் பதிலாக இலங்கை அணியை இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளுமாறு பி.சி.சி.ஐ. கேட்டுள்ளது. அதன் அழைப்பை இலங்கை ஏற்றுக் கொண்ட இலங்கை கிரிக்கெட் சபை 5 ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடத் தீர்மானித்துள்ளது. இந்தத் தொடர் நவம்பர் முதலாம் திகதி தொடக்கம், 15ஆம் திகதி காலப் பகுதிக்குள் நடைபெறலாம் எனத் தெரிகிறது.

மேற்கிந்திய தீவுகளின் இந்த செயற்பாடு குறித்து பி.சி.சி.ஐ. அதிகாரி ஒருவர் கூறுகையில், கிறிஸ் கெய்ல், பொலார்ட், பிராவோ போன்ற மேற்கிந்திய தீவுகள் வீரர்கள் ஐ.பி.எல். போட்டி மூலம் தான் அதிக பணம் உழைக்கின்றனர். இந்தியா மூலம் தான் அவர்கள் புகழின் உச்சத்துக்கு சென்றனர். அப்படி இருக்கையில் அவர்கள் இந்தியாவின் முதுகில் குத்திவிட்டனர். இதனால் 8ஆவது ஐ.பி.எல். தொடரில் மேற்கிந்திய தீவுகள் வீரர்கள் பங்கேற்பது குறித்து ஐ.பி.எல். நிர்வாக குழுவில் விவாதிக்கப்படும். குறைந்தபட்சம் ஒரு தொடரிலாவது அவர்களுக்கு தடை விதிக்க வேண்டும் என்று கிரிக்கெட் சபையின் உறுப்பினர்களில் சிலர் விரும்புகின்றனர் என்று அவர் தெரிவித்தார். (ரி)

# ACTIVA I இன் ஸ்கூட்டர் முக்கியத்துவமும் அதன் பயன்பாடும்

பல ஆண்டுகள் மக்களின் மனதில் நீங்காத இடம் பிடித்து பிரபல்யமான முறையில் உலகின் பல தேசங்களில் தன்னிகரற்ற படைப்புக்களைப் புத்துருவாக்கத்துடனும் நவீன தொழிநுட்பத்துடன் கூடிய வடிவமைப்புக்களுடனும் இன்றைய இளஞ் சந்ததியை இலக்காகக் கொண்டு நவநாகரிகத்துடன் வாகனங்களை உருவாக்கும் ஒரே நிறுவனம் ஹொண்டா ஆகும். ஹொண்டா நிறுவனத்தின் ஒரே நோக்கு தன் ஒரே படைப்பில் ஒரு நபரின் அனைத்து விதமான போக்குவரத்து தேவைகளும் நிறைவு செய்யப்பட வேண்டும் என்பதே ஆகும். அதனை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஹொண்டாவின் படைப்பு Activa I. அதாவது ஒரு நபரின் அன்றாட வாழ்க்கையில் நாளுக்கு நாள் போக்குவரத்து பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துகொண்டிருக்கிறான். சாதாரணமாக அரச போக்குவரத்து சாதனங்களை ஒருவர் பயன்படுத்தும்போது பலவிதமான சிக்கல், வீண் செலவு, நேர தாமதம், சோர்வு, மன அழுத்தம் போன்ற பல பிரச்சினைகளுக்கு உள்ளாகுகின்றான். இதனால் தான் தொழில் புரியும் இடத்திலும் பல அசௌகரியமான நிலைமைகளுக்கு முகம் கொடுக்கின்றான். இத்தகைய நிலைமைகளை தடுப்பதற்காகவே ஹொண்டா தனது விசேட படைப்பாகிய Activa I யை அறிமுகப்படுத்தியிருக்கின்றது. இது ஒரு நபரின் அன்றாட போக்குவரத்து பிரச்சினைகளுக்குத் தீர்வாகவும் விடிவாகவும் காணப்படுகின்றது. ஒரே ஸ்கூட்டர் வாகனத்தின் மூலம் பல பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன.

அதாவது இந்த Activa I ஸ்கூட்டர் வாகனம் சிறந்து விளங்க காரணங்களாவன, அதன் கவரும் தன்மை, பாதுகாப்பு தன்மை, சௌகரியம், நம்பகத்தன்மை, சக்திமிக்க என்ஜின் என்பவையாகும். இவ் ஸ்கூட்டர் கவரும் தன்மையாக விளங்க அதனுள் காணப்படும் விசேட அம்சங்கள் என்னவெனில்,

1. வசீகரமான முன்பக்க தோற்றம் : அகலமாய் அமைந்துள்ள மிருதுவான முகப்புத் தோற்றம் இது பாதுகாப்பைத் தரக்கூடியதாக காணப்படுகின்றது.
2. கவர்ச்சிகரமான Headlight: இதில் காணப்படும் 3 வகையான ஒளி விளக்குகளும் ஒரே நேரத்தில் சீரான முறையில் இயங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.
3. பிரமாதமான பின்புற மின்விளக்கு : இது சிறந்த பின்புற வடிவமைப்பைப் பெற்றுத்தருகிறது.

மேலும் Activa I பாதுகாப்பு தன்மையாகவும் சௌகரியமாகவும் இருக்க காரணம் ; கட்டுக்கோப்பான உயரம் மற்றும் அகலம் நிறை என்பவற்றைக் கொண்டு காணப்படுகின்றது. வாகன நெரிசலின் போது வாகனத்தை இலகுவாக கையாளக்கூடியதாகவும் காணப்படுகின்றது. மற்றும் இதில் தானாக இயங்கும் Equalizer உள்ளதால் புதிதாக பழகுபவர்களும் பாதுகாப்பைப் பெற்றுத்தரும். மேலும் இதில் 18 லீட்டர் நீரை கொள்ளக்கூடிய அளவு இடவசதி உண்டு. இதனால் Hand bag, Helmet, Lunch என்பவற்றைப் பாதுகாப்பான முறையில் வைக்கமுடியும். மற்றும் வசதியாக அமரக்கூடிய அகலமான இருக்கைகள் காணப்படுகின்றன. அத்துடன் சேற்றினால் என்ஜினுக்கும் ஓட்டுநருக்கும் அசௌகரியம் ஏற்படாத வகையில் Mud Card அமைக்கப்பட்டுள்ளது. இலகுவாக நிறுத்தக் கூடிய வசதியும் காணப்படுகின்றது.

சக்திமிக்க என்ஜின் கொண்டமைந்ததன் காரணம் ; இது ஹொண்டா எகோ தொழிநுட்பத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. 110CC என்ஜின் கொள்ளளவு, ஒரு லீட்டரில் 60KM ஓடும் என நிறுவனத்தினர் எதிர்பார்த்த போதும் இலங்கையில் Stafford இனால் நடத்தப்பட்ட பரீட்சையின் போது குறைந்தபட்சம் ஒரு லீட்டரில் 68KM வரை பயணம் செய்தது மேலும் சிலரின் வாகனம் ஒரு லீட்டரில் 75KM வரை பயணித்தது. ஆகவே இது சிறந்த பயன்பாட்டை பெற்றுத் தருகின்றது.

நம்பகத்தன்மையாக காணப்பட காரணம் ; டியுப்லஸ் டயர் இருப்பதால் வாகனம் காற்றிறக்கம் ஏற்பட்டு இடையில் நின்று விட்டால் இதன் மூலம் கொஞ்சம் தூரம் வரை பயணம் செய்யக் கூடியவாறு காணப்படுகின்றது. மற்றும் MF Battery, Airfillter கொண்டு இருக்கின்றது. 16000KM வாகனம் ஓடும் வரை Fillter மாற்ற தேவையில்லை. ஆகவே பராமரிப்புச் செலவு மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது.

அதுமட்டுமன்றி வாடிக்கையாளர்களின் அன்றாட வாழ்க்கையிலும் இந்த Activa I மிக வும் உதவிக்கரமாகக் காணப்படுகின்றது. எப்படியெனில் இது இரு தரப்பினருக்கும் பாவிக்கக்கூடிய விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது விசேடமாக பெண்களின் அன்றாட வாழ்க்கைக்கு அதிக பங்களிப்பை வழங்குகின்றது. பெண்கள் சந்தைக்கு செல்வதற்கும், பிள்ளைகளைப் பாடசாலை அழைத்துச் செல்வதற்கும், வேலைக்கு செல்வதற்கும் இந்த ஸ்கூட்டர் பெரிதும் உதவுகின்றது.

நீங்கள் ஸ்கூட்டர் ஒன்றை வாங்குவதென்றால் ஏன் Activa I யை தெரிவு செய்ய வேண்டும்? நீங்கள் Design பார்த்து தெரிவு செய்பவராக இருந்தால் Activa I சிறந்த Colour மற்றும் வடிவமைப்புக் கொண்டமைந்தது. அதுமட்டுமன்றி ஒரே Colour வடிவமைக்கப்பட்டுள்ளது. தனிநபர் தரத்தை உயர்த்திக் காட்டும். எதிர்கால தலைமுறைக்கு ஏற்ற விதத்தில் காணப்படுகின்றது. மேலும் நீங்கள் தொழிநுட்பம் பார்த்து வாங்குபவராக இருந்தால் Activa I ஆனது HET உடன் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆகவே நீங்கள் அறிவுபூர்வமாக வாகனத்தை வாங்குபவராக இருந்தால் நீங்க தெரிவு செய்யும் ஒரே ஒரு வாகனம் Activa I மாத்திரமே!

**Advertorial**

Team Honda Stunts
Powered By Stafford Motors
HONDA

அனுபவமிக்க ஹொண்டாவின் சக்தி


யாழ் மண்ணில் முதல் முறையாக மோட்டார் சைக்கிள். வீர தீர சாகஸ விளையாட்டு.
ஸ்டபர்ட் மோட்டார் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ ஸ்டன்ட் குழுவின்
டீம் ஹொண்டா ஸ்டன்ட்
வீர தீர சாகசங்கள்
தீபாவளியை முன்னிட்டு 25 ஒக்டோபர் 2014 அன்று பி.ப. 4.30 மணி முதல் யாழ் நகரசபை ஸ்டேடியத்தில் இடம்பெற இருக்கிறது.




- மேலும் ஹொண்டாவின் உத்தியோகபூர்வ ஸ்டன்ட குழுவின் வீதி ஊர்வலம் 24 ஒக்டோபர் 2014 அன்று கலை 9 மணி முதல் நடைபெறவிருக்கின்றது.
- 50 ஹொண்டா டி-ஷர்ட் இனை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு காத்திருக்கின்றது.

இலங்கையில் இறக்குமதி செய்து விநியோகிப்போர்,
வரை. ஸ்டபர்ட் மோட்டார் (தனியார்) நிறுவனம்
பிரதான காரியாலயம் : 718/7, மருதானை வீதி, கொழும்பு 10, தொ: 011-7607200 மோட்டார் சைக்கிள் காட்சியறை : 161, கொழும்பு வீதி, ரத்தனபிட்டிய. தொ: 011-7607450
மட்டக்களப்பு கிளை : இல 425, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு தொ.பே: 065-7607200
(53403)

யார் என்ன சொன்னாலும், அதிக தொகை தருவது நாங்களே!



24 கரட்டுக்கு ரூ. 42,000/-*
22 கரட்டுக்கு ரூ. 36,000/-*



ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுடனும் பெறுமதியான அன்பளிப்பு

(C/16934)

எல் பீ பினான்ஸ், தங்க நகைகளுக்கு உயர் மதிப்பு

* முன்னறிவித்தல் இல்லாமல் நகைகளை மீட்கலாம். * வாரத்தின் 7 நாட்களும் பி.ப. 6.00 வரை திறந்திருக்கும். * தங்க நகைகளுக்குப் பூரண காப்புறுதி.

C/16998

கெனிஸ்டன் 0777 716 986
சுரேஸ் குமார் 0773 384 981
மோகன்ராஜ் 0778 065 387

L B FINANCE
எல்.பீ. பினான்ஸ் பிஎல்சி.
275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.
T: 0114 521 000 | www.lbfinance.com

L B FINANCE GOLD LOANS

(C/16887)

இன்று முதல்

தீபாவளியை முன்னிட்டு
மாபெரும் அதி விசேட தள்ளுபடி
வீடு மற்றும் அலுவலக தளபாடங்கள்
40% வரையிலான விலைக்குறைப்புடன்

கண்ணாடி அலுமாரி ~~14750/=~~ 8950/=

Sofa ~~40400/=~~ 32320/=
(10 வருட உத்தரவாதம்)

மெத்தை ~~3620/=~~ 2170/=
(2 வருட உத்தரவாதம்)

கண்ணாடி சாப்பாட்டு மேசை ~~23560/=~~ 18125/=

மரக்கட்டில் ~~8250/=~~ 5900/=
பிளாஸ்டிக் கதிரை ~~900/=~~ 630/=
TV Stand ~~4280/=~~ 2990/=

230, நாவலர் றோட்
(இலுப்பையடி சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்கும் இடையில்)
(C/16713)(10.6.3) 077 35 83 879, 077 83 14 201

## தொழில்சார் கற்கை நெறிகள்

SPECIAL OF CIL: கொழும்பிலிருந்து வருகை தரும் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள் / ஒவ்வொருவரிலும் தனிப்பட்ட கவனம் / மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையில் மாணவர்களுக்கு அனுமதி

LANGUAGE COURSES
★ Spoken English ➡ சரளமாக பேச 100% உத்தரவாதம்
★ Certificate in English / Diploma in English
★ IELTS, AI, BI & B2 ➡ வெளிநாடு செல்வோருக்கான

IT COURSES
★ Dip in Computerised Accounting ★ MS Office Applications
★ Video Editing & Composite Applications
(Photoshop / Premiere with encore / After effects)

பல்கலைக்கழக மாணவர்களுக்கான கற்கை நெறிகள்
• Pythan • C Language • Java

ஆரம்பம்: 25.10.2014 (Sat 9.Am)

CIL Cambridge Institute of London
No.39/4A,3rd Lane,Power House Road,Jaffna.
Tel : 0212217774 / 0777382108 (ராசி சில்க்ஸ் அருகில்)

## German Institute

கஜேந்தினி ஆசிரியரின் Deutsch மொழிகள் தமிழ் மொழிபெயர்ப்புடன் நடைபெறுகிறது. நீங்கள் 100% சித்தியடையும் வாய்ப்புண்டு.

Mrs.P.kajenthini - 10 Palaly Road Jaffna T.P : 0771604823

## பிரத்தியேக வகுப்பு

கணினி வகுப்புகள்(கணினி ஆசிரியரால் எடுத்து வரப்படும்) மற்றும் Spoken Englishஉம் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு -0721867203

## அமெரிக்க லொத்தர் விசா - V2 Travels & Tours

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
55000 பேருக்கான வாய்ப்பு - உடனே விரையுங்கள்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்

| கிளிநொச்சி | யாழ்ப்பாணம் | நெல்லியடி | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|
| 0771516537 | 0773867257 | 0776699893 | 0776697960 |

## தேவை

கொக்குவிலில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றுக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.
* கணக்காளர் (ஆண்/பெண்)
* உணவு பரிமாறுபவர்
* உணவு தயாரிப்பாளர்
* சிற்றுண்டி தயாரிப்பாளர்
* சாரதி
* தேநீர் தயாரிப்பாளர்
* சுத்திகரிப்பாளர் (ஆண்/பெண்)
* தொழில்நுட்ப உத்தியோகத்தர் (T.O)
* மேசன், கூலி

(53197)(12.3.6) தொடர்பு: 077 735 2165

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1980 ஆம் ஆண்டு திருவாதிரை 3ஆம் பாதம் செவ்வாய் குற்றமற்ற (கிரகபாவம் 34) 6அடி உயரமுடைய யாழ்ப்பாணத்தில் நிரந்தர அரசாங்க தொழில் புரியும் பட்டதாரி மணமகனுக்கு, அழகான மணமகள் தேவை.

T.P : 078 914 7660
Jaffna2011@hotmail.com.uk

# பரந்தன் விபத்தில் இளைஞர் சாவு

வீதியோரமாக நிறுத்திவைக்கப்பட்ட லொறியை பின்பக்கமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் ஒருவர் சம்பவ இடத்திலே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் பரந்தன் சந்திக்கு அண்மையாக ஏ-9 வீதியில் நேற்று இரவு 8 மணியளவில் இடம்பெற்றது. இதில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களில் வி.யதார்த்தன் (வயது-23) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். மற்றையவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(101-55)

## ஆடு, மாடு விற்பனைக்குண்டு

பெரிய இன ஆடு, மாடுகள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.
கோண்டாவில்
T.P : 0755113457

## நல்லூரில் வீடு விற்பனைக்கு

யாழ். மாநகரசபையின் அருகிலும், நல்லூர் முருகன் ஆலயத்துக்கு சமீபமான கச்சேரி நல்லூர் வீதியில் 1¼ பரப்புடனும் குளாய் கிணறும் கொண்டுள்ள வீடு உடனடியாக விற்பனைக்கு உள்ளது.
ஆர்வமுடையவர்கள் (தரகர்கள் இன்றி) நேரடியாக தொடர்பு கொள்ளவும். (53381)(10)
தொ.பேசி: 077 2383080

## காணியும் வீடும் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை வீதியில் 6¾ பரப்புக் காணியும் விசாலமான வீடும் விற்பகைக்குண்டு. (53373)(10)
தொடர்புகளுக்கு: 077 4420666

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## FURNITURE MEGA SALE

ARPICO DAMRO Piyestra Nilkamal

வந்து பாருங்கள் வித்தியாசத்தை புரிவீர்கள்

தீபாவளி தள்ளுபடி
எங்கும் கிடைக்காத விலைக்கழிவு
7 days open
8A.M ➡ 8 P.M
~~14500/=~~ 8000/=
Glass dining Table Set ~~27000/=~~ 17500/=

தளபாட அமோக மலிவு விற்பனை நிலையம்
204, Brown Road, Jaffna.
பிறவுண் றோட், மிருகவைத்திய சாலை அருகில்
T.P: 077 491 2805, 077 006 4651, 0777 286 069

## CIMA-UK புலமைப்பரிசில்

ஐக்கிய இராச்சியபட்டயக் கணக்காளர் கற்கை நெறியான சி.ஐ.எம்.ஏ கற்கை நெறிக்கு மிக உயர்ந்த புலமைப்பரிசில் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள MCS வளாகத்தில் வழங்கப்படவுள்ளது. மேலும் இம்மாணவர்களிற்கு கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில் நுட்ப டிப்ளோமா, மைக்ரோசொப்ற் கணினிப் பொறியியலாளர், ஆங்கிலம் என்பனவும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்பிக்கப்படுகின்றது. மேலும் இப்புலமைப்பரிசில் திட்டத்தில் இணைய விரும்பும் மாணவர்கள் தமது பெயர் விரும்பும் கற்கைநெறி பிறந்ததிகதி மாவட்டம் என்பவற்றை 0772395895 என்ற இலக்கத்திற்கு உடன் sms அனுப்பவும்.

## வீடுவளவு விற்பனைக்கு

உரும்பிராய் கிழக்கில் கோப்பாய் பிரதான வீதியில் 02 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.(4 அறைகள் மண்டபம் வீட்டுடனான இரண்டு குளியல் அறைகள் றயிள்ஸ் பதித்த சமையலறை, கிணறு) கூடிய விலை கேட்பவருக்கு உடன் விற்பனை.
T.P-0776343568

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05.03.1932

மறைவு
24.10.2008

மீசாலை
### அமரர் சோமசுந்தரம் கணேசலிங்கம்
(B.A, Dip in Edu., M.A - இளைப்பாறிய கொத்தணி அதிபர்)

திதி: அபரபக்க ஏகாதசி (19.10.2014)

ஆண்டுகள் ஆறாகிப் போனாலும்
போகாதே நின் நிழலாடும் நினைவுகள்
பேசியமொழிகள் அடி மனதின் அந்தகாரமாய்
ஏகாந்த தனிமையில் சுரம் வடிக்குதே
எம் விழிநீரும் நிதம் சொரியுதே
உம் கனிவு கொண்ட நிஜங்கள்
இங்கு நிஜமற்றுப் போகவில்லை
நிஜமாகி எமையென்றும் வழிப்படுத்தும்
நாள்கள் நடந்தபடி கடந்துமிங்கு - உம் நினைவுகளை
நெஞ்சத்தில் சுமந்தபடி நாமிங்கு வாழ்ந்திடுவோம்.

குடும்பத்தினர்.
72/27, பனிக்கர் ஒழுங்கை,
திருநெல்வேலி

"சிவகிரி"
மீசாலை வடக்கு, மீசாலை.
(53262)(45.6.3)

## மரண அறிவித்தல்



### திருமதி மகாதேவி கந்தையா

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், கரணவாய் வலன் தோட்டத்தில் வசித்தவரும் தற்போது செட்டிகுறிச்சி பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாதேவி கந்தையா கடந்த (17.10.2014) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாயம்-செல்லம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற கந்தையாவின் மனைவியும் பூமாதேவி, காலஞ்சென்றவர்களான பூரணசிங்கம், பூபாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும், உதயகுமார் (உதயன்-கனடா), நந்தகுமாரி (குமாரி-ஜேர்மனி), மோகன குமார் (மோகன்-லண்டன்), பாலகுமாரி (பாலா-இலங்கை), கிருஷ்ணகுமாரி (கிருபா-லண்டன்), கமலகுமாரி (கமலா-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், இன்பி, சோதிகலா, கமலேஸ்வரன், கணேசலிங்கம் (அஞ்சல் அலுவலகம், பண்டத்தரிப்பு), தேவகுமார், சந்திரரூபன் ஆகியோரின் அன்பு மாமியும், நிந்துஷா, நித்தியா, வினோதியா, தெய்வீகன், ஜொசிக்கா, சந்தோஷ், கிருஷிகா, சிம்யா, திவ்யா, சாகித்யன், தபு, சுபா, ரொசான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜெனி, சாதுர்யன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு (செட்டிக்குறிஞ்சி-பண்டத்தரிப்பு) அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்புத்துரை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செட்டிகுறிச்சி,
பண்டத்தரிப்பு.
(53362)(10)

தகவல்: குடும்பத்தினர்
கணேசலிங்கம் பாலகுமாரி (மகள்)
தொ.இல: 0777989879

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.